# முப்பெரும் சித்தர்கள்

நா. முத்தையா



நவநாதசித்தர்

ஆத்மஜோதி நிலையம்
நாவலப்பிட்டி
[இலங்கை]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

125

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆனைக்குட்டி சுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முப்பெரும் சித்தர்கள்

நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் லிமிட்டெட்
கூட்டுறவே நாட்டுயர்வு
புத்தகத்துள் உறைவாழ்வு
பொதுநூலகம்

## நா. முத்தையா

தி. செல்வமனோகரன்
141, கேணியடி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

ஆத்மஜோதி நிலையம்,
நாவலப்பிட்டி.
[இலங்கை]

4524.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாம் பதிப்பு

2005

வெளியிட்டோர்:

ஆத்மஜோதி நிலையம்

ஏழாலை.

அச்சிட்டோர்:

ஜய்ராம் பிறின்ரேஸ்

351, மணிக்கூண்டு வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# முன்னுரை

ஈழத்தில் சாதுக்கள் பரம்பரை ஒன்று இருந்து வந்துள்ளது. அவர்களில் பலருடைய வாழ்க்கை வரலாறு இன்றும் கேள்வி ஞானத்தோடு மாத்திரம் இருக்கிறது. பல ஆலய வரலாறுகளும் அவ்வண்ணமே கோயிலைப் பரிபாலிக்கும் குடும்பத்தினரோடு மாத்திரம் நின்றுவிட்டன. இச்செய்திகளை வைத்திருப்பவர்கள் அச்சு வடிவில் தாம் கொண்டு வருவதுமில்லை. அச்சு வடிவில் கொண்டுவருபவர்களுக்குத் தம்மிடமுள்ள வற்றைக் கொடுத்து உதவி செய்வதும் இல்லை.

கடையிற் சுவாமிகளுடைய படத்தை ஒருவர் வீட்டில் வைத்துப் பூஜிக்கிறார் என்று கேள்விப்பட்டு அப்படத்தைப் போட்டோ எடுத்து ஆத்மஜோதியில் வெளிப்படுத்த வேண்டுமென்ற ஆசையினால் அவர் இல்லம் சென்றேன். அவர் வெளித்திண்ணையில் படுத்திருந்தார். என்னைப்பற்றி அறிமுகம் செய்து கொண்டபின் சுவாமிகளுடைய படத்தைத் தரிசிக்க வேண்டும். அதைப் போட்டோவும் எடுக்கவேண்டும் என்றேன். பூஜிக்கிற படத்தைப் போட்டோ எடுக்க முடியாது என்று மறுத்துவிட்டார். நான் நாவலப்பிட்டியிலிருந்து வந்துள்ளேன். படத்தையாவது தரிசித்துச் செல்ல அனுமதி தாருங்கள் என்றேன். அதற்கும் அவர் விருப்பம் தெரிவிக்க வில்லை. தமது பூஜை அறைக்குள் எல்லாரையும் சிலர் அனுமதிக்க மாட்டார்கள். அந்த நியாயத்தால் மறுக்கிறார் என்று நினைத்துக் கொண்டேன்.

பூஜை அறைக்குள் நான் செல்ல விரும்பவில்லை. படத்தை எடுத்துக் காட்டினால் மாத்திரம் போதியது. வணங்கிவிட்டுச் செல்லுகின்றேன் என்று கூறினேன். பெரியவருடைய உள்ளம் இளகியது. பேத்திப் பிள்ளையை அழைத்து சுவாமியுடைய படத்தை எடுத்து வா என்றார். இதற்குள் எனது உள்ளம் கடையிற் சுவாமிகளே உயிர் பெற்றெழுந்து வந்து காட்சி கொடுக்கப்போகிறார் என்பது போல் கற்பனை செய்து கொண்டது. குழந்தையின் கையிலிருந்த படத்தைப் பார்த்தேன். பூஜை அறையில் வைத்திருந்த படம் போலத் தெரியவில்லை. கண்ணாடி முழுவதும் ஒரே தூசிப்படலம். எனது லேஞ்சியை எடுத்து தூசியைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடைத்தேன். என்ன ஆச்சரியம் கடையிற் சுவாமிகள் அங்கு இல்லை. இந்தத் தூசிக்குள் எப்படி அவரால் இருக்க முடியும். படத்தை பூச்சி சாப்பிட்டுவிட்டது. வெறும் காகித அட்டை மாத்திரம் தான் காணப்பட்டது.

குழந்தையிடத்தில் வேறு படங்கள் பூஜை அறையில் இருக்கின்றனவோ என்று கேட்டேன். பூஜை அறையும் இல்லை வேறு படங்களும் இல்லை என்று குழந்தை பதில் அளித்தது. இப்படம் எங்கே இருந்தது என்று கேட்டேன். கோர்க்காலியில் இருந்தது என்று குழந்தை பதில் அளித்தது. பெரியவரைப் பார்த்தேன். அவர் கவலையின்றிக் குறட்டைவிட்டுத் தூங்குகிறார். அவரை எழுப்பி ஏன் அவரது நித்திரையைக் குழப்ப வேண்டும் என்ற கருணையோடு அவருக்கு நன்றி சொல்லாமலே திரும்பிவிட்டேன்.

கடையிற் சுவாமிகளுடைய வரலாறு தேடிப் பல இடங்களுக்கும் அலைந்தேன். ஒருவரைச் சந்தித்தேன். சுவாமிகளுடைய வரலாறு தேடி வந்திருக்கிறேன். யாரிடம் பெற்றுக் கொள்ளலாம் என்று கேட்டேன். தன்னைத் தவிர வேறு யாருக்கும் சுவாமிகளைப் பற்றி ஒன்றும் தெரியாது என்று முதலிலேயே கூறினார். ஏதாவது பெரிய பொக்கிஷம் வைத்திருப்பார் என்று மனதில் ஒரு மகிழ்ச்சி தோன்றியது. தராவிட்டாலும் கேட்டுப் பெறலாம் என்ற நம்பிக்கை ஏற்பட்டது.

சுவாமிகளுக்கும் உங்களுக்கும் என்ன சம்பந்தம் என்று கேட்டேன். தான் பிறந்த அன்று சுவாமிகள் சமாதி அடைந்ததாகச் சொன்னார். இவரிடமிருந்து உருப்படியாக எதனையும் அறிந்துகொள்ள முடியாது என்பதை அறிந்து கொண்டேன். ஒரு மணித்தியாலச் சம்பாஷணையில் ஒரு வசனமாவது சுவாமிகளைப்பற்றிய பேச்சு வரவில்லை.

வற்றாப்பளைக் கண்ணகையம்மன் கோயில் வரலாறு தேடி முள்ளியவளைக்குச் சென்றேன். இரண்டு மூன்று பெரியவர்கள் வரலாறு தம்மிடம் உள்ளதாகவும் நீங்கள் வீட்டிற்குக் கொண்டு சென்று வரலாறு எழுதலாம் எனவும் கூறினர். நான் புறப்படுகின்ற அன்று காலையில் வீட்டிற்கு வருமாறு கூறினர். வீட்டிற்குச் சென்றால் அவர்கள் வீட்டில் இல்லை. தாம் வாங்கி அனுப்புவதாகச் சிலர் கூறினர். ஊர் வந்தபின் பல கடிதங்களை எழுதினேன். பதிலும் இல்லை. வாங்கி அனுப்புவதாகக் கூறியவர்களும் வாங்கி அனுப்பவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சம்பவங்கள் எனது உள்ளத்தில் ஓர் உணர்ச்சியைத் தூண்டியது. எமது ஆத்மீகச் செல்வங்கள் இப்படி எத்தனையோ மறைந்து போகின்றனவே. எமது அறியாமையாலும் சோம்பலாலும் நாம் கேள்விப்படாத எத்தனையோ மறைந்துவிட்டன.

சுவாமி விபுலானந்த அடிகளாரை ஈன்றெடுத்த பூமியாகிய காரைதீவு அன்பர்கள் சித்தானைக்குட்டிச் சுவாமிகளுடைய குருபூஜைக்கு வருமாறு அழைத்தார்கள். பலமுறை செல்லும் வாய்ப்புக் கிடைத்தது. சுவாமிகளுடைய அன்பர்கள் பலர் சுவாமிகளுடைய சித்துக்களைச் சுவைபடக் கூறும் போது இப்படிப்பட்ட மகான்களுடைய வரலாறு எழுத்து வடிவில் வராவிட்டால் அடுத்த தலைமுறையில் இதனைக் கூற யார் இருக்கப் போகிறார்கள் என்று ஓர் ஏக்கம் எழுந்தது. பலரிடம் கேட்டுக் கேட்டு விஷயங்களைக் குறித்துக் கொண்டேன். சிலர் எழுத்து வடிவிலேயே தந்தனர். இன்னும் சிலர் சேகரித்தும் தந்தனர். குருநாதனின் திருவருளால் எதிர்பார்த்ததற்கு மேலாகக் குறிப்புகள் சேர்ந்தன.

குறிப்புகளைச் சேகரித்துக்கொண்டு செல்லும் போது பெரிய ஆனைக்குட்டிச் சுவாமிகளும், சித்தானைக்குட்டிச் சுவாமிகளும், நவநாத சித்தரும் ஒரே காலத்தவர் என்ற உண்மை புலனாகியது. அதுவுமன்றி மூவருக்கும் மிக நெருங்கிய தொடர்புகளும் இருந்து வந்ததை அறிய முடிந்தது. பெரியஆனைக்குட்டி சுவாமிகளும், நவநாத சித்தரும் வயதால் கூடியவர்கள். சித்தானைக்குட்டி சுவாமிகள் ஆண்டில் குறைந்தவர். ஆனால் நீண்டகாலம் வாழ்ந்தவர். ஆனபடியினால் முன்னவர்களைப் பற்றிய குறிப்புகள் குறைவாகவும் பின்னவரைப் பற்றிய குறிப்புகள் நிறைவாகவும் கிடைத்தன.

மூவருடைய வரலாறும் பின்னிப் பிணைந்து இருப்பதனாலேயே "முப்பெரும் சித்தர்கள்" என்ற பெயரை நூலுக்குச் சூட்டினோம். குறிப்புக்களைத் தொகுத்து நூல் வடிவில் எழுதி முடித்தோம். சென்ற ஆடி மாதத்திலேயே ஓரளவு நூல் உருவம் பெற்று விட்டது. சித்தானைக்குட்டிச் சுவாமிகளுடைய குரு பூஜை அழைப்பு வந்தது. கையெழுத்துப் பிரதியுடன் காரைதீவுக்குச் சென்றேன். சித்திர ஆசிரியர் திரு.க.கார்த்திகேசு அவர்களுடைய இல்லத்தில் குருபூஜையின் முதல் நாளிரவு இருபத்தைந்துக்குமதிகமான அன்பர்கள் கூடினர். அச்சபையில் கையெழுத்துப் பிரதி வாசித்து அரங்கேற்றம் பெற்றது. பல அன்பர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நூல் அச்சில் வரவேண்டுமென்று விரும்பினர். சரியாக ஒரு ஆண்டுக்குப் பின்பு சுவாமிகளுடைய குருபூஜைத் தினத்தன்று வெளி வருவதும் திருவருட்பேறென்றே கருத்திற் கொள்ளுகின்றேன்.

முப்பெருஞ் சித்தர்கள் என்ற நூலை இந்த வடிவில் கொண்டு வருவதற்காக அல்லும் பகலும் அரும்பாடுபட்டு என்னோடு ஒத்துழைத்த பெருமக்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும். அத்தகைய பெரியார்களின் பெயர்களைக் கீழே தருகின்றேன்.

1. மைலிட்டி, வீரமாணிக்கத் தேவந்துறையைச் சேர்ந்தவரும் இளைப்பாறிய சுகாதார உத்தியோகத்தருமாகிய சுப்பிரமணியம் - நாகலிங்கம் அவர்கள்.
2. காலஞ் சென்ற E.K.எதிர்மன்னசிங்க ஆசிரியர் அவர்களும் அவர் குடும்பத்தினரும்.
3. இளைப்பாறிய தலைமை ஆசிரியரும் அ.இ.சித்தானைக்குட்டி சமரச சன்மார்க்க சேவா சங்கக் காரியதரிசியுமான வ.பூபாலபிள்ளை அவர்கள்.
4. அக்கரைப்பற்று திரு.சி.சிவஞானமூர்த்தி ஆசிரியர் அவர்கள்
5. அக்கரைப்பற்று திரு.வேலுப்பிள்ளை சந்திரசேகரம் ஆசிரியர் அவர்கள்
6. கோளாவில் திரு.க.சின்னக்குட்டி அவர்கள்.
7. அக்கரைப்பற்று திரு.கு.சதாசிவம் அவர்கள்.

இவர்களுக்கு எமது அன்பும் நன்றியும் வணக்கமும் உரியதாகுக.

கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேலாக எனது ஆத்மீக சேவைக்கும் வளர்ச்சிக்கும் வழிகாட்டியாகவும் காவலராகவும் இருந்து வழிநடத்தி வருபவர்கள் உயர்திரு.க.இராமச்சந்திரன் அவர்கள். வாழ்நாள் முழுவதுமே பொருளையும் புகழையும் பதவியையும் விரும்பாது, வெளியில் தம்மைக் காட்டிக்கொள்ளாது அடக்கமாக இருந்து ஆத்மீக சேவை புரிந்து வருபவர்கள் அவர்கள். அன்னாருடைய அணிந்துரை எனக்கு ஆசியாகவும் ஊக்கம் தருவதாகவும் அமைந்துள்ளது. அப்பெரியாருக்கும் எமது மனமார்ந்த நன்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராதனை பல்கலை வளாகத்தில் தமிழ்ப் பேராசிரியராக இருக்கும் கலாநிதி உயர்திரு.சு.வித்தியானந்தன் அவர்கள் தமிழ் நாடகத் தொண்டர் மாத்திரமல்ல, சமயத் தொண்டருமாவர். இதனைப் பலர் அறியார். கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாக மத்திய மாகாணச் சைவ மகாசபைக்குத் தொடர்ந்து தலைவராக இருந்து வருவதே போதிய சான்றாகும். அத்தகைய பெரியாரும் நூலை நன்கு வாசித்து அருமையான ஆய்வுரை ஒன்று தந்தமைக்கு எமது மனமார்ந்த நன்றி உரியதாகுக.

அன்பான வாசகர்களுக்கு ஒரு வேண்டுகோள். இச்சரித்திரம் பூரணமானதல்ல. சில பகுதிகள் விடுபட்டிருக்கலாம்; இன்னுஞ் சில மாறுபட்டிருக்கலாம். அவற்றைக் குறித்து அனுப்புவீர்களாயின் பணிவுடன் ஏற்று அடுத்த பதிப்பில் சீர்செய்து வெளியிடுவதற்கு உதவியாகும் என்பதை அன்புடன் அறியத் தருகின்றோம்.

“முப்பெருஞ் சித்தர்கள்” என்ற இந்த நூலை முப்பெருஞ் சித்தர்களின் மெய்யடியார்களுடைய திருப்பாதங்களில் சமர்ப்பித்து அமைதி பெறுகின்றோம்.

**ஆத்மஜோதி நிலையம்,** **நா. முத்தையா**
**நாவலப்பிட்டி.**
**5.8.23**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

க. இராமச்சந்திரன்
"ஸ்ரீரமணமந்திரம்"
ஜயந்திபுரம், தலங்கமா. (இலங்கை)

இலங்கையில் பாரத தர்மத்தைப் பரப்பவும், தாய் நாட்டில் போல் சேய் நாட்டிலும், குருபரம்பரையை நிலைநாட்டவும், சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில் மூன்று பெரியார்கள் வடமாகாணத்தில் தோன்றினர். அவர்களுள் இருவர், கடையிற் சுவாமிகளும், (முக்தியானந்தர்) பரமகுரு சுவாமிகளும் (நிரஞ்சனானந்தர்) இந்தியாவிலிருந்து வந்தவர்கள். மூன்றாவதான மகான், குழந்தைவேற் சுவாமிகள் வேலணையிற் பிறந்தவர். கடையிற் சுவாமிகளைத் தமது தீக்ஷா குருவாகவும், பரமகுரு சுவாமிகளைத் தமது உபதேச குருவாகவும் ஏற்று அவ்விருவரும் ஆரம்பித்த அத்தியாத்ம சேவையைத் தொடர்ந்து நடாத்தியவர்; அவர்களைப் போலவே அரும்பெரும் சித்திகளைக் கையாண்டவர். இம்மூவரின் சமாதிக் கோயில்கள் முறையே நீராவியடி, மாத்தளை, கீரிமலையில் உள்ளன. அக்கால மக்கள் இவர்களைச் சிவ, முருக, விநாயக அம்சங்களில் தரிசித்து வணங்கி வழிபட்டு இஷ்டசித்திகளைப் பெற்று இன்புற்று வாழ்ந்தனர்.

மேலே குறிப்பிட்ட மூவர்களைப் போலவே வேறு மூவர் மேல் மாகாணம், மத்திய மாகாணம். கீழ் மாகாணம் ஆகிய மூன்று பகுதிகளில் அதாவது தமிழும் சைவமும் பரவியிருந்த பிரதேசங்களில் நடமாடி சாதாரண மக்களிடையே சமய உணர்ச்சியையும் பக்தியையும் வளர்ப்பதில் அளப்பருஞ் சேவை செய்துள்ளனர். இவர்கள் முந்திய மூவர்களிலும் பார்க்க காலத்தாற் சிறிது பிந்தியவர்கள். இவர்களில் இருவர் ஆனைக்குட்டிச் சுவாமியும், சித்தானைக்குட்டிச் சுவாமியும் கப்பல் மார்க்கம் தென்னிந்தியாவிலிருந்து கொழும்புக்கு வந்தவர்கள். மூன்றாவது பெரியாரான நவநாத சித்தர் அவரது சகாக்கள். இருவர் வந்த கப்பலில் கூடிவரப் பிரயாணச்சீட்டுக் கிடையாமையால் தாம் பெற்றிருந்த சித்தியைக் கையாண்டு ககன மார்க்கம் கொழும்பு வந்து துறைமுகத்தில் அவர்களை வரவேற்கும் பாக்கியம் பெற்றவர். முந்திய மூவர்களிடையே மிளிர்ந்த ஒருமைப்பாட்டைப் பிந்திய மூவர்களிடமுங் காண்கின்றோம். சித்தானைக்குட்டிச் சுவாமியார் ஆனைக்குட்டிச் சுவாமியாரை உபதேச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருவாகவும் நவநாதசித்தரை தீக்ஷா குருவாகவும் பேணிப்பணிந்ததாக அறிகின்றோம். இவர்களின் சமாதிக் கோயில்களை கொழும்பு முகத் துவாரத்திலும், நாவலப்பிட்டியை அடுத்த குயீன்ஸ்பரித் தோட்டத்திலும், மட்டக்களப்பைச் சேர்ந்த காரைதீவிலுங் காணலாம்.

இரு குழுவினரையும் நவநாத சித்தர்களாகப் பேணுதல் தவறாகாது. பரநாதம், அபரநாதம், பராத்பரநாதம் எனும் மூன்று நாதங்களிலும் லயித்திருப்பவர்கள் நவநாத சித்தர்கள். தேவலோகத்தில் முருகப் பெருமானை வழுத்தும் அடியார்களை அழகாக வரிசைப் படுத்தியுள்ளார் அருணகிரிநாதர். அவர் அருளிய மயில் வகுப்பில் வரும் கீழ்க்கண்ட அடிகள்:-

**"பூதரொடு கந்தருவர் நாதரொடு கிம்புருடர்**
**பூரண கணங்களொடு வந்து தொழவே"**

முதலில் பூதகணத்தவரும், எல்லாருக்கும் பின்னால் பதினெண் தேவகணத்தினரும் நின்று தொழ, சரி நடுவில் நாதசித்தர்களும் அவர்கட்கு முன்னிலும் பின்னிலும் யாழ்வல்ல கந்தருவரும் கிம்புருடர் எனும் தேவசாதியினரும் வரிசையாக நின்று வழிபடுகின்றனராம். எனவே, இந்தப் பெருங்கூட்டத்தில் நடுநாயகமாக நின்று முருகனைப் போற்றும் பெருமை நாதசித்தர்களைச் சார்ந்ததாகும்.

மேலே விபரித்தபடி தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்து இங்கேயே மகா சமாதியுற்ற ஞான சித்தர்கள் ஐவரும் சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில், தமிழ் நாட்டில் கிராமங் கிராமமாகச் சென்று மக்களின் உள்ளத்தில் சமய உணர்ச்சியைப் பரவச் செய்த ஸ்ரீ நரசிம்ம பாரதியார் அவர்களின் திருக்கண் தீட்சைக்குப் பாத்திரமானவர்களென யூகித்தல் முறையாகும். மைசூர் சிருங்கேரி மடத்தின் சங்கராச்சாரிய பீடத்தில் முப்பத்திரண்டாவது தலைவராக வீற்றிருந்து அறுபத்தீராண்டு அருட்செங்கோலோச்சிய இந்த மகான் ஓர் ஈடும் இணையுமற்ற அற்புத ஞானசித்தர். சிருங்கேரியில் அமைந்துள்ள அவரது சமாதிக் கோயிலில் இரு நிமிஷம் கண்மூடித் தியானித்தால் போதுமானது. அவரது உன்னத மகிமையை உணர்ந்து கொள்வதற்கு, எண்ணில் கணக்கற்ற யோகிகளை யும், ஞானிகளையும், சித்தர்களையும், சீவன்முத்தர்களையும் சிருஷ்டிக்க வல்ல அபாரசக்தியுடன் வாழ்ந்தவர் அவர். தமது இறுதிக் காலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னிரண்டு ஆண்டுகளை இராமநாதபுர மாவட்டத்திலுள்ள சிற்றூர்களில் சத்சங்க மகாநாடுகளை நடத்துவதில் கழித்துள்ளார். அப்பொழுது தக்க சீடர்களைத் தெரிந்தெடுத்து வெவ்வேறு ஊர்களுக்குச் சமயப்பணி செய்ய அனுப்பியுமுள்ளார். எனவே, இவரை இலங்கைக்கு அனுப்பியதில் வியப்பொன்றுமில்லை. கடையிற்சுவாமிகளின் யாழ்ப்பாண விஜயத்திற்குத் துணைக்காரணமாயிருந்தவர் வண்ணார்பண்ணை வைரமுத்துச் செட்டியாரெனில், நவநாத சித்தரின் மலைநாட்டு விஜயத்திற்குக் கருவியாக இருந்தவர், குயின்ஸ்பரித் தோட்டப் பெரிய கங்காணியாரின் மனைவியாரான பெருமாள் அம்மையார். இவ்விரு புண்ணிய ஆத்மாக்களின் ஆன்மீகப் பணிக்கு இலங்கை வாழ் தமிழ் இனத்தார் நீடூழிகாலம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளனர்.

ஞானசித்தர்கள், சீவன்முத்தர்கள், பரமபக்தர்கள் தங்கள் வாழ்க்கையின் இலௌகிகபாகத்தை எவர்க்குஞ் சொல்வதில்லை. வெற்றி-தோல்வி, விருப்பு-வெறுப்பு, இன்பம்-துன்பம், இகழ்ச்சி-புகழ்ச்சி முதலாய இரட்டைகளைத் தாண்டிய இந்த மகான்களுக்கு அந்தப் பாகம் எவ்வித மகிழ்ச்சியையோ கொடுப்பதில்லை; அதைப்பற்றி எவராவது விசாரிப்பதையோ எழுதுவதையோகூட அவர்கள் விரும்புவதில்லை. ஏனெனில், அவர்கள் தமது ஆன்மீகவாழ்வின் ஆரம்பத்தில் செய்த தவசாதனைகளெல்லாம் அவற்றை முற்றிலும் மறப்பதற்காகவன்றோ? ஆகையால் மெய்யடியார்களின் வரலாறுகளை வரைய முன்வருவோர்களுக்கு முதலில் அப்பெரியார்களின் இளமைக்கால நிகழ்ச்சிகளை விசாரித்தறிவதில் பெருங்கஷ்டம் ஏற்படுகின்றது.

இக்காரணத்தால், **'முப்பெருஞ் சித்தர்'** என்ற இந்நூலில், ஆனைக்குட்டிச் சுவாமிகளினதும், நவநாத சித்தரினதும் வரலாறுகள் சுருக்கமாய்த் தரப்பட்டுள்ளன. அவர்களோடு நெருங்கிப் பழகிய, அவர்களின் ஆசியைப் பெற்ற அடியார் கூட்டத்தில் இன்று உடல் கொண்டு உலாவுபவர்கள் மிகச் சிலரே. சித்தானைக்குட்டிச் சுவாமிகளோ காலத்தாற் பிந்தியவர்; நீடித்த ஆயுள் பெற்றவர். அவர் மகா சமாதியடைந்தது இற்றைக்குச் சரியாக இருபத்திரண்டு ஆண்டுகட்கு முன்னரேயாம். அந்த வைபவத்தில் கலந்து கொண்ட அடியார்கள் கூட இன்னும் உடல் கொண்டு உலாவுகின்றனர். எனவே அவர் வரலாறும் அவர் செய்த அளவற்ற சித்திகளும் விபரமாக விளக்கப்படுவதற்கு வேண்டிய அனுசரணைகள், அத்தாட்சிப்பத்திரங்கள் போதிய அளவு நூலாசிரியருக்குக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைத்துள்ளன. அது மாத்திரமன்றி, அவரின் ஆர்வத்தைத் தூண்டி ஊக்கமும் உற்சாகமும் அளிக்க குறித்த மகானின் அனுக்கிரகமும் அற்புத முறையில் கிடைத்துள்ள தெனத் தயங்காமற் கூறலாம். நூலைப் படித்துக் கொண்டு போக இந்த உண்மையை நன்குணரும் வாய்ப்பு வாசகர்கட்குக் கிடைக்கும். உதாரணமாக நூலின் 55ம் பக்கத்தில் "இராமாசி அம்மையார்" என்ற தலைப்பின் கீழ் வரும் அரிய விளக்கத்தைக் கவனிக்குக. அந்த அம்மையார் ஓர் அரிய பக்தை. சித்தானைக்குட்டிச் சுவாமிகளின் திருவிளையாடல்களை நேரில் பார்த்தவர். அத்தோடு, அவர் மகிமையை உலகம் அறிய வேண்டுமென்று தவங்கிடந்தவர். அவரையும் ஒரு கருவியாகக் கொண்டே சுவாமிகள் நூலாசிரியருக்கு அளவற்ற ஆர்வத்தையும் ஆற்றலையும் அருளியுள்ளாரெனலாம். இவை எல்லாம் எப்படி அமைந்தபோதிலும், நூலாசிரியரின் அயரா முயற்சியை பாராட்டாமல் மேற்செல்ல முடியாது. அத்தோடு அவரின் பக்தியின் சிறப்பையும் இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். 85ம் பக்கத்தில் ஸ்ரீ ரமணமகரிஷிகள், ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸ தேவர், தூய அன்னை சாரதாமணி தேவியார் ஆகிய மூவரும் காட்டிய கருணையை விளக்கும் பாகத்தை நூலாசிரியர் முடிக்கும் போது, "நல்ல சீடனால் நன்மையடைந்த குருமாருமுண்டு. நல்ல சீடனுக்கு உதாரண புருஷனாகவும், நல்ல குருவுக்கு உதாரண புருஷனாகவும் விளங்கியவர் நமது சித்தானைக்குட்டிச் சுவாமிகளாவர்" என்கிறார். ஆசிரியரின் பக்தியின் சிறப்பை நமக்கு நினைவூட்டுவதற்கு இந்த வசனம் ஒன்றே போதும்.

நாம் ஒருவரின் குணாதிசயங்களை நன்கு அறிந்திருந்தாலோ அல்லது அவருடன் சமயத் தொண்டிலும் சமூக சேவையிலும் நெருங்கிய அத்யாத்ம தொடர்பு பூண்டிருந்தாலோ, அவரைப் பற்றிப் பாராட்டிப் பேசுவதோ எழுதுவதோ கஷ்டமான விஷயம். திருவாளர் முத்தையா அவர்களுடன் சென்ற முப்பது ஆண்டுகளாக அருமையான ஆன்மீகத் தொடர்புடன் வாழ்ந்தவனாகையால் எனக்கு இந்தக் கஷ்டம் பெரிதுமுண்டு. எனது சமயத் தொண்டை உலகறியச் செய்ய, எனது நூல்களைப் பாடல்களை அச்சேற்றிப் பரப்புவதற்கு, தெய்வத் திருவருளும் நான் போற்றி வழிபட்ட மகாத்மாக்களின் ஆசியும், அவரை எனக்கு ஓர் அருந்துணையாகச் சேர்த்துள்ளதென்ற நம்பிக்கையுடன் வாழ்பவன் யான். இந்த நிலையில். நூலாசிரியரின் பெருமை குறித்து அதிகம் வரைய விரும்பவில்லை. இந்த நூல் தரும் கருத்துக்களே அதனை விளக்கும் தரத்தனவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் பிறப்பில் நமக்கு மெய்யடியார்களின் உறவும் ஆசியும் கிடைப்பது நாம் பூர்வஜென்மங்களில் செய்துள்ள புண்ணியத்தின் பயனாகவேயாம். இது பண்டுபோல் இன்றும் மறுக்க முடியாத உண்மையாகும். அப்பெரியார்களின் மகிமையைக் கேட்பதும் படிப்பதும் புண்ணியம்.அதிலும் பார்க்கப் பெரிய புண்ணியம் அவர்களின் வரலாறுகளை இனிவரும் சந்ததியாருக்குப் பயன்படும் முறையில் எழுதி வைப்பதாகும். இப்பெரும் புண்ணியம் இந்த நூலாசிரியருக்கு அருமையாகப் பொருந்திய ஒன்று. ஊர் ஊராய்ச் சென்று, அடியார்களை நேரில் சந்தித்து அவர்களிடம் பெற்ற விபரங்களைக் குறித்துத் தொகுத்து நூல் வடிவில் தருவதென்றால் எளிதான கருமமல்ல. இதில் அன்பர் முத்தையா அவர்கள் ஒரு பெரும் பாக்கியசாலி. ஆன்மீகத் துறையில் அவர் அயராது உழைக்கும் போது அவரது உலக விஷயங்களை, முக்கியமாகப் பொருளாதாரத்தைக் கவனிப்பதற்கு அவருக்கு ஓர் அருமைத் தம்பியார் வலக்கரம் போல் அமைந்துள்ளார். அன்னாரின் பெயருமே அருமைநாயகம். இந்த அருந்துணைவரில்லா விட்டால் இந்த நூல் இவ்வளவு சீக்கிரத்தில் அச்சு வாகனம் ஏறி ஊர்வலம் செய்யும் பேறு கிடைத்திராது. இந்த நூல், 1965-ம் ஆண்டில் பண்டிதர் மு.கந்தையா (B.A) அவர்களால் வரையப்பட்ட "குழந்தைவேற் சுவாமிகளும், குரு பரம்பரையும்" என்ற அரிய நூலுடன் தொடர்புடைத்து. இதனைப் படிப்போரை அந்த நூலையும் பெற்று வாசிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**"அடியார் அடியார் அடியார்க் கடிமைக்**
**கடியனாய் நல்கிட் டடிமையும் பூண்டேன்**
**அடியார் அருளால் அவனடி கூட**
**அடியா னிவனென் றடிமை கொண்டானே!"**

என்னும் திருமூலரின் அரிய மந்திரத்தை இலட்சியமாய்க் கொண்டு, தன்னலம் நீத்துப் பிறர் பொன்னலம் பேணு முறையில், வாழ்வு நடாத்தும் அன்பர் முத்தையா அவர்கட்குப் பூரண ஆரோக்கியமும் ஆயுளும் அளித்து, இது போன்ற அரிய நூல்களை மேலும் மேலும் வரைய ஊக்கமும் சக்தியும் அருளுமாறு கருணைக் கடலாம் கதிர்காம மூர்த்தியை வேண்டுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆய்வுரை

பேராசிரியர்

**கலாநிதி சு. வித்தியானந்தன்**

தமிழ்த்துறைத் தலைவர்

இலங்கைப் பல்கலைக்கழகப் பேராதனை வளாகம்.

திருமூலர் தொடங்கிக் குதம்பைச் சித்தர் கோரக்கர் வரை தமிழ் நாட்டிற் சித்தர் பதினெண்மர் இருந்தனரெனப் பொதுப்படக் கூறுவர். இவர்களுக்குப் பிற்காலத்திலும் இவர்கள் வழியைப் பின்பற்றிய சித்தர்கள் பலர் தமிழகத்திலே தோன்றியிருக்கின்றனர். அத்தகைய சித்தர்களில் நால்வர் ஈழத்திற்கு வந்து சித்துக்கள் நடத்தி, ஈழத்தின் வடக்கே யாழ்ப்பாணத்தில் நீராவியடியிலும், தெற்கே நாவலப்பிட்டி குயீன்ஸ்பரியிலும் மேற்கே கொழும்பு முகத்துவாரத்திலும், கிழக்கே காரைதீவிலும் சமாதி நிலை எய்தினர். அவர்களே, முறையே கடையிற் சுவாமிகள், நவநாதசித்தர், பெரிய ஆனைக்குட்டி சுவாமிகள், சித்தானைக்குட்டி சுவாமிகள் ஆவோர். அந்நால்வருட் கடைசி மூவரைப் பற்றியதே ஆத்மஜோதி முத்தையா அவர்கள் எழுதிய முப்பெரும் சித்தர்கள் எனப் பெயரிய நூல்.

'சித்' என்பது அறிவது. சித்தை உடையவர்கள் சித்தர்கள் எனவே, அறிவு படைத்தவர்கள் சித்தர்கள்; அவர்கள் அறிஞர்கள், மேதைகள், நுண்ணறிவு படைத்தவர்கள். மெய்ஞ்ஞானிகள்.

சித்தர்கள் சாதாரண மக்களாற் செய்ய முடியாத பல அரிய செயல்களைச் செய்வார்கள். அவற்றை அற்புதங்களெனப் பொதுமக்கள் போற்றுவர். நாம் எவற்றையெல்லாம் அற்புத காரியங்களெனக் கொள்கிறோமோ, அவற்றைச் செய்யும் ஆற்றல் சித்தர்களுக்குண்டு. இதனாலேயே சித்தர்கள் இயற்கைக்கு மாறான பல அற்புதங்களைச் செய்தனரெனக் கதைகள் வழங்குகின்றன.

சித்தர்கள் இறவா நிலையை உடையவர்கள். அழியாத உடலைப் பெற்றவர்கள். உடம்பை அழியவிடாது பாதுகாக்கும் ஆற்றலுடையவர்; தம்முடைய உடம்பை வைத்துவிட்டு மற்றொரு உடம்பிலே புகுந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடமாடும் வழி அறிந்தவர். அவர்களுக்கு ஆகாய வழியாகச் செல்லும் சக்தி உண்டு. மூன்று காலம் பற்றியும் அறியும் ஞானம் உண்டு பலவித அற்புதங்களைச் செய்யும் ஆற்றலுண்டு.

முத்தையா அவர்கள் நூலும் 'முப்பெரும் சித்தர்கள்' என்ற நூலிற் சித்தர்களின் இயல்பு பற்றி மேலே கூறப்பட்டவை அமைந்திருப்பதைக் காணலாம். மேலும் சித்தர்கள் எட்டுவகைச் சித்திகள் (அட்டமா சித்திகள்) பெற்றிருப்பார்கள் எனப் புராணங்கள் கூறும். அணுவிலும் மிகச் சிறிய உருவிலே உலவும் ஆற்றல், மலையிலும் பெரிய உருப்பெற்று நிற்கும் ஆற்றல், உடம்பை இலேசாகச் செய்து நீரிலும் சேற்றிலும் அழுந்தாமற் காற்றுப் போல விரைந்து செல்லும் ஆற்றல், தான் எதை விரும்பினும் எதை நினைப்பினும் அவற்றை அடையும் ஆற்றல், தன் நினைப்பின் வல்லமையால் எல்லாவற்றையும் படைக்கும் சக்தி, எல்லாரும் தன்னை வணங்கும்படியான தெய்வ ஆற்றல், உலகம் முழுவதையும் தன் வசப்படுத்தி நடத்தும் ஆற்றல், ஐம்புலன்கள் நுகரும் இன்ப துன்பங்களைப் பற்றிக் கவலைப்படாது அவற்றுடன் தொடர்பு கொள்ளாமல் இருத்தல் என்பவையே எண்வகைச் சித்திகள். இச்சித்திகள் மூன்று சித்தர்களிடமும் காணப்பட்டமைக்குப் பல எடுத்துக்காட்டுகள் நூலில் தரப்பட்டுள்ளன.

கொல்லிமலையிற் பல காலம் தவமிருந்த நவநாவத சித்தர், நாவலப்பிட்டி குயீன்ஸ்பரித் தோட்டத்துப் பெரிய கங்காணி நாகனின் மனைவியைத் தமது அடியாராய்ப் பெற்றவர். குயீன்ஸ்பரியிற் சுப்பிரமணிய சுவாமி கோயிலைக் கட்டிக் கும்பாபிஷேகத்திற்கு முதனாள் நவநாத சித்தருக்குக் கடிதம் எழுதி (அந்தக் காலத்திற் கடிதங்கள் செல்லப் பல நாட்கள் ஆயின) த் தபாற்கட்டிற் சேர்க்க, சுவாமிகள் அடுத்த நாள் அதிகாலையிலேயே அங்கு வந்தடைந்த அற்புதம் கூறப்படுகிறது.

தோட்டத்துத் தொழிலாளரிடையே சுவாமிகள் சாதித்த சித்துக்கள் சில விவரிக்கப்பட்டுள்ளன. சுவாமியை அவமதித்த மூவர் மயங்கி வீழ்ந்து பின்பு சுவாமி இழுத்து ஊதிய சிகரெற் புகையினால் மயக்கம் தெளிவித்தல், பெருமாள் அம்மையார் சிதம்பரம் சென்று அங்கிருந்து சுவாமிகளை நினைந்து தியானிக்கச் சுவாமிகளின் உருத்திராக்க மாலை அவர் கைகளில் வந்து விழுதல். கொல்லிமலைச் சித்தர்களைப் பார்க்க விரும்பிய குருசாமி என்பவரைத் தம் சித்தியால் கொல்லி மலையில் இருப்பதாகச் செய்தல், ஆழ வெட்டியும் நீரில்லாமல் இருந்த கிணற்றில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர் ஊறிவரச் செய்தல் போன்றவை அச்சித்துக்களுட் சில. நவநாத சித்தர் குயீன்ஸ்பரித் தோட்டத்திலே சமாதிநிலை எய்தினர்.

இரண்டாவதாகக் கூறப்படும் பெரியானைக் குட்டிச் சித்தர் சிறுவயதிற் கண்டியிற் சலவைத் தொழிலாளி ஒருவரின் குடும்பத்தில் வாழ்ந்தார். தம்மை வளர்த்த தாய் தந்தையரோடு ஏற்பட்ட மனக்கசப்பாற் கண்டி கதிரேசன் கோயிற் படிக்கட்டில் வாழ்ந்து வந்தார். அவரைப் பலரும் பைத்தியக்காரன் என இகழ்ந்து வந்தனர். சுவாமிகள் மற்றவர்களுக்குத் தம்மைக் காட்டிக் கொள்ளாது, கடை வீதியிற் போடப்பட்ட எச்சில் இலைகளைப் பொறுக்கி, எச்சில் உணவைச் சாப்பிட்டு, பக்குவநிலை அடைந்து, இந்தியாவிற்குச் சென்று தாம் செல்ல முடியாத புகை வண்டிகளை நிறுத்தியும் பின்பு இயங்கச் செய்தும், ஊமைக்குக் கன்னத்தில் அடித்துப் பேசச் செய்தும், வேறு பல சித்துக்கள் செய்தும் புகழடைந்தார்.

பின்பு பெரியானைக்குட்டி அவர்கள் கொழும்புக்கு வந்து, கப்பித்தான் கோயிலில் வாழ்ந்து வந்த ஈனமுத்து என்பவருடன் பல காலம் தங்கிப் பல அற்புதங்களைச் செய்தார். ஈனமுத்து றிக்சோ இழுக்கும் கூட்டத்தார் தலைவன். சாராயம் நிரம்பக் குடிப்பவர். அவருடன்தான் சுவாமிகள் தங்கினார் என்றால் அது ஜீவன் முக்தர்களின் விருப்பு வெறுப்பற்ற நிலையையும் யார் எதை உவந்து கொடுத்தாலும் மறுக்காது வாங்கி உண்ணும் பண்பையும் காட்டுகின்றது. கோயிலுக்கு வந்து சென்ற பிச்சைக்காரக் கும்பலோடு கும்பலாகத் தமது சீடன் சித்தானைக்குட்டியுடன் சுற்றித் திரிந்து பல அற்புதங்கள் செய்த சுவாமிகள் கொழும்பு முகத்துவாரக் கடற்கரையிற் சமாதி அடைந்தார்.

இந்நூலில் அடுத்ததாகக் கூறப்படுபவர் கிழக்கிலங்கையிற் காரைதீவிற் சமாதியடைந்த சித்தானைக்குட்டிச் சுவாமிகள். இவரை 1949ம் ஆண்டு தரிசிக்கும் பேறு நூலாசிரியருக்குக் கிடைத்தது. இதனாலேயோ என்னவோ இந்தச் சித்தரைப் பற்றியே நூலில் மூன்றில் இரண்டு பகுதியில் விரிவாகக் கூறிச் செல்கின்றார்.

சித்தானைக்குட்டியின் குருநாதர் பெரியானைக்குட்டி அவர்களே. சித்தானைக்குட்டி பல சோதனைக்குள்ளாவாரென்றும், தம்மிலும் பெரியவனாய் இருப்பாரென்றும் தீர்க்கதரிசனமாய்ச் சித்தானைக் குட்டியிடம் கூறினார். இதனைச் சித்தானைக்குட்டியின் வாழ்க்கையில் இருந்து பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக்காட்டுக்கள் மூலம் நூலாசிரியர் விளக்குகின்றார். திசை மகாரகமவிற் கந்தையா ஓவசியர் மனைவி சேதாம்மா தமது கணவரின் விருப்பத்திற்கு மாறாகச் சுவாமிகளை உபசரித்து, கணவனின் ஐயுறவைப் பொறுக்க முடியாது தமது ஊராகிய கிழக்கிலங்கைக் காரைதீவிற்குச் சென்று, சுவாமியுடன் குடியிருந்து தொண்டு செய்து, பலரின் வம்புப் பேச்சுக்குட்பட்டுக் காரைதீவில் சமாதி நிலையடைந்தார். இவ்வசை மொழிகளைச் சுவாமிகள் தமக்குச் சொந்தமில்லை என ஒதுக்கி வாழ்ந்தார்.

சித்தானைக்குட்டி சுவாமிகள் காரைதீவிற் பல சாதனைகள் நிலைநாட்டினார். கண் நோயை உமிழ் நீரைக் கொப்புளித்து நீக்கினார்; அறியப்படாத கடவுளை அறிவுறுத்தினார்; மண்டைமீது தாமே வேப்பங் கட்டையால் அடித்து ஏற்படுத்திய காயத்தைப் பின்பு வெற்றிலைத் தாம்பூலத்தால் காயச் செய்தார்; மக்கள் மழையின்றி வருந்திய போது மழையை வெள்ளமாகப் பெய்யச் செய்தார்; பிள்ளைகள் இல்லாதவர் களுக்குப் பிள்ளைப் பேறு அளித்தார்; திருமணங்களை ஒழுங்கு செய்தார்.

காரைதீவு மட்டுமின்றி சித்தானைக்குட்டிகள் கிழக்கு மாகாணத்தின் ஏனைய கிராமங்களுக்கும் சென்று அவற்றைப் புனிதப்படுத்தினார். பனங்காடு, கோளாவில், கன்னங்குடா, அமிர்தகளி, தீவுமுனை, ஏறாவூர், கல்முனை, அக்கரைப்பற்று முதலிய இடங்களிற் சுவாமிகள் செய்த அற்புதங்கள் பல. தீப்பிடித்த கதிர்காமத் திரையை கல்முனைச் சந்தியில் நின்ற கசக்கி அணைத்தமை, கதிர்காமக் காட்டில் வழிதப்பியவர்களுக்கு வழி காட்டியமை, மீன்கறியைக் கத்தரிக்காய்க் கறியாய் மாற்றியமை, மரவள்ளிக் கிழங்குக்கறி ஒரு கிழமைக்குச் சூடு ஆறாமல் இருந்தமை, ஒரே பெண் இரு இடத்தில் ஒரே நேரத்தில் சின்னமேளம் ஆடியமை, உடைந்த சாராயப் பீப்பா அடைபட்டமை, மன்னார்க் கடலில் அகப்பட்டவர் களை மீட்டமை, மாட்டிறைச்சி மல்லிகைப் பூ ஆனமை, திமிர்வாதக்காரனை நிமிர்ந்து நடக்கச் செய்தமை போன்ற பல அதிசயங்களைச் செய்த சுவாமிகள் 1951ம் ஆண்டிற் சமாதிநிலை எய்தினார்.

சுவாமிகளின் வரலாற்றிலிருந்து அவருடைய உண்மை நிலையைப் பலர் உணரவில்லையென அறிய முடிகின்றது. அவர் தமது கோலங் களையும் செயல்களையும் அடிக்கடி மாற்றி உலாவினர். சிலசமயம் மௌனமாய் இருந்தனர்; யோக நித்திரையிலும் ஆழ்ந்திருந்தனர். இருந்தாற்போலச் சுடலையிலே தனியாக உலாவினர். யோக நித்திரையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும் காலங்களில் வேறு ஊரில் உலாவியதாகச் செய்திகள் வந்தன. இவற்றைச் சாதாரண மக்களும் புரிந்து கொள்ளவில்லையெனத் தெரிகின்றது. யோகர் சுவாமிகளின் குருவாகிய செல்லப்பாச் சுவாமிகளை விசர்ச் செல்லப்பா என்று அழைத்தமையும் இதனாலேயே.

இவ்வாறு நூலாசிரியர் மூன்று சித்தர்களின் வரலாறு மூலம் சித்தர்களின் மகிமையையும் ஆற்றலையும் பல எடுத்துக்காட்டுக்கள் மூலம் விளக்கியுள்ளார். பரமசிவன் வலியவந்து மாணிக்கவாசகரை ஆட்கொண்டது போலச் சித்தர்கள் தமது அடியார்களைத் தேடிச் சென்று ஆட்கொள்வர் என இந்நூல் மூலம் அறிய முடிகின்றது.

சமூகத் தொண்டனாகவும் சமயத் தொண்டனாகவும் கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாக அமைதியாய்ச் சேவை செய்து வரும் ஆத்மஜோதி நா. முத்தையா அவர்கள் "முப்பெரும் சித்தர்கள்" எனும் நூல் மூலம் ஈழத்திலே சித்துக்கள் செய்த மூவரின் வரலாற்றையும் தத்துவங்களையும் தமக்கேயுரிய நடையிற் சிறப்புற அமைத்துத் தந்திருக்கின்றார். மக்கள் நன்னெறியில் நடக்கவும், அறிவு எனும் கருவியினால் முன்னேறி ஒழுகவும், எல்லோரும் இன்புற்றிருக்கவும் இந்நூல் வழிகாட்டுவதாக. திரு.முத்தையா அவர்களின் முயற்சியை அன்பர்கள் நன்கு வரவேற்று, அவர் மேலும் இத்தகைய தொண்டுகள் செய்ய ஊக்கமளிப்பார்களாக.

நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவு
கூட்டுறவே நாட்டுயர்வு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| விடயம் | | பக்கம் |
|---|---|---|
| 01. | பாரதமும் ஈழமும் | 01 |
| 02. | சித்தானைக்குட்டியின் பூர்வாச்சிரமம் | 05 |
| 03. | மூவர் சந்திப்பு | 06 |
| 04. | நவநாதசித்தர் | 08 |
| 05. | கொல்லிமலைச் சிறப்பு | 08 |
| 06. | நவநாதசித்தரும் குயின்ஸ்பரித் தொடர்பும் | 10 |
| 07. | நவநாதசித்தர் குயீன்ஸ்பரி வருகை | 11 |
| 08. | நவநாதசித்தரின் சித்துக்கள் | 12 |
| 09. | பெரியானைக்குட்டி சுவாமிகள் | 16 |
| 10. | கண்டியில் பெரியானைக்குட்டி சுவாமிகள் | 16 |
| 11. | இந்தியாவில் சித்துக்கள் | 19 |
| 12. | ஊமை பேசினான் | 20 |
| 13. | கொழும்பு மாநகரில் ஆனைக்குட்டிசுவாமிகள் | 21 |
| 14. | ஈனமுத்துவுக்குச் சோதனை | 22 |
| 15. | மூவர் சந்திப்பு | 25 |
| 16. | குருடர் வேத நூலை வாசித்தார் | 26 |
| 17. | ஆனைக்குட்டி சுவாமிகள் சமாதி | 28 |
| 18. | சித்தானைக்குட்டி சுவாமிகள் | 30 |
| 19. | சித்தானைப் பெயர் தரும் கருத்து | 31 |
| 20 | குயீன்ஸ்பரியில் சித்தானை சுவாமிகள் | 33 |
| 21. | குருதேவரின் தீர்க்க தரிசனம் | 35 |
| 22. | செல்வக்கதிர்காமத்தில் அனுபவம் | 37 |
| 23. | சேதம்மாவின் சந்திப்பு | 37 |
| 24. | கதிர்காமத்தில் பெற்ற காட்சி | 40 |
| 25. | ஔவசியருக்குச் சோதனைக் காலம் | 42 |
| 26. | சேதம்மா சித்தானைக்கு அடிமையாதல் | 43 |
| 27. | ஔவசியரின் முடிவு | 45 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28. கண்ணோய் மாற்றிய கருணை 46
29. இறைச்சிக்கறி குப்பைக்கீரை ஆனது 48
30. குருநாதருக்கு அபிஷேகம் 49
31. அறியப்படாத கடவுளை அறிவித்த வகை 49
32. அனுராதபுரத்தில் சித்து விளையாட்டு 51
33. சுவாமிக்கு இலக்கணம் 53
34. நாய்க்குட்டியிடம் பேரன்பு 54
35. இராமாசி அம்மையார் 55
36. நந்தனார் வீட்டில் சாப்பிடும் பாக்கியம் எல்லார்க்கும் கிடைக்குமா? 56
37. குழந்தை கர்ப்பந்தரிக்கு முன்பே குழந்தைக்குப் பெயரிட்ட சுவாமிகள் 58
38. மௌனானந்த சுவாமிகள் 59
39. மிளகாய்ச்சாமியார் 62
40. சுவாமி விபுலானந்தர் 64
41. பனங்காட்டில் சுவாமிகள் 66
42. கோளாவிலில் சுவாமிகள் 69
43. கன்னங்குடாவில் நடைபெற்ற பேரதிசயம் 73
44. ஒரு சதம் பணத்தைப் பெற்றுக்கொள்ள ஆறுமாத காலமா? 74
45. தீப்பிடித்த கதிர்காமத் திரையைக் கல்முனைச் சந்தியில் நின்று கசக்கி அணைத்த புதுமை 77
46. கதிர்காமக் காட்டில் வழிதப்பியவர்களுக்கு வழிகாட்டிய குருநாதர் 77
47. அமிர்தகளியில் அமர்க்களம் 78
48. மீன்கறி கத்தரிக்காய்க் கறியாக மாறியது 79
49. பெண் பிடிக்கும் சாமி பிள்ளைப்பேறு 80
50. மரவள்ளிக் கிழங்குக்கறி ஒருவார காலத்திற்குச் சூடு ஆறாமல் இருந்த அதிசயம் 81




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

51. ஒரு பெண் ஒரே நேரத்தில் இரு இடங்களில் சின்னமேளம் ஆடிய அதிசயம் 82

52. கள் இல்லை என்று சொன்னவருக்கு குடத்தில் கள் இல்லாமல் போனது 82

53. மாண்ட சுவாமிகள் மீண்ட அதிசயம் 83

54. கண்நோய் தீர்த்த கருணையாளன் 84

55. சுவாமியே மந்திர சொருபர் 85

56. தீவு முனைவெளியில் மழை பெய்வித்த அதிசயம் 86

57. சுவாமிகளின் உபதேசம் 87

58. உடைந்த சாராயப் பீப்பா அடைபட்டது 89

59. சமமாகப் பங்கீடு செய்த வாழைப்பழம் 90

60. பைத்தியத்தை மாற்றிய பக்குவம் 90

61. மன்னார்க்கடலில் அகப்பட்டவர்களை மீட்ட அதிசயம் 92

62. மாட்டிறைச்சி மல்லிகைப் பூ ஆனது 92

63. திமிர்வாதக்காரன் நிமிர்ந்து நடந்தமை 93

64. முறிவு வைத்தியம் 94

65. ஊணும் உறக்கமும் உண்டானால் நோயேது 95

66. சமாதி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# முப்பெரும் சித்தர்கள்

## பாரதமும் ஈழமும்

இந்து சமுத்திரம் ஒரு காலத்திலே நிலப் பகுதியாக இருந்ததென்பதே ஆராய்ச்சியாளர் கண்ட முடிபு. இந்தியா, இலங்கை யாவும் ஒரே தரைப் பரப்பாக இருந்த காலம். ஆபிரிக்காக் கண்டமும் அத்துடன் இணைந்திருந்தது. அந்த நிலப்பரப்பிற்கு லிமூறியாக் கண்டம் என்று பெயர். லிமூறியாக் கண்டம் முழுவதுமே தமிழர் நாகரிகம் பரவியிருந்தது என்பதற்குச் சான்றுகள் பல கிடைக்கின்றன. மடகஸ்கார் தீவு என்பது தென்னாபிரிக்காவுக்குப் பக்கத்திலே உள்ளது. அதன் தலைநகரம் 'அந்தணனறிவோ' என்பதாகும். அங்கு வசிக்கும் மக்கள் தமிழருடைய பழக்க வழக்கங்களை உடையவராய்க் காணப்படுகின்றனர்.

கடல் கோளினால் லிமூறியாக் கண்டத்தின் பெரும் பகுதி நீருள் ஆழ்ந்தது. இலங்கை இந்தியாவை விட்டுப் பிரிந்தது. இராமாயண காலத்தில் இராமர் சீதையைச் சிறை மீட்க இந்தியாவிலிருந்து அணை கட்டி இலங்கை வந்தார். இலங்கையிலிருந்து இந்தியா திரும்பும் போது புட்பக விமானத்தில் சென்றார்.அரக்கர் ஆட்சியினால் களங்கமுற்றிருந்த ஈழம், இராமரது திருப்பாதம் பட்டபடியினாலும் சீதை சிறையிலிருந்து தவம் செய்த படியினாலும் புனிதம் பெற்றது. புனிதம் பெற்ற இலங்கைக்கு அரசனாக விபீஷணாழ்வாருக்கு இராமர் முடிசூட்டினார். மகாபாரத காலத்தில் தருமருடைய அசுவ மேத யாகத்தின் போது திக் விஜயம் செய்த அர்ச்சுனன் ஈழத்திற்கும் வந்து இரத்தினங்கள் பெற்றுச் சென்றதாக மகாபாரதம் கூறுகின்றது. இராமரும் இராவணனும் எவ்விதம் சிவபக்தர்களோ, அவ்விதமே அர்ச்சுனனும் பெரிய ஒரு சிவபக்தனாவான். அர்ச்சுனனுடைய வருகையினாலும் ஈழம் புனிதம் அடைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தர் பெருமான் ஈழத்திற்கு மும்முறை வந்தாரென்றும் சிவனொளிபாதம், மகியங்கனை, களனி ஆகிய மூன்று இடங்களிலும் வந்து இறங்கி, ஈழத்தைப் புனிதப்படுத்தினார் என்றும் மகாவம்சம் கூறுகின்றது. கண்டி தலதா மாளிகையில் வைத்துப் பௌத்த மக்களால் போற்றப் பெறும் புத்ததந்தம் அதாவது புத்தருடைய பல் உலகப் பிரசித்தி பெற்றதாகும்.

தேவநம்பியதீசன் இலங்கையை அரசு செய்த காலத்திலே இந்தியாவில் தர்ம அசோக சக்கரவர்த்தி பௌத்த தர்மத்தைப் பரப்பிக் கொண்டிருந்தார். அசோகனின் மகன் மகிந்து புத்த பிக்குவாகி இலங்கைக்கு வந்தார். வந்தவர் தீசனை மிகுந்தலை மலையிலே சந்தித்து இலங்கை முழுவதும் புத்த சமயத்தைப் பரப்புவதற்கான நடவடிக்கையில் இறங்கினார். அசோகனின் மகள் சங்கமித்தை பிக்குணியாகி, புத்தர் பெருமான் ஞானம் பெற்ற வெள்ளரசு மரத்தின் கிளை ஒன்றைக் கொண்டு வந்து அநுராதபுரத்திலே நாட்டி அதனைப் புனிதப்படுத்தினார். புத்த சமயம் ஈழத்தில் வேரூன்றி நிலைத்துப் பரவியிருப்பது போல வெள்ளரச மரமும் பருத்துக் கிளைகளைப் பரப்பி தன்னை நாடி வருவோருக்கெல்லாம் புனிதத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது.

சம்பந்தரும் சுந்தரரும் ஈழத்திற்கு வராவிட்டாலும் இராமேச்சுரத்தில் இருந்துகொண்டே தமது ஞானக் கண்ணினால் திருக்கேதீச்சரத்தையும் திருக்கோணேஸ்வரத்தையும் தரிசித்து தேவாரப் பதிகங்கள் பாடினர். தேவாரப் பாடல் பெற்றமையினால் இரு திருத்தலங்களும் மேன்மையுற்றன. அதனால் ஈழமும் சிறப்புற்றது. அருணகிரிநாத சுவாமிகள் ஈழத்தின் பழம்பெருந் தலங்களுள் ஒன்றான கதிர்காமத்தைத் தரிசித்து திருப்புகழ் பாடினார். அருணகிரிநாதருடைய வருகைக்குப் பின் பாரதத்திலிருந்து ஈழத்திற்கு முருக பக்தர்கள் பெருந் தொகையாக வரத் தொடங்கினர். பாரதத்தில் கன்னியாகுமரி தொடக்கம் கயிலாயம் வரை யாத்திரை செய்தாலும், கதிர்காம யாத்திரையும் செய்தால் தான் யாத்திரை பூரணம் அடையும் என்ற அளவுக்கு மக்கள் உள்ளத்தில் கதிர்காமம் இடம் பெற்றிருந்தது. மதுரையில் சங்கப் புலவர்கள் தமிழ் வளர்த்த காலத்திலே ஈழத்துப் புலவர்களும் இடம் பெற்றிருந்தார்கள் என்பதற்கு அத்தாட்சிகள் காணப்படுகின்றன.

மகரிஷிகள், தவ முனிவர்கள் வாழ்ந்த நாடு பாரதம். முனிவர்கள்; மகரிஷிகள் பரம்பரை ஒன்று பாரதத்தில் இன்றும் உண்டு. உலகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதத்திற்குக் கொடுக்கும் மதிப்பு இந்த ஒன்றிற்காகவேதான். நீதியும், தர்மமும், ஆத்மீகமும் இவர்களாலேதான் பாதுகாக்கப்பட்டு வந்துள்ளது. பாரத நாட்டு இலக்கியங்கள் இந்த அடிப்படையிலேதான் எழுதப்பட்டன.

ஈழத்திலும் இத்தகைய பரம்பரை ஒன்று ஏற்பட்டு வளர்ந்து வருகிறது என்றால் அது மிகையாகாது. இன்று பாரதத்தில் வடக்கே ரிஷிகேஷத்தில் ஸ்ரீ சிவானந்தாச்சிரமமும் கிழக்கே பொண்டிச்சேரியில் ஸ்ரீ அரவிந்தாச்சிரமமும் மேற்கே கஞ்சன் காட்டில் ஆனந்தாச்சிரமமும் தெற்கே திருவண்ணாமலையில் ஸ்ரீ ரமணாச்சிரமமும் விளங்குதல் போல ஈழத்திலும் நான்கு திசைகளிலும் நான்கு சமாதிகள் விளங்குகின்றன. வடக்கே யாழ்ப்பாணத்தில் நீராவியடியில் கடையிற் சுவாமிகளின் சமாதியும், தெற்கே நாவலப்பிட்டி குயீன்ஸ்பரியில் நவநாத சித்தரின் சமாதியும், மேற்குத் திசையில் கொழும்பு முகத்துவாரத்தில் பெரியானைக்குட்டி சுவாமிகளின் சமாதியும், கிழக்குத் திசையில் காரைதீவில் சித்தானைக்குட்டி சுவாமிகளின் சமாதியும் விளங்குகின்றன.

இந்தியாவிலிருந்து ஈழம் வந்த இந்த நான்கு பெரும் மகான்களின் பரம்பரை ஒன்று இன்று ஈழம் முழுவதிலுமே காலூன்றிப் பரவி உள்ளது. இந்த நால்வரில் முதன் முதல் ஈழத்திற்கு வந்தவர் கடையிற் சுவாமிகள் ஆவார்.

பங்களூரில் நீதிவானாக இருந்த இவர் ஒருவருக்குத் தூக்குத் தண்டனை நியமிக்க வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டது. யூரிமாருடைய தீர்ப்பு அவருடைய உள்ளத்திற்கு மாறாக இருந்ததோ, அன்றி ஒரு ஆத்மாவை உடலினின்று பிரிப்பதற்குத் தனக்கு என்ன தகுதி உடையது என்று எண்ணினாரோ, எதுவாயினும் அச்செயல் அவருடைய உள்ளத்தில் பெரியதொரு மாற்றத்தை ஏற்படுத்திவிட்டது. இரவு முழுவதும் இதே நினைவில் தூக்கமின்றிக் கழிந்தது. விடிய எழுந்தார். நீதிவான் உத்தியோகத்திற்கு ஒரு முழுக்குப் போட்டார். கால் சென்ற வழியே நடக்கத் தொடங்கினார். கடல் கடந்து இலங்கை வந்து சேர்ந்தார்.

யாழ்ப்பாண நகரின் மத்தியிலே பெரிய கடை என்று அழைக்கப்படும் கட்டிடம் ஒன்றுள்ளது. அங்கு நாலா பக்கங்களிலிருந்தும் மக்கள் பொருட்கள் கொள்வனவு விற்பனவு செய்ய வந்து கூடுவார்கள். அக்கட்டிடத்திற்குப் பக்கத்தில் ஒரு பெரிய மரம். அம்மரத்தின் கீழ் அசையாது இருந்தார். உடல் தண்ணீரை மறந்தது. தலை எண்ணெயை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறந்தது. வயிறு ஊனை மறந்தது. பார்ப்போருக்குப் பைத்தியம் போலக் காட்சி அளித்தார். யாரோ ஒரு பைத்தியம் மரத்தின் கீழ் இருக்கிறது என்றே கருதினர். சந்தடி நிறைந்த சந்தையின் மத்தியிலே சாந்தியை நாடி நின்றார் அம்மகான். போவோர் வருவோர் எல்லோரும் பைத்தியம் என்று சொல்ல அவர்களையெல்லாம் பைத்தியமாக்கிப் புன்முறுவல் பூத்தார் அம்மகான்.

பைத்தியத்தைப் பைத்தியம் தானே அறிய முடியும். செல்லப்பா என்ற பைத்தியம் கடைசியில் பெரியவரை வந்து அடைந்தது. அவர் ஒரு மகான் என்று கண்டு கொண்டார் செல்லப்பா. தன்னை முழுதாக ஒப்புக் கொடுத்துச் சீடன் ஆனார். குருவின் கட்டளைப்படி அவ்விடத்தை விட்டு நல்லூர்த் தேரடியைச் சரண் அடைந்தார். விசர்செல்லப்பா என்று உலகம் பரிகசித்தது. அவர்கள் பரிகசிப்புக்கு ஏற்கத் தம்மை ஒரு பைத்தியமாக்கி நடித்தார். திருப்பெருந்துறையில் பரமசிவன் வலிய வந்து மணிவாசகரை ஆட்கொண்டது போல செல்லப்பா சுவாமிகள் யோகர் சுவாமிகளைத் தேடிச் சென்று ஆட்கொண்டார். தனது சக்தி முழுவதையும் அவர் ஒருவரிடமே கொடுத்து பூத உடலை மறைத்தருளினார். யோகர் சுவாமிகளைக் குருவாகக் கொண்ட ஒரு பெருந்திருக் கூட்டம் இன்று ஈழம் முழுவதிலுமே பரவியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்தானைக்குட்டியின் பூர்வாச்சிரமம்

இராமநாதபுரம் என்பது தென்னிந்தியாவிலே திருநெல்வேலி, மதுரை, திருச்சி, தஞ்சை மாவட்டங்களுக்கிடையில் அமைந்துள்ள மாவட்டத்தின் பெயர். இதிலுள்ள இராமேசுவரம் பேர் பெற்ற சிவத்தலம். இராமபிரான் சிவபூசை புரிந்த தலம். இராமநாதபுரத்தை ஆண்ட மன்னர்கள் சேதுபதி மன்னர்கள் என அழைக்கப்பட்டனர். சேது என்பது இராமபிரான் கடல்மேலிட்ட அணை. இங்குள்ள தீர்த்தம் சேது தீர்த்தம் என அழைக்கப் படுகிறது. இது கன்னியாகுமரி முதல் தொடங்குகிறதென்பதைக் "குரங்கு செய்கடற் குமரியம் பெருந்துறை" என மணிமேகலை கூறுகின்றது. இச்சேதுவைச் சார்ந்த நாடு சேது நாடெனப் வழங்கப்பெறுகிறது. இராமநாதபுர மாவட்டம் சேது நாடாகும். இராமபிரான் சேது கட்டிய காலத்தில் தம்மை வழிபட்ட நிஷாதத் தலைவன் ஒருவனைத் தாம் கட்டிய சேதுவைக் காத்துவரும்படி ஆணையிட்டார் என்று சேதுபதிகளின் மரபைப் பற்றிக் கூறுவர். இவர்கள் பாண்டிய மன்னர்க்குப் படைத்தலைவர் களாகவும் இருந்தவர்கள்.

நல்லந்தையார், நன்முல்லையார், ஒக்கூர்மா சாத்தியார் போன்ற சங்கப் புலவர்கள் இப்பிரதேசத்திலே பிறந்தவர்கள். மாணிக்கவாசகர் இறைவனருள் பெற்ற திருப்பெருந்துறை இராமநாதபுரத்தைச் சேர்ந்ததாகும். நாட்டுக் கோட்டைச் செட்டியார்களுக்கு நிலையமான நாட்டரசன் கோட்டை என்பது சேதுமன்னரின் கோட்டை என்று பொருளாகும். தாயுமானவர் சமாதி அடைந்த முகவையும் மணவாளமாமுனிவர் வளர்ந்த சிக்கற் கடாரமும் இம்மாவட்டத்தில் உள்ளவையாகும்.

'பெருநாளி' என்பது இராமநாதபுரத்துச் சிற்றரசர் ஒருவருடைய இராசதானி. இந்த நாட்டுச் சிற்றரசருக்கு ஒரே ஒரு மகன். அவருடைய பெயர் கோவிந்தசாமி என்பதாகும். கோவிந்தசாமி அரச குடும்பத்திலே பிறந்து வாழ்ந்தும், அவருக்கு அரச போகங்களில் நாட்டம் ஏற்படவில்லை. உள்ளம் துறவை நாடியது. இந்தக் கோவிந்தசாமியே இலங்கையின் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த காரைதீவில் சமாதி அடைந்த சித்தானைக்குட்டி சுவாமிகளாவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூவர் சந்திப்பு

'பெருநாளி' சமஸ்தானத்தில் ஒரு முறை பெரியவொரு தொற்று நோய் கண்டிருந்தது. இருந்திருந்தாற் போல் பலர் மாண்டனர். சில வீடுகளில் குடும்பத்தோடேயே மாண்டனர். இச்சந்தர்ப்பத்தில் இரு சாதுக்கள் தெரு வீதிகளில் உலாவினர். அவ்வூர் மக்கள் அவர்களை இன்னார் என்று பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. அவ்விருவரும் அவ்வூர் மக்களை நோயின் கோரப்பிடியினின்றும் மீட்க வந்த பேரருளாளர் ஆவார்கள். யாரும் போக அஞ்சும் கொடியநோயினால் பீடிக்கப்பட்டிருக்கும் வீடுகளுக்குச் சென்று தமக்கு உணவு தருமாறு வற்புறுத்தினர். தமது நோய் அவர்களுக்கும் தொற்றிவிடுமே என்ற கவலையினால் சிலர் மறுத்தனர். அவர்களை வற்புறுத்தி அவர்களிடமிருந்து ஏதாவது ஓர் உணவுப்பொருள் பெற்று அவர்கள் முன்னிலையிலேயே இருவரும் உண்டனர். யார் உணவு அளித்தார்களோ அந்தக் குடும்பத்திலுள்ளார் எல்லோரும் நோயினின்றும் விடுதலை பெற்றனர். இச்செய்தி எங்கும் பரவியது. இவ்விரு மகாத்மாக்களும் மக்களின் நோயைத் தாமே பெற்று அநுபவித்தனர்.

இச்செய்தியைப் 'பெருநாளி' சமஸ்தானத்துச் சிற்றரசர் கேள்வியுற்றார். அவ்விரு மகாத்மாக்களையும் தமது சமஸ்தானத்திற்கு அழைத்து உபசரிக்க எண்ணம் கொண்டார். மகாத்மாக்களை அழைத்து வருமாறு தனது மகன் கோவிந்தசாமியை அனுப்பி வைத்தார் அரசர். கோவிந்தசாமிக்கு இப்படிப்பட்ட விஷயங்களில் ஈடுபடுவதென்றால் தனி ஒரு மகிழ்வு. தந்தையாரின் கட்டளைப்படி மகாத்மாக்களைத் தேடி கோவிந்தசாமி புறப்பட்டார்.

கோவிந்தசாமி அடியார்கள் இருவரையும் ஒரு குடிசையிலே சந்தித்தார். இருவரது பாதங்களையும் தமது உச்சிமேற் சூடினார். கோவிந்தசாமியைப் பார்த்ததும் இருவரது உள்ளங்களுமே நெகிழ்ந்தன. கோவிந்தசாமியை வாரி எடுத்து ஆனந்தக் கண்ணீர் சொரிந்தனர். அந்த இரு அடியார்களும் யார் என்பதை அறிய வாசகர்கள் ஆவலாயிருப்பார்கள் அல்லவா? அவர்களில் ஒருவர் கொழும்பு முகத்துவாரத்தில் சமாதி கொண்டிருக்கும் பெரிய ஆனைக்குட்டி சுவாமிகள். அடுத்தவர் நாவலப்பிட்டி- குயீன்ஸ்பரித் தோட்டத்தில் சமாதி கொண்டிருக்கும் நவநாதசித்தர் ஆவார். அடியார்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைத்துச் செல்ல வந்த கோவிந்தசாமி அடியார்களுக்கு அடியார் ஆனார்.

அரச உடையில் கோமகனாக இருந்த கோவிந்தசாமி அக்கணமே கோவணாண்டி ஆனார். இருவருக்கும் சீடர் ஆனார். வீடு திரும்பவே இல்லை. இருவரையும் பின் தொடர்ந்து நோயாளருக்கு வேண்டிய உதவிகள் செய்தார். ஒருவர் மூவரானார்; இருவர் மூவராயினர் என்று சொல்லும் அளவுக்கு மூவரும் இணைபிரியாது பாரதம் எங்கும் யாத்திரை செய்தனர். பூர்வீகத் தொடர்பு போலும் மூவரும் யாத்திரையைப் பூர்த்தி செய்யும் நோக்கோடு ஈழ நாட்டுக்குப் புறப்பட்டனர்.

ஈழநாடு சாதுக்கள் பரம்பரை ஒன்று தோன்ற வேண்டும் என எதிர்பார்த்திருந்த காலம். பெரிய புராணமும், கந்தபுராணமும் கோயில் தோறும் படித்தும் கேட்டும் மக்களுடைய உள்ளம் சாதுக்களை எதிர்நோக்கியிருந்த காலம். சங்கம வழிபாட்டில் சிறந்து குருநாதனின் வருகையை எதிர்பார்த்திருந்த காலம். இத்தகையதொரு சூழ்நிலையிலே தான் இரு குருநாதர்களும் ஒரு சீடனும் சேர்ந்து மூன்று மகாத்மாக்களாகி ஈழம்வர எண்ணங் கொண்டனர். இந்தக் காலத்தைப் போல் அந்தக் காலத்தில் போக்குவரவு வசதி இருக்கவில்லை. ஆனால் இந்தக் காலத்தைப் போல் பாஸ்போர்ட், விசாக்கெடுபிடி அந்தக்காலத்தில் இல்லை. தூத்துக்குடியில் இருந்து மூவரும் கப்பல் ஏறிப் புறப்படத் தீர்மானித்தனர். கப்பலில் ரிக்கெற் பெற்றுக்கொள்வதற்காக முன்கூட்டியே செட்டியார் ஒருவரை அனுப்பி வைத்தனர். இருவருக்கு மாத்திரமே ரிக்கெற் கிடைத்தது. அதனால் கோவிந்தசாமியை அக்கரையில் விட்டுக் கப்பல் கொழும்பை நோக்கிப் புறப்பட்டது.

கப்பல் கொழும்புத் துறைமுகத்தை அடைந்தது. கப்பலில் வந்தவர்களை வரவேற்கப் பெருந்தொகையான மக்கள் வந்திருந்தனர். அவர்களுக்குள்ளே கோவிந்தசாமியும் காணப்பட்டார். கோவிந்தசாமியைக் கண்ட குருநாதர் இருவரும் எவ்வித ஆச்சரியத்தையும் காட்டிக் கொள்ளவில்லை. கோவிந்தசாமியின் பக்குவ நிலையைப் பற்றி இருவரும் முன்னமே உணர்ந்திருந்தார்கள். 'மூர்த்தி சிறிதானாலும் கீர்த்தி பெரிது' என்று சொல்வார்களே, அதற்கு இலக்கியமாக விளங்கினார் கோவிந்தசாமி. கோவிந்தசாமி தங்களுடைய சீடன்தான் என்றாலும் அவரிடம் அற்புத சாதனைகள் மலிந்து கிடக்கின்றன என்பதும் அவர்கள் தெரிந்த விடயமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்பலில் இடம் இல்லாவிட்டாலும் ககனத்தில் மனோ வலிமையினால் தாவிச் செல்லும் அற்புத சக்தி அவரிடம் இருந்ததைக் குருநாதர்கள் இருவரும் நன்கு அறிந்திருந்தனர்.

எந்த இராமநாமத்தின் உதவி கொண்டு அனுமார் கடலைக் கடந்து இலங்கை வந்தாரோ, அதே இராமர் கடலைக் கடப்பதற்கு அணைகட்டி வரவேண்டியிருந்தது. அதே போன்று குருமார் இருவரும் கப்பலில் வர கோவிந்தசாமியாகிய சீடர் ஆகாயமார்க்கமாக இங்கு வந்து சேர்ந்து விட்டார். பெரிய ஆனையையும் சித்தானையையும் விட்டுத் தனியாக நவநாதசித்தர் புறப்பட்டார்.

# நவநாதசித்தர்

**"சொல்லறிய சித்தர் குழாம் நிறை கொல்லிச் சிகரமதிற்**
**சுருதி முடிவான ஒளி வெளியை நாடி**
**அல்லலறுத் தானந்தப் பேரமுதம் அநுதினமும்**
**அருந்தி யடி பணிந்தவரை அன்பாற் போற்றி**
**வெல்லரிய சித்திகளோ ரெட்டினையுஞ் சிறுமகவு**
**போலியற்றிப் பித்தரைப் போல் வெளிவந்திந்நாள்**
**மல்லல் வளம் கரிகாலி நாகன் மனைக்கான் முளைகள்**
**வழுத்து நவநாதனடி வணக்கஞ் செய்வாம்"**

*சி. குருசாமி*

# கொல்லிமலைச் சிறப்பு

கொல்லிமலை தமிழ் நாட்டில் சேலம் மாவட்டத்தில் நாமக்கல், ஆத்தூர் தாலுக்காக்களில் உள்ள குன்றுத் தொடர். மொத்த நீளம் 17 மைல். இடையிடையே ஆழமான குறுகிய பள்ளத்தாக்குகள் இருக்கின்றன. கொல்லிமலையர் என்ற மலைச் சாதியினர் வாழ்கின்றனர். இதற்குக் கொல்லி அறப்பள்ளி என்ற பெயரும் உண்டு. தன்னை அடைந்தாரது காமம், வெகுளி, மயக்கம் என்னும் முக்குற்றத்தைக் கொன்று ஆத்ம ஞானத்தை ஊட்டுந்தன்மை வாய்ந்த காரணம் பற்றி இப்பெயர் வந்ததென்று கூறுவர். அழகெலாந் திரண்டு இயற்கை அன்னை அங்குதான் தாண்டவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடுகின்றாள் என்று சொல்லும் அளவுக்கு அழகுடையதாய் இருந்தது. தேனும் பழமும் நிறைந்து கிடந்தன.

கொல்லிமலையிற் செய்து வைக்கப்பட்டிருந்த தெய்வப் படிமம் ஒன்றுக்குக் கொல்லிப்பாவை என்பது பெயர். கொல்லிமலையின் வளம் மிகுந்த நிலையைக் கண்டு முனிவரும் அமரரும் அதனை இருப்பிடமாகக் கொண்டனர். அப்போது அவர்களுக்கு அசுரராலும், இராக்கதராலும் இடையூறு நேர்ந்தது. அதனைத் தடுக்கத் தெய்வத் தச்சனைக் கொண்டு கொல்லிப் பாவையை அமைத்தனர். இயங்குந் தன்மையுள்ள இப்பாவை, அரக்கர் முதலியோரின் வாடை பட்டவுடன் நகைக்கும். கண்டவருடைய உள்ளத்தையும், விழியையும் கவர்ந்து, அவர்கட்குப் பெருங்காம நோயை உறுவித்து, மயக்கிக் கொல்லுந் தன்மையுடைய இதனைக் கண்ட அரக்கர் முதலியோர் மயங்கி மடியலாயினர்.

அம்மலை உச்சியில் உயிர்களுக்கு ஆன்ம ஞானமாகிய அகிம்சா தர்மத்தை அருள் செய்து, அஞ்ஞானத்தைப் போக்கும் ஞானவல்லியும், அறக்கடவுளும் விளங்கும் அறப்பள்ளி நாதர் சந்நிதி ஒன்று விளங்குகிறது. அவ்வறக் கடவுளர் சந்நிதிக்கு வெள்ளெருக்கம் பலகை வேய்ந்த திருக்கதவுகள் அமைந்துள்ளன. அவ்வாலயத்தின் பக்கல் அருளன்னை யின் பிரசாதமாய் தெள்ளத் தேறத் தெளிந்து தித்திப்பதோர் உள்ளத் தேறல் அமுதமாய் விளங்கும் (பஞ்சநதம்) ஐயாறு ஒன்று ஓடுகின்றது. அப்புண்ணிய தீர்த்தத்திற்கு அநுதினம் உச்சிக்காலத்தில் வாத்திய கோஷத்துடன் நைவேத்திய ஆராதனம் நடைபெற்று வருகின்றது. அப்புண்ணிய தீர்த்தத்தில் பல முனி சிரேஷ்டர்கள் பல வர்ணமச்ச வடிவாய் இருந்து தவஞ் செய்கின்றனரென்பது ஐதீகம். அந்நிவேதன அன்னத்தை அம்மச்சங்கள் அருந்துகின்றன. அம்மச்ச சாதிகளை ஒருவரும் பிடித்து உண்பதில்லை. தரிசனத்திற்காகச் செல்பவர்கள் அம்மச்சங் களுக்குப் பொரி, அவல் முதலிய தின்பண்டங்கள் அளிக்கின்றனர்.

அறப்பள்ளிநாதர் சந்நிதானத்திற்கு ஆதிசங்கராச்சாரிய சுவாமிகள் சென்று அம்மையாரின் திருவருட் பொலிவைக் கண்டு அம்மையார் சந்நிதி முன் முருகக் கடவுளை ஸ்தாபித்திருக்கின்றனர். அம்மலையில் பல பெரிய குகைகள் இருக்கின்றன. அவற்றில் பல சித்தர் குழாங்கள் வசிக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவநாதசித்தரும் குயீன்ஸ்பரித் தொடர்பும்

நவநாத சித்தர் இந்தக் கொல்லிமலையிலேதான் நீண்ட காலம் தவம் இருந்தார். தவசித்தி பெற்றவர். ஒரே நேரத்தில் பல இடங்களில் தோற்றம் அளித்தவர். ஒன்பது இடங்களில் சமாதி இருந்தவர். கொல்லிமலைச் சித்தர்களுள் இவர் மிகச் சிறந்தவர் என யாவராலும் போற்றப்பட்டவர். இவரை அயல் கிராமங்களிலுள்ள மக்கள் மானம் பாக்கி சுவாமிகள் என அழைத்து வந்தார்கள். சுவாமிகள் குகையில் மோனத்தவம் இருக்குங் காலங்களில் பசித்தால் அடிவாரத்திலுள்ள கிராமங்களுக்கு வருவார்கள். அத்தகைய கிராமங்களில் கரிகாலியும் ஒன்று.

கரிகாலியில் நாகன் குடும்பத்தினர் செல்வச் செழிப்புள்ள குடும்பத்தினர். நாகனுடைய அன்பு மனைவியார் பெருமாள் அம்மையார். இந்த அம்மையார் அடியார் பக்தியிற் சிறந்தவர். வீட்டிற்கு வரும் அடியார்கள் அனைவரையும் சிவமாகவே பாவிப்பவர். இந்த நாகன் என்பவர் நாவலப்பிட்டியைச் சேர்ந்த குயீன்ஸ்பரித் தோட்டத்தில் பெரிய கங்காணியாக இருந்தார். பெருமாள் அம்மையார் அடியார் பக்தியில் சிறந்து விளங்கியதோடு நிர்வாகத்திறமையிலும் வல்லவர். அம்மையார் வருடத்தில் பாதி நாட்கள் கரிகாலியிலும் பாதி நாட்கள் குயீன்ஸ்பரியிலும் காலம் கழித்து வந்தார்.

அம்மையாரின் அடியார் பக்தியால் கவரப்பட்ட நவநாதசித்தர் அடிக்கடி அம்மையாரிடம் வந்து உணவு பெற்றுச் செல்வார். சித்தர் அம்மையாரைச் செல்லமாக 'ஆயா' என்று அழைப்பார். கௌபீன உடையோடு மலையிலிருந்து வரும் சித்தர் நேராக அம்மையாரின் வீட்டு முற்றத்திற்குச் சென்று 'ஆயா' என்று குரல் கொடுப்பார். அம்மையார் எங்கிருந்தாலும் எத்தொழிலில் ஈடுபட்டிருந்தாலும் ஓடோடியும் வந்து சுவாமிகளுடைய திருப்பாதங்களை விளக்கி பூப்போட்டு வணங்கிய பின் தயாராக இருக்கும் உணவினைக் கொண்டு வந்து இரு கைகளையும் ஏந்தி நிற்கும் சுவாமிகளின் கைகளில் இடுவார்கள். சுவாமிகள் நின்ற நிலையிலேயே உணவை உண்டு கையில் நீருற்ற அதனையும் வாங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருந்தியவுடன் தவத்தை நோக்கிச் சென்று விடுவார்கள். அம்மையாரின் அன்புக்கரங்களினால் குழைத்துக் கொடுக்கும் உணவையே சுவாமிகள் விரும்பி உண்பாராம்.

அம்மையார் ஒருநாள் சுவாமிகளுக்கு உணவு பரிமாறும் போது, "சுவாமி, சிலோனில் நாங்கள் ஒரு சுப்பிரமணியர் கோயில் கட்டுகின்றோம். கெதியில் கும்பாபிஷேகம் நடாத்த இருக்கின்றோம். சுவாமிகள் அதற்குத் தவறாது வரவேண்டும்" என்று அம்மையார் வெகு விநயமாகக் கேட்டுக் கொண்டார். அதற்குச் சுவாமிகள் புன்முறுவல் பூத்தவராய், 'ஆயா நினைச்சா அடிமை வரும்' என்று கூறினார்கள். அம்மையார் குயீன்ஸ்பரி வந்து மாதக்கணக்காகி விட்டன. கோயில் கட்டு வேலை முடிவடைந்து கும்பாபிஷேகத்திற்கு நாளுங் குறித்தாகிவிட்டது. கும்பாபிஷேகத்திற்கான ஆயத்தங்கள் எல்லாம் தடல்புடலாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

## நவநாதசித்தர் குயீன்ஸ்பரி வருகை

கும்பாபிஷேகத்திற்கு முதல்நாள்தான் அம்மையாருக்குச் சுவாமிகளுக்குத் தான் சொன்னது பற்றிய நினைவு உதித்தது. மூத்த மகனை அழைத்துத் தான் சுவாமிகளிடம் கூறியதையும் சுவாமிகள் அதற்குக் கொடுத்த விடையையும் கூறி சுவாமிக்கு ஒரு கடிதம் எழுதுமாறு பணித்தார். இன்று தந்தி அடித்தாலும் சுவாமிகள் வந்து சேர வாரம் ஒன்றாகும். இன்று சுவாமிக்கு அறிவித்து என்ன பயன்? நாளைக்குத்தான் கும்பாபிஷேகம் முடிந்து விடுமே என்று மகனார் கூறினார். நினைவுக்கு வந்த உடனே அறிவிக்க வேண்டியது எங்கள் கடமை என்றார் அம்மையார். அன்றே தபால் எழுதித் தபால்கந்தோரில் சேர்க்கப்பட்டது. தனது கடமை ஒன்று நிறைவேறிவிட்டதாக அம்மையாரின் மனதில் ஒரு நிறைவு. சுவாமிகளின் அருட்சக்தியை நன்கு உணர்ந்தவராகையினால் சுவாமிகள் வரக்கூடும் என்றொரு நம்பிக்கை.

மறுநாள் அதிகாலை வீட்டிலிருந்து கும்பாபிஷேகத்திற்கு வேண்டிய பொருட்களுடன் கோயிலுக்கு வந்தார் அம்மையார். அந்த நேரம் சுவாமிகள் எதிரே வந்து கொண்டிருந்தார். அம்மையாருக்கு ஆனந்தம் தாங்க முடியவில்லை. ஓடிச்சென்று சுவாமிகளுடைய பாதங்களில் வீழ்ந்து வணங்கி ஆனந்த பாஷ்பம் சொரிந்தார். சுவாமிகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மையாரைத் தழுவி எடுத்துக் கொண்டார். சுவாமி, நேற்றைக்குத்தானே கடிதம் எழுதினேன். எப்படிச் சுவாமிகள் வந்தீர்கள்? என்று அதிசயம் மிகக் கேட்டார் அம்மையார். 'ஆயா நினைச்சுது அடிமை வந்துட்டுது' என்று சுவாமிகள் பதில் கூறினார்கள்.

கோயிலுக்கு முன்னாக வலது பக்கத்தில் கோணத்திசையாக உள்ள ஒரு இடத்தைச் சுட்டிக்காட்டி ஆயா, இந்த இடத்தில் தான் அடிமையைச் சமாதி வைக்க வேண்டும் எனச் சுவாமிகள் கூறினார்கள். அதைப் பற்றி எல்லாம் எதற்காகச் சுவாமிகள் இப்பொழுதே கூறிக்கொண்டிருக்கிறீர்கள் என்று செல்லமாகக் கடிந்தார் அம்மையார்.

நாட்கள் சில உருண்டோடின. குயீன்ஸ்பரிக்கு வந்திருக்கும் சாமியாரைப் பற்றித்தான் மலையகமெங்கும் பேச்சு அடிபட்டது. மலையகத்திலுள்ள ஆயிரக்கணக்கான தோட்டங்களிலிருந்தும் பக்தர்கள் சுவாமிகளை தரிசிக்க வந்தனர். இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் உயர்ந்த உத்தியோகத்தர்கள், ஆன்மீகவாதிகள் வந்து சென்றனர். ஏன்? சுவாமிகளின் தரிசனைக்காக இந்தியாவிலிருந்துமே வந்தனர். இந்தியாவிலிருந்து வந்தவர்கள் சுவாமிகளைப் பார்த்தவுடன் இவர் அந்த ஊரில் சமாதியானவரர் இந்த ஊரில் சமாதி ஆனவர் என்று பேசத் தலைப்பட்டனர். சுவாமிகளைத் தரிசிக்க வந்த சேலம் வாசி ஒருவர் ஒரு வருடத்திற்கு முன்பு தான் இச்சுவாமியைத் தாங்கள் சேலம் பக்கத்தில் சமாதி செய்ததாகத் தெரிவித்தார். அதனைச் சுவாமிகளிடம் விசாரித்த போது சுவாமிகள் புன்சிரிப்புடன் "இருக்கும் அப்பா" என்றனர்.

## நவநாதசித்தரின் சித்துக்கள்

தோட்டத் தொழிலாளருடன் சுவாமிகள் சகசமாகப் பழகினார். தொழிலாளரும் சுவாமிகள் மேல் அன்பும் மரியாதையும் உடையராகப் பழகினர். பக்கத்திலுள்ள தோட்டங்கள் தோறும் சுவாமிகள் தாமாகவே உலாவி வருவார். குயீன்ஸ்பரித் தோட்டத் தொழிலாளரிடையே சுவாமிகள் பல சித்துக்கள் விளையாடினார்கள்.

ஒருநாள் சுவாமிகள் பக்கத்துத் தோட்டத்திலுள்ள கங்காணியார் ஒருவரைச் சந்திக்கத் தனிமையில் சென்று கொண்டிருந்தார்கள். தேயிலைச் செடி மறைவில் கஞ்சாப்புகை குடிப்பதற்காக மூவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைந்திருந்தனர். சுவாமியைக் கண்டதும் சுவாமி கஞ்சா குடித்து விட்டுத்தான் போக வேண்டும் என்று வற்புறுத்தினர். சுவாமிகள் மறுத்தார். அவர்கள் விடவில்லை. சுவாமியும் இணங்கினார். நச்சுத் தன்மையுள்ள சருகுகளும் வைத்து கஞ்சா தயாரித்தனர். முதலில் சுவாமிகள்தான் குடிக்க வேண்டும் எனக் கூறினர்.

சுவாமி மறுத்து நீங்களே முதலில் குடியுங்கள். நீங்கள் குடித்து முடிந்தபின் 'நான் கடைசியாகக் குடிக்கிறேன்' என்றார். அவர்கள் சுவாமிகளை விடவில்லை. வற்புறுத்தினார்கள். சுவாமிகள் ஒரு முறை புகையை இழுத்து முன்னாக ஊதினார். மூவர் முகத்திலும் புகை பிடித்த உடனே மயங்கி வீழ்ந்தனர். சுவாமிகள் தாம் செல்ல வேண்டிய இடத்திற்குச் சென்று விட்டார்கள். புகை குடித்த மூவரையும் தேடி அந்தந்த வீட்டில் உள்ளவர்கள் தோட்டம் முழுவதும் சென்றனர்.ஈற்றில் மூவரும் மயங்கிய நிலையில் நாவலப்பிட்டி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். அங்கும் தெளிவு ஏற்படாமையால் கண்டி ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். சுவாமிகளுடன் இவர்கள் தகாத முறையில் நடந்து கொண்டார்கள் என்ற செய்தி எப்படியோ தெரிந்துவிட்டது. தொழிலாளர் மூவரினதும் உற்றார், உறவினர் சுவாமிகள் இருந்த இடஞ் சென்று பிழையை மன்னிக்குமாறு கண்ணீர் வார வேண்டினர். சுவாமிகள் தமக்கும் அதற்கும் சம்பந்தம் ஒன்றுமில்லையென அனுப்பி விட்டார். 4,5 நாட்களாகியும் அவர்கள் மயக்கம் தெளியவில்லை. சுவாமிகளிடம் மீண்டும் சென்று உயிர்ப்பிச்சை இடுமாறு மன்றாடினார்கள். சுவாமிகள் ஒரு சிகரெற்வாங்கி பற்ற வைத்து ஒரு முறை புகையை இழுத்து ஊதினார். புகை சுழன்று சுழன்று சென்றது. நீங்கள் கவலையில்லாமல் செல்லுங்கள். நோய் சுகமாய் விடும் என்று வந்தவர்களை அனுப்பினார். சுவாமி சிகரெற் புகையை இழுத்து வெளியே ஊதிய அதே நேரத்தில் மூவரும் மயக்கம் தெளிந்து எழுந்தனர்.

இச்செய்தி நிகழ்ந்த பின் தோட்டத் தொழிலாளர் மத்தியிலே சுவாமி மீது பெருமதிப்பும் பயபக்தியும் ஏற்பட்டன. சுவாமிகளைத் தரிசிப்பதற்காக எங்கிருந்து பக்தர்கள் வந்தாலும் தங்குமிட வசதி சாப்பாட்டு வசதி, யாவும் கங்காணியார் குடும்பத்தினர் அன்போடு மனப்பூர்வமாகச் செய்து ஆதரித்து வந்தனர். சுவாமிகளுடைய வருகைக்குப் பின்னர் கங்காணியார் வீடு ஓர் அன்ன சத்திரமாக மாறியதென்றே சொல்ல வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நாள் பெருமாள் அம்மையார் சிதம்பரம் செல்ல வேண்டுமென்று சுவாமிகளிடம் உத்தரவு கேட்டார். சுவாமிகள் ஆசியுடன் அனுப்பி வைத்தார்கள். அம்மையார் சிதம்பரம் சென்று ஞானப் பிரகாசத்தில் தீர்த்தம் ஆடி ஜெபம் செய்வதற்காகச் சுவாமிகளால் கொடுக்கப் பெற்ற உருத்திராக்க மாலையைத் தேடினார்; காணவில்லை. வீட்டில் மறந்துபோய் வைத்துவிட்டு வந்து விட்டார். கண்கள் மூடியபடி கைகள் கூப்பிய வண்ணம் நவநாதசித்தரை நினைந்து உருகினார். உருத்திராக்க மாலை கைகளில் விழுந்திருக்கக் கண்டார். நவநாதப் பெருமான் புறம் புறம் திரிந்து கருணை பாலிப்பதை உணர்ந்து உணர்ந்து அம்மையார் உள்ளம் நெக்குருகினார்.

சுவாமிகளுடைய மிக நெருங்கிய பக்தர்களுள் திருக்கடம்பந்துறை அன்பர் சி.குருசாமியும் ஒருவர். குருசாமி அவர்களுக்குச் சுவாமிகளுடைய தொடர்பு ஏற்பட்டதன் பின்பு கொல்லிமலைச் சித்தர்களைப் பார்க்க வேண்டும் என்றொரு ஆசை எழுந்தது. அந்த ஆசையைச் சுவாமிகளிடம் கூறினார். அமாவாசைத் தினத்திலன்று ஒருநாள் இரவு 2 மணிக்குக் கொல்லிமலை வருமாறு சுவாமிகள் குருசாமியை அழைத்தார். இந்த அமாவாசை இருட்டில் எப்படிச் செல்வதென்று குருசாமி தயங்கினாராயினும் சுவாமிகள் மீது கொண்ட நம்பிக்கையில் சுவாமியைப் பின் தொடர்ந்தார். குருசாமியின் தயக்கத்தை உணர்ந்து சுவாமிகள் குருசாமியின் வலது கையை தமது இடது கையால் பற்றிக் கொண்டு கண்களை இறுக மூடிக் கொள்ளும் படியும் திறக்கச் சொல்லும் போது திறக்க வேண்டும் என்றும் அருளினார். 2,3 நிமிடங்களுக்குள் கண்களைத் திறக்கச் சொன்னார் சுவாமி. குருசாமி கண்களைத் திறந்தார். என்ன ஆச்சரியம்! கொல்லிமலை உச்சியில் தாம் இருப்பதை அறிந்தார். சுவாமிகள் பெரியதொரு பாறாங்கல்லை இலகுவாகக் கையால் அகற்றி உள்ளே அழைத்துச் சென்றார். ஏழு சித்தர்கள் ஆழ்ந்த சமாதி நிலையில் இருப்பதைக் கண்டு தரிசித்தார்.

சித்தர் ஊராக்கரை, கோம்பை முதலிய இடங்களில் பக்தர்களின் வழிபாட்டுக்காளானார். அங்குள்ள மக்கள் அபிஷேகாதிகள் செய்தே சித்தரை உபசரித்தார்கள். ஆலத்துடையான்பட்டி இராமசாமி ரெட்டியார் திருப்பணி செய்துள்ள பெருமாள் கோயில் கிணற்றில் அதிக ஆழத்திற்கு வெட்டியும் நீரின்மையைச் சித்தரிடம் தெரிவிக்க சித்தர் ஓர் சக்கரத்தை தகட்டில் வரைந்து கிணற்றில் இடச் செய்தார். இவ்வாறே இராமசாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரெட்டியார் செய்யக் கிணற்றில் நிரம்ப நீர் ஊறிவந்தது. கிணற்றில் நீர் ஊறி வந்தமையை ரெட்டியார் ஓர் விழாவாகக் கொண்டாடினார். சுவாமிகளை வைத்துக் கொண்டே கும்பாபிஷேகத்தை வெகுவிமரிசையாக நடத்தினார்.

பச்சைப் பெருமாள் பட்டியில் ஓர் ரெட்டியார் புறந்திண்ணையில் சித்தர் இமையா நாட்டத்தோடு யோகத்திலிருந்தார். ரெட்டியாருக்குச் சுவாமிமார்களைக் கண்டால் பிடிக்காது. எல்லோரும் வெளிவேடம் போடுகிறவர்கள் என்பது அவரது எண்ணம். ஒரு உண்மை மகானை உண்மை மகானால் தான் புரிந்து கொள்ள முடியும்.

"புறந்திண்ணையில் ஒருத்தர் செத்த ஆடு விழிப்பது போல் விழித்து வேஷம் போடுகிறார்"என்று ரெட்டியார் வீட்டிலுள்ளாருக்கும் போவோர் வருவோர் எல்லோருக்கும் பரிகாசமாகக் கூறினார். அவருடைய பரிகாசம் பேச்சளவில் நின்றுவிடவில்லை. செயலிலும் இறங்கியது. சித்தருடைய தலையில் ஒரு கொள்ளிக்கட்டையைக் கொண்டு வந்து வைத்தார். சித்தர் அதனைச் சிறிதும் பொருட்படுத்தாது உணர்வுவரப் பெறாதவராக இருந்தார். இதனை உணர்ந்த மற்றொரு ரெட்டியார் சிரசிலிருந்த கொள்ளிக் கட்டையை அகற்றிச் சித்தரை வணங்கி நின்றார். சித்தர் விழித்தார். எதிரே நின்றவரைப் பார்த்து "என்னப்பா" என்றார். "சுவாமி இந்த வீட்டு ரெட்டியார் தங்கள் தலையில் நெருப்பிட்டார். அதனை அடியேன் அகற்றினேன்" என்றார். "அப்படியா, அவர் மிகவும் நல்லவர்" என்று சித்தர் அகன்றார். சில நாட்களில் அந்தக்குடும்பமே இருந்த இடம் தெரியாது அழிந்து போனதை யாவரும் அறிவர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரியானைக்குட்டி சுவாமிகள்

பம்பாய் செல்லும் வழியில் பூனாவில் ஞானதேவருடைய சமாதியைத் தரிசிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அதை ஆனந்தி சமாதி என்றும் அழைப்பர். சமாதியினுள்ளே சென்றதும் வாய் விட்டுச் சொல்ல முடியாத ஆனந்தமான சமாதி. அத்தகையதொரு அமைதியை கொழும்பு முகத்துவாரத்தில் இருக்கும் பெரியானைக்குட்டிச் சுவாமிகளுடைய சமாதிக்குச் சென்ற போது அனுபவிக்க முடிந்தது.

மகான்கள் பூத உடலோடு வாழுங் காலங்களில் அவர்களது திருச்சமுகம் எவ்வாறு ஆத்மீக அலையால் சூழப்பட்டிருக்குமோ அவ்விதமே அவர்கள் சமாதிகளிலும் ஆத்மீக அலை ஒன்று சூழ்ந்திருப்பதைச் சாதகர்கள் இலகுவாக அறிந்து கொள்ளலாம்.

## கண்டியில் பெரியானைக்குட்டி சுவாமிகள்

பெரியானைக்குட்டி சுவாமிகள் முற்பகுதியில் கண்டியில் வாழ்ந்து வந்ததாக அறியக்கிடக்கின்றது. கண்டியில் சுவாமிகளைத் தரிசித்து உரையாடிய பெருமக்கள் சிலர் தாம் சுவாமிகளுடன் தொடர்பு கொண்டுள்ளதாக கூறியுள்ளார்கள். பெரியானைக்குட்டி சுவாமிகள் நவநாதசித்தருடன் இலங்கைக்கு வருமுன்பே இளம் வயதில் கண்டியில் வாழ்ந்ததாகத் தகவல்கள் கிடைக்கின்றன. இளம் வயதில் சுவாமிகள் கண்டியில் வாழ்ந்து, இந்தியா சென்று பின்பு நவநாதசித்தருடன் வந்திருக்கிறார்கள்.

இவர் சிறு பையனாகக் கண்டிக் கடை வீதியிலே சுற்றித்திரிந்தார். கண்டித் தெப்பக்குளத்திற்குப் பக்கத்திலே ஒரு சலவைத் தொழிலாளி வசித்து வந்தார். அவர் ஒருநாள் இந்தப் பையனைத் தமது வீட்டிற்கு வருமாறு அழைத்தார். பையனுடைய நல்ல குணங்களை அறிந்த அத்தொழிலாளி தனது சொந்தப் பிள்ளையைப் போலவே அன்பு செய்து வளர்த்து வந்தார். பையனும் வளர்ப்புத் தந்தைக்கு வேண்டிய உதவிகளைத் தாமாகவே உணர்ந்து செய்து வந்தார். அழுக்குத்துணி மூட்டைகளைச் சுமந்து கொண்டு குளத்திற்குச் செல்லுதல், துணிகளைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பால் போல் நிறமாகும் வண்ணம் துவைத்தல், தோய்த்த துணிகளைக் காயவிடுதல், காய்ந்த துணிகளை மாராப்பாய்க் கட்டி வீட்டுக்குக் கொண்டு செல்லுதல் போன்ற தொழில்கள் அத்தனையையும் மகிழ்வுடன் செய்தார். ஓய்வுநேரங்களில் ஓடி ஆடி விளையாடவும் தவறவில்லை. சிறு வயதிலே உடைகளின் அழுக்கைப் போக்குவதில் வல்லவரான சிறுவர், பெரிய ஆனைக்குட்டி சுவாமிகள் ஆனதும் எத்தனையோ ஆத்மாக்களின் மன அழுக்கைப் போக்கி உள்ளார். மும்மல அழுக்கை நீக்கி எத்தனையோ சீடர்களை ஆட்கொண்டார்கள்.

ஆனைக்குட்டி என்பது வளர்ப்புத் தந்தையார் வைத்த பெயராகும். ஒருநாள் கொல்லைப் பக்கம் சென்ற ஆனைக்குட்டி, "அம்மா, அம்மா, பாம்பு, பாம்பு" என்று சப்தமிட்டார். இச்சத்தத்தைக் கேட்ட வளர்ப்புத் தாயார் ஓடோடியும் வந்து "எங்கடா மகனே பாம்பு" என்றார்கள். ஆனால் ஆனைக்குட்டியோ கெக்களம் கொட்டிச் சிரிக்கலானார். இந்தப் பரிகசிப்பு தாய்க்கு மிகுந்த கோபத்தை உண்டாக்கியது. இரண்டாம் முறையும் அப்படியே பலத்த சத்தமிட்டு அழைத்தார். வீட்டிலிருந்த சில ஆண்கள் மாத்திரம் ஓடிச் சென்று பாம்பு எங்கே என்று விசாரித்தனர். அவர்களையும் ஆனைக்குட்டி பரிகசித்து அனுப்பியது. மூன்றாந் தடவையும் உரக்கக் கூவி அழைத்தார். ஒருவரும் ஏன் என்று கேட்கவில்லை.

சில மணித்தியாலங்கள் சென்றன. கொல்லைப் பக்கம் சென்ற ஆனைக்குட்டியைக் காணவில்லையே என்று தேடிச் சென்றனர். அங்கே ஆனையைக் காணாமல் திகைத்தனர். ஆனால் அவர் மலங்கழித்த இடத்தில் தங்கக் குவியலாய் இருப்பதைக் கண்டனர். தங்கத்தை எடுத்து பாதுகாப்பாக வைத்துவிட்டு, குடும்பம் முழுவதுமே ஆனைக்குட்டியைத் தேடுவதில் ஈடுபட்டது. கண்டி வீதியெல்லாம் தேடினர். கண்டுபிடிக்க முடியவில்லை. ஈற்றில் கண்டி ஸ்ரீ கதிரேசன் கோயில் படியில் படுத்திருக்கக் கண்டனர். அவரை வீட்டுக்குத் திரும்பி வருமாறு பல படியாகச் கெஞ்சி அழைத்தனர். அவரோ, நீங்கள் யாரோ, நான் யாரோ, என்ற எண்ணம் உடையவர் போல மௌனமாய் இருந்து விட்டார். இந்தப் புதினத்தைக் கண்ணுற்ற கோயில் குருக்கள், சலவைத் தொழிலாளரைப் பார்த்து, "இந்தப் பையனுக்கு மூளைக்கோளாறு ஏற்பட்டுள்ளது போல் தெரிகிறது. ஆகவே அவரைத் தொந்தரவு செய்யாமல் வீட்டுக்குத் திரும்பிப் போகும் படி கட்டளையிட்டார்" வந்தவர்களும் அவரைவிட்டு நீங்கி வீடு சென்றனர். கதிரேசப்பெருமானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருக்கள் நாவினின்று இவ்வார்த்தைகளைக் கூறியுள்ளார். இப்படிக் கூறாவிட்டால் அவர்கள் இடத்தைவிட்டுச் சென்றிருக்கவே மாட்டார்கள்.

ஆண்டவன் ஆனைக்குட்டியைப் பலப்பல சாதனைகளில் ஈடுபடுத்தி உள்ளுணர்வை உயரச் செய்து கொண்டிருந்தான். ஆனைக்குட்டி தினமும் கடை வீதிக்குச் சென்று எச்சில் இலைகளைப் பொறுக்கி, அவற்றிலுள்ள எச்சில்களைச் சாப்பிட்டு விட்டு கோயில் படிக்கே திரும்பி வந்துவிடுவார். உலக மக்கள் தம்மை நெருங்காதவாறு மகான்கள் தம்மை மறைத்தே வாழ்ந்து வந்தனர். எச்சில் இலையோடு தினமும் உட்கார்ந்திருக்கும் ஒருவரை யார்தான் அண்டுவார்கள். அப்படிப்பட்ட ஒருவரோடு பேச்சுக் கொடுத்தாலே தமக்குக் கௌரவம் இல்லை என்று நினைக்கலாமல்லவா?

இச்சந்தர்ப்பத்திலே ஜீவன் முத்தர்களைப் பற்றிக் கைவல்யத்திலே வரும் செய்யுள் ஒன்று நினைவு கூரத்தக்கதாகும்.

**"காமமாதிகள் வந்தாலும் கணத்திற்போம் மனதிற்பற்றார்**

**தாமரைஇலைத் தண்ணீர்போல் சகத்தொடுங் கூடிவாழ்வார்**

**பாமரர்எனக் காணப்பார் பண்டிதத் திறமைகாட்டார்**

**ஊமருமாவார் உள்ளத்துவகையாம் ஜீவன் முத்தர்"**

நான் என்ற அகந்தை அற்றுப் போகவும், ஆண்டவன் படைப்பில் எவ்வித உயர்வு தாழ்வும் கருதக்கூடாது என்பதைச் சாதனைப்படுத்தவுமே மகான்கள் இத்தகைய செயல்களில் ஈடுபட்டு நடிப்பார்கள். அந்தணராகப் பிறந்த இராமகிருஷ்ண பரமகம்சதேவர் அதிகாலையில் எழுந்து சென்று புலையர் சேரியைக் கூட்டி மெழுகி வைத்துவிட்டு விடியுமுன் வீடு திரும்பிவிடுவாராம்.

பெரிய ஆனை கண்டியில் இருக்கும் வரை தம்மை மற்றையோருக்குக் காட்டிக் கொள்ளாது வாழ்ந்தாலும் கண்டியை விட்டுப் புறப்படும் போது உயர்ந்த நிலையிலேயே சென்றுள்ளார். மகான்கள் பிறந்த இடத்திலோ அன்றி வளர்ந்த இடத்திலோ சந்நியாசி ஆவது இல்லை. காரணம் அந்த இடத்து மக்கள் அவர்களை அவர்களது பூர்வ ஆச்சிரமம் கொண்டே தான் மதிப்பர். அவர்களது வளர்ச்சியையும், உள்ளுணர்வையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்தியையும் உணர்ந்து கொள்வதில்லை. கள்வன் ஒருவன் சந்நியாசியாகி விட்டால், எவ்வளவு உயர்ந்த நிலையில் இருந்தாலும் கள்வன் என்ற பெயரை மறக்கமாட்டார்கள். ஆனைக்குட்டி கண்டியில் இருந்திருந்தால் சலவைத் தொழிலாளியின் மதிப்பிற்கு மேல் அவ்வூர்மக்கள் கொடுத்திருக்க மாட்டார்கள்.

# இந்தியாவில் சித்துக்கள்

ஆனைக்குட்டி சுவாமிகள் இந்தியா சென்று சேர்ந்தார். சாதாரண ஆனைக்குட்டியல்ல. ஜீவன் முக்தநிலையடைந்த ஆனைக்குட்டி ஆவார். நவநாத சித்தரும் ஆனைக்குட்டி சுவாமிகளும் ஒரு முறை பல சாதுக்களோடு ஒரு புகையிரத ஸ்தானத்தில் புகையிரதம் ஏறினர். இதைக் கண்ணுற்ற புகையிரத நிலைய அதிபர் ஆனைக்குட்டியையும், நவநாத சித்தரையும் தவிர மற்றைய சாதுக்களையெல்லாம் இறங்குமாறு கட்டளையிட்டார். மற்றைய சாதுக்களோடு இவர்களும் இறங்கினர்.

சுவாமிகள் இருவரும் செல்லலாம் எனப் புகையிரத நிலைய அதிபர் கூறினார். எமது சகோதரங்களுக்கு இடம் இல்லையென்றால் நாமும் போகவில்லை என்று சாதுக்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து நடந்து போய் பக்கத்திலுள்ள ஒரு காட்டில் தங்கினர். காட்டில் நெருப்பு மூட்டி சுற்றி வர இருந்து குளிர் காய்ந்தனர்.

புகையிரத யந்திரம் வேலை செய்துகொண்டே நிற்கிறது. நகர மறுத்து விட்டது. சாரதி தன்னாலான் மட்டும் முயன்றார். ஓடாமல் நிற்பதற்குரிய காரணத்தை அவரால் கண்டு கொள்ள முடியவில்லை. பெரிய பெரிய பொறியியலாளர் எல்லாம் வந்து பார்த்து முயன்றனர். கைகூடவில்லை. இயந்திரத்தில் எவ்வித கோளாறும் இல்லை. அப்படியானால் ஏன் ஓட மறுக்கிறது என்ற பிரச்சினையில் ஆழ்ந்தனர். ஏறிய சாதுக்களை இறக்கிவிட்டது தான் காரணமாய் இருக்கலாம் எனப் பிரயாணி ஒருவர் கூறினார். புகையிரத நிலைய அதிபரும் அதனை அரைகுறையாக ஏற்றுக் கொண்டார். அந்தக் காலத்தில் பெரிய பொறியியலாளர் ஒரு வெள்ளையர்.அவரும் இன்னும் சில உயர்தர உத்தியோகத்தரும் சேர்ந்து சாதுக்களைக் தேடிப் புறப்பட்டனர். சாதுக்களைக் காட்டிலே கண்டனர். வீழ்ந்து வணங்கி தமது பிழைகளைப் பொறுக்குமாறு வேண்டிப் புகையிரதத்தை ஓடச் செய்வதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள்புரியுமாறு கேட்டு நின்றனர "சுவாமிகள் எதைச் செய்ய வேண்டுமென்று விரும்புகிறீரகளோ அதை நாங்கள் தவறாமல் நிறைவேற்றி வைப்போம்" என இரந்து கேட்டனர்.

"நாங்கள் பரதேசிகள். உழைப்புப் பிழைப்பு அற்றவர்கள். எங்களிடம் எப்பொழுதுமே பணம் இருக்காது. உங்களைப் போன்ற இல்லறத்தார்கள் தான் உண்ண உணவும் உடுக்க உடையுந் தந்து காப்பாற்ற வேண்டும்.

**"துறந்தார்க்குந் துவ்வாதவர்க்கும் இறந்தார்க்கும்**

**இல்வாழ்வான் என்பான் துணை"**

என்றுதானே வள்ளுவர் கூறியிருக்கின்றார். ஆகையால் எங்களைப் போன்ற சாதுக்களிடம் இருந்து எப்பொழுதேனும் றெயில் கட்டணம் அறவிடக் கூடாது. இதற்குச் சம்மதமானால், இதனை எழுதிக் கையொப்பம் இட்டுத் தாருங்கள். அதன் பின்பு புகையிரதம் ஓடுவதற்கு வழி பார்ப்போம்" என்று கூறினார்கள்.

இது அந்த வெள்ளைக்காரருக்குப் பெரிய வியப்பாக இருந்தது. தாமே சுவாமிகள் கூறியவாறு எழுதிக் கையொப்பமிட்டுச் சுவாமிகளிடம் கொடுத்தார்கள். சுவாமிகள் மகிழ்வோடு பெற்றுக் கொண்டார்கள்.

சுவாமிகள் அந்த வெள்ளைக்காரரிடமிருந்தே ஒரு சிகரெற்றை வாங்கிப் பற்ற வைத்தார். புகையை இழுத்து வெளியே ஊதினார். என்ன ஆச்சரியம்! 4,5 மணித்தியாலங்களாக அசையாது நின்ற புகையிரதம் தாமாகவே நகரத் தொடங்கியது. இத்தகைய அற்புதங்கள் நிகழ்த்திய மகான்களை யார் நினைக்கின்றார்கள்?

## ஊமை பேசினான்

மூவரும் மதுரை நோக்கிப் பிரயாணம் செய்தனர். குருநாதர் இருவரும் வேறு வழியே பிரிந்து செல்ல, கோவிந்தசாமி மதுரையில் நடக்கும் பிட்டு விழாவைப் பார்க்கக் கோயில் நோக்கிச் சென்றார். வழியில் விழாவைப் பார்த்த சிலர் திரும்பி வந்தனர். விழா முடிந்து விட்டதோ என்று கோவிந்தசாமி நினைத்தார். தனியாக வந்த ஒருவரிடம் விழா முடிந்து விட்டதா என்று கோவிந்தசாமி வினவினார். அவனோ ஊமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையால் சைகை செய்தான். கோவிந்தசாமி, "சரியாகப் பேசடா" என்று கன்னத்தில் ஒரு அடி கொடுத்தார். அக்கணமே அவன் தான் பிட்டு விழாவிற்குச் சென்று வருவதாகக் கூறினான். பிறவி ஊமை கோவிந்த சாமியின் திருக்கரந் தீண்டிய உடனேயே பேசத் தொடங்கியமை ஒரு அற்புதமாகும்.

## கொழும்பு மாநகரில் ஆனைக்குட்டி சுவாமிகள்

கொழும்புக் கோட்டைப் புகையிரத ஸ்தானத்திற்கும் மருதானைப் புகையிரத ஸ்தானத்திற்கும் இடையில் கப்பித்தாவத்தை என்றொரு இடம் உள்ளது. அந்த இடத்தில் இன்றும் ஒரு கோயில் இருப்பதை யாரும் அவதானிக்கலாம். அங்கே ஈனமுத்து என்றொருவர் வசித்து வந்தார். அந்தக்காலத்தில் றிக்சோ இழுக்கும் கூட்டத்தினருக்கு இந்த ஈனமுத்து தலைவர். றிக்சோ இழுப்பவர்கள் நாளாந்தம் தமது உழைப்பிற்கேற்ப ஈனமுத்துவுக்குக் கமிஷன் கொடுப்பார்கள். அதைக் கொண்டே அவர் வாழ்க்கை நடைபெற்றது. கமிஷனில் அரைவாசிக்கு மேல் தனது கள்ளுச் சாராயத்திற்காகச் செலவு செய்வார். தினமும் எந்த நேரமும் குடிபோதையில் மூழ்கி இருப்பவர்களைத் "தினவெறியர்" என்று அழைப்பார்கள். இந்த ஈனமுத்துவும் அத்தகையவரில் ஒருவரே. ஆனால் இந்தக் குடிகாரனுக்குச் சாதுக்கள் சாமிகள் என்றால் ஒரு தனி மதிப்பு. சாதுக்களிடம் பக்தி செலுத்துவதும் அவர் செய்த பூர்வ புண்ணியம் போலும்.

இத்தகைய ஈனமுத்துவிடம் தான் பெரிய ஆனைக்குட்டி சுவாமிகள் பல இடங்களிலும் சுற்றித் திரிந்துவிட்டுக் கடைசியில் வந்து சேர்ந்தார்கள். சுவாமிகள் ஒரு ஜீவன் முக்தர். விருப்பு வெறுப்பற்றவர். ஈனமுத்து தான் உண்பதையும் தான் குடிப்பதையும் சுவாமிகளுக்குக் கொடுப்பார். சுவாமிகள் கொடுப்பது எதுவானாலும் அதனை வாங்கி உண்டு விடுவார். சுவாமிகளைக் தரிசிக்க வருபவர்கள் எத்தனை பேரானாலும் கடன் வாங்கியும் அத்தனை பேரையும் ஈனமுத்து உபசரிப்பார்.

எறும்பூரக் கல்லும் குழியும் என்பது பழமொழி. தினமும் சுவாமிகளுடைய தரிசனைக்காக வரும் ஏழைகளின் தொகை கூடிக்கொண்டே வந்தது. அதனால் ஈனமுத்துவின் கஜானாவும் காலியானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈனமுத்துவின் சொந்தச் செலவிற்கே தட்டுப்பாடு ஏற்பட்டது. இளையான் குடிமாறநாயனாரைச் சிவபெருமான் சோதித்தது போல ஈனமுத்தரைச் சுவாமிகள் சோதித்ததாகவும் இருக்கலாம். கைப்பொருள் இல்லாத காலத்திலும் இளையான் குடிமாறநாயனார் அடியார்களை அன்போடு உபசரிப்பார்கள் என்பதை உலகுக்குக்காட்டவே சிவபெருமான் குபேரனாக வாழ்ந்த மாறனாரை கோவணாண்டியாக்கினார். வீட்டில் ஒரு பொருளும் இல்லாத நேரத்தில் அதுவும் அர்த்தஜாமத்தில் மழை சோனாவாரியாகப் பெய்யும் சமயத்தில் சிவபெருமானே சிவனடியாராக வந்து மாறனாரிடம் பசியாற்றுமாறு கேட்டார். மாறனார் கொடுத்துப் பழகியவர் அல்லவா? வயலில் விதைத்த நெல் மணிகளை வாரிவந்து வறுத்துக் குற்றி அன்னமிட்டுச் சிவபிரானாகிய அடியாரையே திகைக்க வைத்து விட்டார். இத்தகையதொரு நிலை தான் ஈனமுத்துவுக்கும் ஏற்பட்டது.

## ஈனமுத்துவுக்குச் சோதனை

பணவசதி குறைந்ததும் அல்லாமல் கஷ்டத்திற்கு மேல் கஷ்டம் வந்து கொண்டே இருந்தது. என்ன கஷ்டம் வந்தாலும் சுவாமியை விடவும் அவருக்கு விருப்பம் இல்லை. ஒரு நாள் ஈனமுத்து வெளியே சென்றிருந்த சமயம் ஆனைக்குட்டி சுவாமிகள் சுவரில் சாய்ந்த வண்ணமாகக் காலை நீட்டியபடியே மூச்சை அடக்கி உயிர் பிரிந்தவரைப் போலக் காட்சி அளித்தார்கள். ஈனமுத்தர் வந்தார். ஆட்டினார் அசைத்தார். உடல் விறைத்து மரக்கட்டை போலாயிற்று. பேச்சு மூச்சில்லை. தன்னை இக்கட்டான நிலையில் விட்டுச் சாமி பரலோகம் சென்று விட்டார் என ஈனமுத்தர் வெம்பினார். கீழே நிலத்தில் மலசலமும் கழிந்து கிடந்தன. சுவாமிகளின் சமாதி நிலையை உணர்ந்து கொள்ள முடியாத ஈனமுத்து பலவாறாக யோசித்தார்.

ஈமக்கிரியை செய்யவோ கையில் பணம் இல்லை. கடன் கேட்கவும் இடம் இல்லை. அப்படியானால் என்ன செய்ய முடியும்? ஒரு விபரீத எண்ணம் தோன்றியது ஈனமுத்துவுக்கு. சுவாமிகள் இருந்தது ஒரு குடிசையில். அந்தக் குடிசைக்கு நெருப்பு வைத்துவிட்டால் சுவாமியும் அத்துடன் எரிந்து போவார். ஒரு செலவும் இல்லாமலே உடம்பு தகனமாகி விடும். பொலிசார் கேட்டால் குடிசையில் எப்படியோ நெருப்புப் பிடித்துச் சாமியாரும் சாம்பலாய்ப் போனார் என்று கூறிக்கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த யோசனையோடு ஈனமுத்து பட்டணம் சென்றார். ஒருவரிடம் கொஞ்சம் பணம் கடனாக வாங்கினார். முதலில் சாராய தாகசாந்தி செய்து கொண்டார். பின்பு தான் செய்யப் போகும் வேலைக்குத் துணையாக ஒரு போத்தல் சாராயம், ஒரு கட்டு விறகு, ஒரு கலன் மண்ணெய் ஆகியவற்றை வாங்கிக் கொண்டார். எவ்வளவு தண்ணி போட்டாலும் நிதானம் தவறாதவர் ஈனமுத்து என்று அவரது சகாக்கள் பேசிக்கொள்வதுண்டு. ஆனால் இன்றோ ஈனமுத்து நிலை தளம்பும் அளவிற்குக் குடித்து வட்டு வந்தார். வீட்டுக்கு வந்ததும் கொண்டு வந்த பொருட்களை வைத்துவிட்டு சுவாமிகளை பார்த்த படியே கலங்கி நின்றார். சுவாமிகளுக்குக் கிட்டச் சென்று பார்த்தார். சுவாமிகள் இருந்த படியே இருந்தார்கள். மனதிலே ஒரு போராட்டம். ஒரு வேளை அரசாங்கம் நடவடிக்கையில் இறங்கிவிடக் கூடுமானால் தான் சிறைக் கூடத்துக்குள் தள்ளப்பட வேண்டியவனே. சுவாமிகள் பெரிய மகான் அல்லவா? அவர் அறியாமல் எதுவும் நடக்கமுடியுமா? இப்படி எண்ணியபடியே அங்குமிங்கும் உலாவினார் ஈனமுத்து. அவருடைய மனமோ ஒன்றிலும் செல்லவில்லை. இப்படி சில நிமிடங்கள் கழிந்தன.

திடீரெனச் சுவாமிகள் கண்விழித்தார்கள். என்ன? ஈனமுத்து கப்பல் கவிழ்ந்தவன் மாதிரி ஆழ்ந்த ஆலோசனையில் இருக்கிறாய் என்றார்கள். சுவாமிகளுடைய குரல் கேட்டது தான் தாமதம் ஈனமுத்து ஓடிச் சென்று சுவாமிகளுடைய பாதங்களிலே தலையை வைத்துச் சாஷ்டாங்கமாக விழுந்து இரு பாதங்களையும் பற்றிக் கொண்டு வெம்பி வெம்பி அழத் தொடங்கினார். சுவாமி இரு கால்களையும் விடுவித்துக் கொண்டவராய், ஏ, ஈனமுத்து உனக்கு இப்போ என்ன வந்துவிட்டது? இப்படி ஏன் அழுகிறாய்?" நான் செத்துப்போனேன் என்று அழுகிறாயா? என்று கேட்டார்கள்.

"சுவாமி, என்னை மன்னிச்சுட்டேன் என்று ஒரு வார்த்தை சொல்லுங்கோ." நான் என்ன பாதகம் செய்ய இருந்தேன். இதிலிருந்து ஆண்டவனே என்னைக் காப்பாத்திட்டான் என்று சொல்லி 'ஹோ' என்று அழத் தொடங்கினார். சுவாமிகள் கதையை மாற்றினார்கள். ஈனமுத்து சாராயமா கொண்டு வந்திருக்கிறாய்! அதை எடுத்து உடை. இரண்டு பேரும் குடிப்போம் என்றார் புன்சிரிப்புடன். ஈனமுத்துவுக்கு ஆனந்தம் பொங்கியது. போத்தலை உடைத்தார். அச்சா சாராயம் சுவாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடியுங்கள் என்றார். ஈனமுத்தரும் குடித்தார். ஆனால் சாராயம் பச்சைத் தண்ணீராய் மாறிற்று. உடனே ஈனமுத்தர் ஆனந்தக் கண்ணீர் விட்டு அழுதார். இன்று தான் கங்கா ஜலம் தமக்குக் கிடைத்ததாக எண்ணி எண்ணிக் கூத்தாடினார்.

சுவாமியைத் தூக்கி எடுத்தார். மாடுகள் தண்ணீர் குடிக்கும் மடுவண்டை சேர்த்தார். கழுவித்துடைத்தார். விறாந்தையிற் படிந்து கிடந்த மலத்தையும் துப்புரவு செய்தார். அது சந்தன மணம் வீசியது. ஆசனம் ஒன்று கொண்டு வந்து அதன் மேல் சுவாமியை இருத்தினார். நீறு நெற்றியில் இட்டார். சந்தனப் பொட்டும் வைத்து குங்குமமும் இட்டார். சுவாமிகளை விழுந்து வணங்கிய பின் கைகட்டி வாய் பொத்தி ஒரு பக்கமாக நின்றார்.

சுவாமிகள் ஈனமுத்துவை அண்ணாந்து பார்த்து இனி வருவாங்க பெரியாட்கள். காசுவரும், பணம் வரும், பயப்படாதே என்று சொன்னார்.

சுவாமிகளுடைய வாக்குப் பொன் வாக்காயிற்று. அடுத்த நாளே பெரிய பெரிய உத்தியோகத்தர்களும், சிறாப்பர்களும், செட்டிமாரும், முதலாளிமாரும் சுவாமிகளைத் தரிசிக்க போட்டியிட்டுக் கொண்டு வந்தனர். பணம் குவியத் தொடங்கியது. ஈனமுத்துவும் புதுப் பெலனடைந்து புகழ்ச்சியோடு விளங்கலானார்.

சுவாமியும் வீதி சுற்ற அவாவினார். ஓர் வண்டியும் ஒரு சோடி மாடுகளும் வாங்கப் பெற்றன. அதிகாலையில் சுவாமிகள் மாட்டு வண்டியில் எழுந்தருளிச் செட்டியார்கள் இருக்கும் வீதிகளில் பவனி வருவார்கள். நோயாளிகள், வறியவர்கள் வழி நெடுகிலும் வரிசையாக நிற்பர். சுவாமி தாம்பூலம் அருந்தினால் எச்சில் உமிழ்வது வழக்கம் இல்லை. உமிழ்நீர் செந்நிறமாகி வீழ்நீராய் நெஞ்சின் வழியே வழிந்து வரும். அந்த உமிழ்நீரைக் கையால் தடவி எடுத்து நோய்க்கு மருந்தாகப் பாவிப்பர். செட்டிமார் தெருநீளம் காசுப் பெட்டிகளைக் கையில் ஏந்திய வண்ணம் அவாவோடு காத்து நிற்பர். சுவாமியவர்கள் வண்டியில் அமர்ந்த வண்ணம் தாம் விரும்பின ஒரு செட்டியாரின் காசுப் பெட்டியில் இருந்து பணத்தை அள்ளி எடுப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பு ஒரு மூடை 1- ம் நம்பர் சம்பா அரிசியும், சந்தனம், குங்குமம், மருக்கொழுந்து முதலியனவும், நெத்தோலிக் கருவாடும், மாடுகளுக்கு பிண்ணாக்கு, தவிடும், விறகும் மற்றுந் தேவையான சகல பொருட்களும், மதுபானப் போத்தல் ஒன்றும் வாங்கிக் கொண்டு குடிசைக்குத் திரும்புவர். சுவாமிகள் எந்தச் செட்டியாரின் பணப் பெட்டியிலிருந்து பணம் எடுத்தாரோ அந்தச் செட்டியாருக்கு அன்று குரு சந்திர யோகம். அன்று முழுவதும் கணக்கில்லாமல் பணம் பல வழிகளாலும் வந்து கொண்டேயிருக்கும்.

சுவாமிகள் கொண்டு சென்ற அரிசி மூடையை ஆக்கிக் கூட்டங் கூட்டமாக வரும் பிச்சைக்காரர்களுக்கு அன்று முழுவதும் சோறு கொடுத்துக் கொண்டே இருப்பார்கள். அன்று கொண்டு போன பொருட்களில் ஒன்றும் மிஞ்சாது. அடுத்த நாளும் இவ்வாறே நடைபெறும். பிச்சைக்காரர்களோடுதான் சுவாமிகளும் சேர்ந்து உண்ணுவார்கள். அவர்களைப் போலவே இவருக்கும் உணவு பரிமாறப்படும். ஒரு கவளம் அல்லது இரு கவளம் மாத்திரமே தான் உண்ணுவார்கள். மற்றவற்றை ஒரு குளையல் போட்டு சூழ நிற்பவர்களுக்கு ஒரு பிடி வீதம் கொடுத்து விடுவார்கள். சுவாமி சீராகச் சாப்பிடுவதில்லை என்று ஈனமுத்துவுக்கு ஒரு ஏக்கம். சுவாமிகளைச் சாப்பிடுமாறு வற்புறுத்துவார். இங்குள்ளவர்கள் அத்தனை பேரும் சாப்பிடும் போதே நானும் சாப்பிட்டு விடுகின்றேனே. தனியாகவும் சாப்பிட வேண்டுமா? என்று சுவாமிகள் சிரிப்பார்கள். சுவாமிகளுடைய பொருள் பொதிந்த கருத்துக்கள் ஈனமுத்துவுக்கு எவ்வாறு விளங்கப்போகிறது? சுவாமிகள் இப்படிப் பேசும் போதெல்லாம் ஈனமுத்து ஆமாங்க, என்னங்க என்று சொல்லி சும்மா இருந்து விடுவார்.

## மூவர் சந்திப்பு

இந்தப் பிச்சைக்காரக் கும்பல்களோடு கும்பலாகச் சித்தானைக் குட்டியும் சுற்றித் திரிவார். சித்தானைக்குட்டி ஆனைக்குட்டி மகானின் ஞானப் புதல்வன் என்பதை யாரும் அறியார். ஒரு நாள் திடீரெனப் பெரிய ஆனையிடமிருந்து ஒரு உத்தரவு பிறந்தது. பேராதனைக்குப் போகவேண்டும், இரண்டு டிக்கெற் வாங்குங்கள் என்பது தான் அந்த உத்தரவு. இதைப்பற்றிச் சிஷ்யனுக்கு மாத்திரமே விளங்கும். சிஷ்யன் இரண்டு ரிக்கெற்றுடன் வந்து சேர்ந்தார். இருவரும் கோச்சேறிப் பிரயாணமாயினர். சென்ற இருவர் பெரியானையும் சித்தானையுமாகும். புகையிரதம் பேராதனையை அடைந்தது. புகையிரத மேடையிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்ட சட்டை அணிந்த ஒருவர் கையில் பிரம்பொன்றைச் சுழற்றியபடியே உலாவிக் கொண்டிருந்தார். அவர் தான் நவநாதசித்த சுவாமிகள். பிரிந்தவர் கூடினர். அவர்கள் மூவரும் புகையிரத மேடையிலேயே சந்தித்த போது நவநாதசித்தர் தமது கைப்பிரம்பினால் முதலில் தன் தலையிலும் அதன் பின் பெரிய ஆனையின் தலையிலும் கடைசியில் சித்தானையின் தலையிலும் தொட்டுக் கொண்டார்கள். அதில் ஓர் அர்த்தம் இருந்தது. முதலில் தான் சமாதி அடைவதாகவும் அடுத்துப் பெரிய ஆனையும் கடைசியில் சித்தானையும் சமாதி அடைவர் என்பது தான் அதன் தாற்பரியம்.

இவ்வளவு தான் அவர்கள் சந்திப்பு? ஹிந்து ஸ்தானியில் மூவரும் வாழ்த்துக் கூறிக் கொண்டனர். வந்த இருவரையும் புகையிரத மேடையிலேயே விட்டுவிட்டு நவநாதசித்தர் நாவலப்பிட்டி நோக்கி பயணமானார். புகையிரத மேடையில் நின்ற இருவரும் அடுத்த புகையிரதத்தில் கொழும்புக்குப் பிரயாணமாயினர்.

## குருடர் வேத நூலை வாசித்தார்

இந்தியாவிலிருந்து ஒரு பிராமணர் வந்தார். அவர் இரு கண்களினதும் பார்வையை இழந்தவர். சுவாமிகளின் மகிமையைக் கேள்வியுற்ற அவரது சினேகிதர் குருடரைக் கொண்டு வந்து ஈனமுத்துவின் குடிசையில் விட்டுச் சென்றார். குருடர் கையில் ஒரு புத்தகக் கட்டு வைத்திருந்தார். அதன் காரணம் இளமையில நல்ல கண்பார்வையுடையவராய் வேதங்களை யெல்லாம் நன்கு கற்றுணர்ந்தவர் என்பதாகும். பிராமணர்கள் நேரத்திற்கு நேரம் அந்த அந்தகருக்கு உணவு அனுப்பிக் கொண்டிருந்தார்கள். அவரும் உண்டு விட்டுச் சுகமாகத் தூங்கினார். சுவாமிகளோ அவர் ஒருவர் இருப்பதாகவே கவனிக்கவில்லை. இதனால் ஈனமுத்துவுக்குத் தான் கஷ்டமேற்பட்டது. அந்தகரை காலாகாலத்திற்கு மலசலம் கழிப்பதற்கு, குளிப்பதற்கு அழைத்துச் செல்லவேண்டும். குருடருக்கு இரவும் பகலும் ஒன்றே. பகலில் நன்றாகத் தூங்குவார். இரவில் விழித்திருப்பார். இரவில் அடிக்கடி ஈனமுத்துவுக்குத் தொந்தரவு கொடுப்பார். ஈனமுத்து இதனை எத்தனை நாள் தான் பொறுத்துக் கொண்டிருப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருநாள் ஈனமுத்தர் சுவாமிகளைப் பார்த்து 'அப்பா! அந்தப் பிராமணருக்கு ஏதாவது சொல்லி விடுங்களேன். அவர் இங்கு இருப்பதால் எனக்கல்லவா தொந்தரவாக இருக்கிறது, என்று கூறினார்கள்.

சுவாமி புன்முறுவல் பூத்து அருளினார்கள். "ஆமா! ஐயரே! நல்ல கோழிக்குஞ்சு ஒன்று விலைக்கு வாங்கி உமது கையினாலே அறுத்து உரித்து அதைக் கொண்டு ஒரு ரசம் சரிக்கட்ட வேண்டும். அதைக் கொண்டு தான் உமக்கு வைத்தியம் செய்ய வேண்டும்" என்றார். ஐயர் இதைக் கேட்டு அருவருப்போ வெறுப்போ அடையவில்லை. மகான்களுடைய மகிமையில் ஐயருக்கு நிறைந்த நம்பிக்கை உண்டு. அதனால் தான் அவ்வார்த்தைகள் அவருடைய உள்ளத்தில் எவ்வித சலனத்தையும் ஏற்படுத்தவில்லை. ஈனமுத்தருடைய உதவியைக் கொண்டு ஐயர் கோழிக்குஞ்சு ரசத்தைப் பக்குவம் செய்து எடுத்துக் கொண்டு சுவாமிகள் முன்னிலையில் சென்றார். சுவாமிகள் அதனை வாங்கிச் சிறிது பருகினார். 'ஐயரே, இந்தக் கோழிக்குஞ்சு ரசம் நல்ல ருசியாக இருக்கிறதே. நீர் இந்தச் சமையலிலும் கைதேர்ந்த பேர்வழியாக இருக்கிறீரே. இந்தாரும் இதனைக் கண் விழித்துக் கொண்டே பருகும் என்று கூறிக்கொடுத்தார்கள்.

என்ன ஆச்சரியம்! ஐயரின் கண்கள் பார்வையைப் பெற்றன. ஐயர் அதனை வாங்கிப் பருகினார். பழரசம் போலிருந்தது. ஐயரே, எப்படிக் கோழிக்குஞ்சு ரசம் என்று வினாவினார் சுவாமிகள். உடனே ஐயர் சாஷ்டாங்கமாகச் சுவாமிகளின் பாதாரவிந்தங்களைப் பிடித்துத் தமது கண்களில் ஒற்றிக் கண்ணீரால் சுவாமிகளுடைய பாதங்களைக் கழுவினார். "சுவாமி, நான் இது போன்ற சுவையுள்ள பழரசத்தை எப்பொழுதுமே உண்டதில்லை" என்று ஐயர் நாத் தழுதழுக்கக் கூறினார்.

'ஐயரே, உமது புத்தகக் கட்டிலிருந்து ஒரு விரும்பிய புத்தகத்தை எடுத்து விரும்பிய பக்கத்தைப் புரட்டி வாசியும்' என்று சுவாமிகள் கட்டளையிட்டருளினார்கள். ஐயர் புரட்டிய பக்கத்தில் பின்வரும் கருத்துடைய வேதசுலோகம் காணப்பட்டது.

**"உணவளிப்பவர் ஈஸ்வரன். ஆதலால் உணவைப் பழிக்கக் கூடாது. அளிக்கப்பட்ட உணவை உதறித் தள்ளியவன் பெரும் பாவத்துக்காளாவான்."**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயரும் பலமுறை வீழ்ந்து வணங்கி ஆனந்த பாஷ்பம் சொரிந்து சுவாமிகளிடம் விடை பெற்றுக் கொண்டு சினேகிதப் பிராமணரைப் போய்ச் சேர்ந்தார்.

## ஆனைக்குட்டி சுவாமிகள் சமாதி

பெரிய ஆனை சமாதி அடையப் போகும் காலத்தை சித்தானைக்குட்டி சுவாமிகள் உள்ளுணர்வால் அறிந்திருந்தார்கள். அதனால் உரிய காலத்திற்கு முன்பே பெரிய ஆனையை விட்டுவிலகாது சுற்றிக் கொண்டே இருந்தார். பெரிய ஆனையை யாழ்ப்பாணத்திற்குக் கொண்டு சென்று சமாதி வைக்கவேண்டும் என்பது சித்தானையின் எண்ணம் பெரிய ஆனை இதற்குச் சம்மதிக்கவில்லை. கொழும்பிலேயே சமாதியாக வேண்டும் என்பது அவரது திருவுள்ளமாகும். ஒருநாள் சித்தானையை அழைத்து வடக்கே ஒரு பெரியவருடைய சமாதி உள்ளது. (கடையிற் சுவாமிகளைக் குறிப்பிட்டே இங்ஙனம் கூறினார்கள்) அவருடைய மண்ணில் அடிமை மிதிக்கத் தகுதி அற்றவன். இவனுடைய சமாதி இங்கு தான் அமைய வேண்டும் என்றார். சித்தானை இதைப்பற்றி எவ்வித முயற்சியும் செய்யாது வாளா இருந்துவிட்டார். சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவதிகை சென்ற போது, திருநாவுக்கரசர் உழவாரப்படை கொண்டு திருப்பணி செய்து வீரட்டானரை வழிபட்ட இடம் என்று அதனை மிதிக்க அஞ்சினார். வெளியிலிருந்தே வணங்கினார். இச்செய்தியை சுவாமிகளுடைய மேற்படி செயல் நினைவூட்டுகின்றது.

பெரிய ஆனைக்குட்டி சுவாமிகள் ஒருநாள் சித்தானைக்குட்டியுடன் மிக அன்பாகப் பேசிக்கொண்டிருந்தார். அடுப்பில் பெரிய விறகு அடுக்கி கிடாரத்தில் சோறு வெந்து கொண்டிருந்தது. பெரிய கொள்ளிக் கட்டை ஒன்று எடுத்து வருமாறு சித்தானைக்கு உத்தரவு பிறந்தது. சித்தானை எடுத்து வந்து குருநாதனின் கையில் கொடுத்தார். அதைப் பெரியவர் புன்சிரிப்போடு வாங்கி தக தக என்று ஜொலிக்கும் கொள்ளியைச் சித்தானையின் புயத்தில் வைத்து அழுத்தினார். சித்தானையும் அதனைப் புன்சிரிப்போடு ஏற்றுக் கொண்டது. இதுவே பெரிய ஆனை சித்தானைக்குக் கொடுத்த தீட்சையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர் பொன். அருணாசலம் அவர்களுடைய இல்லத்திற்கு அடிக்கடி பெரிய ஆனைக்குட்டி சுவாமிகள் வருவார்கள். அங்கு சாப்பிடுவார். ஒருநாள் அருணாசலம் அவர்கள் சுவாமிகளிடம் உமது மகிமையை எனக்குக் காட்ட வேண்டும் என்று கேட்டார்கள். சுவாமிகள் தமது உறுப்புகளையெல்லாம் தனித்தனியாக இருக்குமாறு காட்சி கொடுத்தார்கள். அன்று தொடக்கம் சேர் பொன். அருணாசலம் அவர்கள் சுவாமி மீது தனி மதிப்பு வைத்திருந்தார்கள்.

ஒருநாள் சுவாமிகள் அவரது இல்லத்திற்குச் சென்ற போது இன்று இந்த இல்லத்தில் மங்கலகரமான காரியம் நடைபெறப் போகிறது என்று சொன்னார்கள். அன்றுதான் திருமதி.சிவானந்தம் தம்பையா அவர்கள் ருதுவடைந்த தினமாகும். இதனை தமது தெய்வீக சக்தியால் உணர்ந்து கூறிய பின் சுவாமிகள் மீது அக்குடும்பத்தினரே நன்மதிப்பு வைத்திருந் தார்கள்.

சமாதி நாளும் நெருங்கிக் கொண்டிருந்தது. குருபரன் ஒருநாள் திடீரெனச் சித்தானையை அழைத்தார். இங்கே சுற்றிக் கொண்டிருக்காமல் முன்னேஸ்வரம் போ என்றார். குருவின் வாக்கைத் தலை மேற் கொண்டவராய் முன்னேஸ்வரம் புறப்பட்டுச் சென்றார். சித்தானை முன்னேஸ்வரத்திலிருக்கும் போதே குருபரன் கொழும்பில் சமாதி அடைந்து விட்டார். சேர் பொன்.இராமநாதன், சேர் பொன்.அருணாசலம், பிரபல ஸ்தர்களான செட்டிமார்கள் யாவரும் ஒன்று சேர்ந்து கொழும்பு முகத்துவாரம் கடற்கரையில் சமாதி வைத்து வணங்கி இன்புற்றனர். சமாதியை உள்ளடக்கி ஒரு பிள்ளையார் கோயிலும் கட்டப்பட்டுள்ளது. இக்கோயிலின் பக்கத்திலுள்ள கடற்கரையில் ஆடி அமாவாசைத் தீர்த்தம் வெகு விமரிசையாக வருடா வருடம் கொண்டாடப்பட்டு வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்தானைக்குட்டி சுவாமிகள்

1949 ஆம் ஆண்டு சித்திரை மாதம் என்று நினைவு. காலஞ் சென்ற கவிஞர் பரமஹம்சதாசனாருடன் விபுலானந்த சுவாமிகளைத் தந்த காரைதீவுக்குச் சென்றிருந்தேன். கண்ணகை அம்மன் கோயில் தரிசனை முடித்து ஆசிரியர் தங்கராஜா அவர்கள் இல்லத்தில் தங்கியிருந்தோம். அங்குச் சித்தானைக்குட்டி சுவாமிகளைப் பற்றிய பேச்சு வந்தது. என்னுடன் கூட இருந்தவர்கள் அத்தனை பேரும் சுவாமிகளைப் பல முறை தரிசித்தவர்கள். நான் ஒருவன் மாத்திரமே அப்பாக்கியத்தைப் பெறாதவனாக இருந்தேன். சுவாமிகளுடைய பேச்சு வந்ததும் உடனையே நான் சென்று தரிசனை செய்ய வேண்டுமெனப் பெரிதும் விரும்பினேன். அங்கிருந்தவர்கள் பல முறை தரிசனம் பெற்றவர்களான படியினால் போலும் அவ்வளவு ஆர்வம் காட்டவில்லை. அவர்கள் அடுத்தநாட் காலையில் போகலாம் என்றார்கள். நானோ உடனே போக வேண்டும் என்று பிடிவாதமாக நின்றேன்.

எனது ஆர்வத்தைக் கண்டு சுவாமிகளிடம் என்னை அழைத்துச் சென்றனர். நாங்கள் நால்வர் சென்றதாக நினைவு. நாங்கள் சுவாமிகளிடம் சென்ற போது நன்றாக இருட்டி விட்டது. சுவாமிகள் குடியிருந்த வீட்டின் முன்பக்கச் சுவரில் கறுப்பு எழுத்துக்களினால் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது.

**ஸ்ரீ ஆ.சி.சித்தானைக்குட்டி சுவாமிகள்,**
**கண்டி, இந்தியா இராமநாதபுரம் சமஸ்தானம்,**
**காரைதீவு, மட்டக்களப்பு, சிலோன்.**

உள்ளே சென்றோம். சுவாமிகள் மௌனமாக இருந்தார்கள். அவர் முன்னிலையில் பத்துப்பன்னிரண்டு பேர்கள் கண்மூடித் தியானத்திலிருந்தார் கள். நாமும் சென்று வீழ்ந்து வணங்கி எழுந்த போது சுவாமிகள் கைதூக்கி ஆசீர்வதித்தார்கள். நாமும் சிறிது நேரம் தியானத்தில் அமர்ந்தோம். பகவான் ரமணமகரிஷிகள் திருச்சமூகத்தில் இருக்கும் போது ஏற்பட்ட ஒரு உள்ளுணர்வு சுவாமிகளுடைய திருச்சமூகத்திலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பட்டது. அதனால் அடிக்கடி சுவாமிகளுடைய தரிசனையைப் பெற்று எமது உள்ளுணர்வை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று அந்த நேரத்தில் ஓர் எண்ணம் எழுந்தது. அந்த எண்ணம் தோன்றியவாறே மறைந்தும் விட்டது. சுவாமிகள் சரியாக மூன்று ஆண்டுகளில் சமாதி அடைந்து விட்டார்கள் என்பதைக் கேள்வியுற்ற போது தான் எனது சோம்பலை நினைந்து வருந்தினேன். உரிய சந்தர்ப்பத்தை இழந்து விட்டேனே என்று இன்றும் நினைந்து வருந்துகின்றேன்.

அதற்குப் பிராயச்சித்தமாகவே சுவாமிகளுடைய திருச்சரிதத்தை எழுதும் வாய்ப்புக் கிடைத்துள்ளது. என்று அதனை நினைந்து நினைந்து உள்ளம் உருகுகின்றேன்.

## சித்தானைப் பெயர் தரும் கருத்து

சுவரில் எழுதிய வசனங்களின் தாற்பரியத்தை விளங்கிக் கொள்ள ஆசைப்பட்டேன். பலரும் பலவிதமாக உரைத்தனர். இந்த விலாசத்தை யாரோ ஒரு மகான்தான் எழுதிச்சென்றுள்ளார் என ஒரு அன்பர் கூறினார். சித்தானைக்குட்டி சுவாமிகள் சொல்லச் சொல்ல எழுதப்பட்ட வாக்கியங்கள் அல்ல. வந்தவருடைய உள்ளுணர்வில் தோன்றியவாறே எழுதிச்சென்றுள்ளாராம். இதனைப் பற்றிச் சுவாமிகளிடம் ஒரு அன்பர் வினவிய போது எழுதியவனிடம் தான் பொருள் கேட்க வேண்டுமென்று கூறினார்களாம்.

சுவாமியவர்கள் யார்? ஏன் இங்குற்றார்? என்ன செய்து கொண்டிருக்கிறார்? என்பன போன்ற வினாக்களுக்குச் சரியான விடையாக அமைந்திருப்பவையே அந்த வாசகங்கள் என்பது ஆசிரியர் எதிர்மன்னசிங்கம் அவர்களுடைய அபிப்பிராயமாகும். ஆசிரியர் அவர்கள் 1930 ஆம் ஆண்டு மார்கழி மாதம் தொடங்கி 1940 - ஆம் ஆண்டு மார்கழி மாதம் வரை உள்ள பத்து ஆண்டு காலமும் சுவாமிகளோடு நெருங்கிப் பழகி, உடன் உறைந்து பல உண்மைகளை அனுபவத்தில் பெற்றுக்கொண்ட பாக்கியசாலி ஆவர்.

சுவாமிகளின் முழுப்பெயரையும் விலாசத்தையும் அவை குறிப்பனவாக இருந்தன. இப்போது அவ்வீடு அழிந்து போனமையினால் அவ்வாசகங்களைக் காணமுடியவில்லை. அதை ஒரு முறையேனும் பார்த்தவர்களுடைய உள்ளத்தில் அது நீங்கா இடம்பெற்றிருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதில் யாதோர் சந்தேகமும் இல்லை. ஆ என்பது ஆனைமுகன், ஆறுமுகன் இருவரையும் சி என்பது சிவத்தையும் குறிக்கின்றன. ஆனைக்குட்டிச் சித்தரின் ஞானப் புதல்வன் சித்தானைக்குட்டிச் சுவாமிகள். ஆகவே ஆ.சி, என்பது ஆனைக்குட்டிச் சுவாமிகளைக் குறிக்கும் என்பர். இன்னும் ஆதிசிவனையும் ஆனைசிவனையும் குறிக்கும் என்றும் கூறுவர். பெரிய ஆனைக்குட்டியின் குட்டி சித்தானை. ஆனைக்குட்டி சுவாமிகளின் ஞானப் புதல்வன் என்பதையே சித்தானை என்னும் சொல் குறிக்கிறது. சித்தானை என்ற பெயரைக் குருநாதராகிய பெரிய ஆனைக்குட்டி சுவாமிகளே தமது சீடருக்குச் சூட்டினார்கள்.

கண்டி என்ற சொல் இன்று பட்டினத்தைக் குறிக்கின்றது. முன்னொருகாலம் கண்டி இராச்சியத்தைக் குறித்தது. அதற்கு முன்பு மாகாணத்தையும் குறித்து நின்றது. வெகுகாலத்திற்கு முன்பு இலங்கையைக் கண்டி என்றே அழைத்து வந்தார்கள். இன்றும் இந்தியாவிலுள்ளவர்கள் இலங்கையைக் கொழும்பு என்று அழைப்பதைப் பார்க்கின்றோம்.

'கண்டிக் கதிர்காம வேலோனே' என்ற பாடலில் கண்டி என்பது இலங்கையையே குறிக்கின்றது. 'கந்த' என்ற சிங்களச் சொல் மலையைக் குறிப்பது. கந்த என்ற சொல்லே கண்டி என மருவி நின்றது எனவும் கூறுவர்.

முன்னேஸ்வரம் கோயிலில் இருந்து சாதனை புரிந்த சித்தானைக்குட்டி சுவாமிகளுக்குக் குருநாதன் பேரொளியாகக் காட்சி கொடுத்தான். குருநாதருடைய சமாதி கைகூடிவிட்டது என்பதை உணர்ந்த சுவாமிகள் குருநாதனுடைய சமாதியில் 40 நாட்கள் இருந்தார்கள். குருநாதனுடைய கட்டளையை எதிர்பார்த்து 40 நாட்கள் கடுந் தபசு ஆற்றினார்கள். நாற்பதாம் நாள் கனவில் நவநாதசித்தரின் சமாதிக்குச் செல் என்ற கட்டளை பிறந்தது. சுவாமிகள் உடனேயே புறப்பட்டு விட்டார்கள்.

கையிலோ பணம் இல்லை. கால்நடையாகவே பிரயாணத்தை ஆரம்பித்தார்கள். வழிநடந்த அலுப்பு ஒரு பக்கம்; பசி இன்னொரு பக்கம் கண் வருத்தம் பிறிதோர் பக்கம்; இந்த நிலையில் ஒரு கடைப் பக்கத்தில் அமர்ந்திருந்தார். அக்கடை ஒரு சிங்களவருடையது. சுவாமிகள் ஒரு திருடராய் இருக்கக்கூடுமென்று கடைக்காரர் சந்தேகித்தார். அதை உணர்ந்த சுவாமிகள் அவ்விடத்தை விட்டு நீங்கினார்கள். இந்த நிலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாராயம் குடிக்க வேண்டும் என்ற ஒரு ஆசை பிறந்தது. ஆசை வளர்ந்துகொண்டே வந்தது. குருநாதனைக் கருத்தில் நினைந்தார். கோபித்தார். சாராயம் குடிக்க ஒரு வழி ஏற்படாதா என்று தமக்குள்ளேயே கர்ச்சித்தார். திடீரென வழியை உற்று நோக்கினார். கைக்குட்டை ஒன்றில் முடிந்த படி 10 ரூபா கிடந்தது. குனிந்து எடுத்தார். குருநாதனைக் கோபித்தது பற்றி மன்னிப்பும் கேட்டுக் கொண்டார். அவ்வழியிலே பெண்கள் பலர் தண்ணீர் எடுப்பதற்காகப் போவதும் வருவதுமாக இருந்தார்கள். இடைவிடாது பலர் நடமாடித் திரிந்தனர். இத்தனை பேருடைய கண்ணிலும் சிக்காது அந்தப் பத்து ரூபா சுவாமிகளுடைய கண்ணிலே தென்பட்டது தான் அற்புதத்திலும் அற்புதமாகும்.

அப்பணத்தைக் கையில் எடுத்ததும் நடைவேகம் அதிகரித்தது. சாராயத் தவறணை ஒன்று கண்ணுக்குத் தென்பட்டது. அங்குச் சென்றார். போதிய அளவு சாராயம் குடித்தார். புதிய தென்பு ஏற்பட்டு விட்டது. மேலும் வேகமாக நடக்கத் தொடங்கினார். நேரம் இருண்டு கொண்டு வந்தது. எதிரே ஒரு P.W.D. ஓவசியர் வீடு தென்பட்டது. அங்கே போனார். அவர் ஒரு யாழ்ப்பாணத்தவர். சுவாமிகளை அன்புடன் வரவேற்று உபசரித்து அன்றிரவு தங்குவதற்கேற்ற வசதிகள் எல்லாம் செய்து கொடுத்தார். சுவாமிகளுடைய கண்ணுக்கு மருந்து கட்டி அது மாறும் வரைக்கும் தம்மோடே வைத்துக் கொண்டார். சுவாமிகளுக்கு நல்ல சுகம் வரும் வரை ஊணும் உடையும் கொடுத்துப் பராமரித்தார். கண்ணோய் நன்றாக மாறிய பின் நாவலப்பிட்டிக்குச் சென்றார். அங்கிருந்து குயீன்ஸ்பரி போய்ச் சேர்ந்தார்.

## குயீன்ஸ்பரியில் சித்தானை சுவாமிகள்

நவநாதசித்தர் சமாதியாவதற்கு முன்பு பெருமாள் அம்மையாரிடம் சித்தானைக்குட்டி சுவாமிகள் இங்கு வரக்கூடும் என்று கூறியிருந்தார்கள். அம்மையார் சுவாமிகளைப் பற்றி அறிய ஆவல் கொண்டு அவர் எப்படி இருப்பார் என்று கேட்டார். அதற்கு நவநாதசித்தர், 'அவர் ஒரு காலை நொண்டிக் கொள்வார். அம்மா தர்மம் என்று கேட்பார், அவர் தான் எல்லாச் செல்வங்களும் நிறைந்த கப்பல். ஆனால் பெண்ணுக்குங் கேட்பார். தம்மை மறைத்துக் கொள்வதற்காகவே அங்ஙனம் பேசுவார். நீங்கள் மாத்திரம் அதிலே மயங்கி ஏமாந்து விடக்கூடாது. அவரைப் பார்த்த உடனையே உங்கள் உள்ளத்திலே இவர் தான் சித்தானைக்குட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமிகள் என்று தெரிந்து கொள்வீர்கள' என்றார். இந்தக் குறிப்புகள் எல்லாம் அம்மையாரின் மனத்திலே ஓர் உருவத்தைக் கொடுத்துப் பதிந்து கொண்டன.

குயீன்ஸ்பரி சென்று சேர்ந்த சுவாமிகள் நேராக நவநாதசித்தரின் சமாதிக்குச் சென்றார்கள். முருகப் பெருமானுக்கு வணக்கம் செலுத்திய பின் சித்தருடைய சமாதிக்கு முன்பு வந்து தியானத்தில் அமர்ந்தார்கள். பக்கத்திலே ஓம் என்ற ஒலியுடன் அருவி நீர் சலசலத்து ஓடிக் கொண்டிருந்தது. இயற்கை அன்னையின் அரவணைப்பிலே தியானம் உடனே கைகூடிற்று. பல மணித்தியாலங்கள் சுவாமிகள் தம்மை மறந்து ஆனந்த நிலையிலே காணப்பட்டார்கள். தோட்டத்து மக்களில் சிலர் சுவாமிகளைச் சுற்றி வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றார்கள். சுவாமிகள் கண் விழித்தார்கள். நவநாதா என்று சொல்லிக்கொண்டே எழுந்தார்கள். "நவநாதா" என்ற ஒலியைக் கேட்டதும் சூழ நின்றவர்கள் எல்லோரும் மந்திரத்தால் கட்டுப்பட்டவர் போலாயினர். இன்றும் அத்தோட்டத்து மக்களுடைய நாவிலே நவநாதருடைய திருப்பெயர் ஒலித்துக்கொண்டே இருப்பதைக் காணலாம். எதற்குக் கட்டுப்படாதவர் களும் நவநாதருடைய நாமத்தைக் கேட்டவுடன் அதற்குக் கட்டுப்பட்டு விடுவார்கள்.

சுற்றி நின்ற தொழிலாளர்களில் ஒருவர் சாமி கங்காணி அம்மா உங்களைச் சாப்பாட்டிற்குக் காத்துக் கொண்டிருப்பார்கள். கெதியாகப் போங்கள் என்று கூறியதோடு தானே கூட்டிச் சென்று வீட்டில் விடுவதாகவும் கூறினார். தொழிலாளி தூரத்தில் நின்றே வீட்டைக் காட்டிவிட்டுத் தன் பாட்டிலே போய்விட்டார். பெருமாள் அம்மாவின் வீடடைந்த சுவாமிகள் 'அம்மா தர்மம்' என்று குரல் கொடுத்தார்கள். வீட்டினுள் இருந்த அம்மையாரின் காதிலே இச்சத்தம் கணீரென்று விழுந்தது. எப்பொழுதோ கேட்ட குரல் மாதிரி ஒரு பிரமை.

அம்மையார் சத்தம் கேட்டதும் கதவைத் திறந்து வெளியே வந்தார்கள். சுவாமிகளின் திருத்தோற்றத்தைக் கண்டதுமே ஆளைப் புரிந்து கொண்டார்கள். சுவாமிகளின் வருகைக்காக இங்கு எவ்வளவு காலம் காத்துக் கிடக்கின்றேன். உள்ளே வாருங்கள் சுவாமி என்று அழைத்து சுவாமிகளின் பாதம் விளக்கி பூ எடுத்து அர்ச்சித்து யான் செய்த தவம் இன்று தான் பலித்தது நவநாதப் பெருமானின் வார்த்தை இன்று தான் கைகூடியது என்றெல்லாம் கூறினார்கள். சுவாமிகளுடைய பசியைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்கிச் சுவாமிகளுக்கு வேண்டிய உபசரணைகளையெல்லாம் குறைவறச் செய்து வந்தார்கள். அம்மையாரின் பிள்ளைகள் எல்லோருமே சுவாமிகளிடம் பெரிய வாரப்பாடுடையவர்களாக விளங்கினார்கள்.

சுவாமிகளுக்கு என்னென்ன தேவையோ அத்தனையும் அக்குடும்பத்தினர் மனமுவந்து நிறைவேற்றினர். சுவாமிகள் நவநாதருடைய சமாதியிலும், நவநாதர் தவம் செய்த தபோவனத்திலும் மாறி மாறி நிட்டைகூடி இருந்தார்கள். நவநாதசித்தருடைய சமாதி முருகன் சந்நிதியிலும் பெரிய ஆனையின் சமாதி விநாயகப் பெருமான் சந்நிதியிலும் அமைந்துள்ளதைச் சித்தானைக்குட்டி சுவாமிகள் எண்ணி எண்ணி உள்ளம் பூரித்தார்கள். வடக்கே சடையில் குருநாதனும் மேற்கே ஆனை குருநாதனும் தெற்கே நவநாதசித்தரும் சமாதியில் நிலைபெற்றிருப்பதை எண்ணி எண்ணித் தம்மைப பற்றிக் குருநாதன் கூறிய தீர்க்கதரிசனத்தையும் எண்ணி எண்ணி மகிழ்ந்தார்கள். குருநாதன் கூறிய சமாதி நிலை தமக்குக் கைகூடும் நாள் எந்நாளோ என்று ஏங்கினார்கள்.

## குருதேவரின் தீர்க்கதரிசனம்

குருதேவரின் ஆசீர்வாதம் பெறுவதற்காகச் சித்தானை ஈனமுத்தரின் குடிசையைச் சுற்றித் திரிந்த காலம் ஒன்றிருந்தது. பிச்சைக்காரரோடு பிச்சைக்காரனாகச் சேர்ந்து போய் குருதேவரின் கண்களில் படும் வண்ணம் உட்கார்ந்து சாப்பிடுவார். சீடன் எதற்காகச் சுற்றுகிறான் என்பதை குருதேவர் உணர்ந்தார். தனிமையில் அழைத்தார். ஆசீவாதம் செய்து பின்வரும் தீர்க்கதரிசன வார்த்தைகளையும் கூறினார்.

**"புளியமரத்து வீட்டுக்காரி; கள்ளன் பெண்பிள்ளையை எடுப்பாய், வம்பு வரும்' வழக்கு வரும், கெட்டுக் கீரை விற்று, பறங்கித்துரை, கோணாமலை "எ" னாவைப்பார்க்கிலும் "பெ" னாவாய் இருப்பாய்.**

'எ'னாவைப் பார்க்கிலும் 'பெ' னாவாய் இருப்பாய் என்றால் என்னைப் பார்க்கிலும் பெரியவனாய் இருப்பாய் என்பது பொருள், இத்தீர்க்கதரிசன வார்த்தைகள் சித்தானைக்குட்டி சுவாமிகளின் வாழ்க்கையில் எவ்வாறு பலித்தன என்பதை இனிக் கவனிப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமிகள் குயீன்ஸ்பரியிலும் சுற்றிலுமுள்ள தோட்டத் தொழிலாளர் மத்தியிலே பல சித்துகள் விளையாடி அவர்களை எல்லாம் ஆண்டவனை மறவாத அடியார்களாக்கிக் கதிர்காம யாத்திரை புறப்பட்டார்கள். கால் நடையாகவே யாத்திரை செய்து கதிர்காமம் சென்று சேர்ந்தார்கள். கதிர்காமம் செல்லும் முன்பே கதிர்காம முருகனைப் பற்றி சுவாமிகள் சில பாடல்கள் பாடினார்களாம். அதனைக் காதால் கேட்டதாகக் கூறுகிறார்கள் சிலர். ஆனால் யாராவது எழுதிவைத்தார்களில்லை. ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சதேவருக்கு வாய்த்த சீடர்கள் அன்றாடம் தமது குருதேவரோடு நடத்திய சம்பாஷணைகளைத் தேதிவாரியாக ஒன்றும் விடாமற் குறித்து வைத்திருந்தார்கள். அங்ஙனம் அவர்கள் குறித்து வைத்திருந்த உயர்ந்த கருத்துக்கள் இன்று இராமகிருஷ்ண உபநிடதமாகவே போற்றப்படுகின்றது. ஆனால் சித்தானைக்குட்டி சுவாமி களின் பின்னால் திரிந்த நன்கு கற்ற சீடர்கள் தாமும் ஒரு டயறி வைத்திருந்து அவ்வப்போது நிகழ்ந்த நிகழ்ச்சிகளை சுவாமிகளுடைய திருவாக்குகளைக் குறித்து வைத்தாரில்லை. அப்படி எந்தச் சிஷ்யனின் உள்ளத்திலும் இக்கருத்தை எழாமல் செய்ததும் சுவாமிகளின் திருவிளையாடல்களில் ஒன்றாகும். கள்ளுண்டு, புலால் உண்டு, காமவசப்பட்டவரைப் போல் நடித்து வெளி ஆசாரசீலர்களைத் தம்மிடத்து நெருங்க விடாது வைத்திருந்தார். சிலர் வெளி ஆசாரத்தை மாத்திரம் கவனித்து உள்ளத்தை நரகக்காடாக்கி வைத்திருந்தார்கள். அத்தகையோருக்குத் தகுந்த பாடமாக இருந்ததற்காகவே சுவாமிகள் வெளி ஆசாரம் அற்றவர்போல் நடித்து உள்ளுணர்வில் உயர்ந்து நின்றார்கள்.

சுவாமிகளுடைய இத்திருவிளையாடலைப் பலரால் புரிந்து கொள்ள முடியவில்லை. சுவாமிகள் நீண்ட காலம் வாழ்ந்து சமாதி அடைந்த காரைதீவு மக்களில் பலர் சுவாமிகளுடைய வெளிவேடத்தை மாத்திரம் பார்த்து அருவருப்புடையவர்களாகிச் சுவாமிகளைப் பயன்படுத்தத் தவறிவிட்டார்கள் என்றால் மற்றவர்களைப்பற்றிச் சொல்வானேன்? சுவாமிகளுடைய மகிமையைக் கேள்வியுற்றுச் சிலர் சுவாமிகளைத் தரிசிக்கச் செல்வர். செல்கிறவர்களுடைய உள்ளப்பாங்கைச் சுவாமிகள் கண்ணாடியில் பார்ப்பது போல் பார்த்து விடுவார்கள். ஏ, ஒரு சாராயப் போத்தலைக் கொண்டு வா என்பார்கள். இது வந்தவருக்கு அருவருப்பாக இருக்கும். வந்தவருடைய உள்ளத்தில் சாமியார் என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று ஒரு உருவம் இருக்கும். அவர் கொண்டு வந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செல்வக்கதிர்காமத்தில் அனுபவம்

சில தினங்களின் பின் சுவாமிகள் வேறு இரு அடியார்களுடன் செல்லக் கதிர்காமம் சென்றார். ஆற்றங்கரையில் மூவரும் உறங்கினர். அதிகாலை மணி மூன்று இருக்கும். பக்கத்தில் ஏதோ ஒரு சத்தம் கேட்டு மூவரும் விழித்தெழுந்தனர். அவர்கள் முன்னால் மலை போல் யானை ஒன்று நின்றது. பயத்தினால் பக்கத்தில் இருந்த இருவரும் விழுந்து அடித்துக் கொண்டு ஓடிச்சென்று மறைந்து விட்டனர். சுவாமிகள் கைவசம் இருந்த கற்பூரத்தைக் கொழுத்தி தீபாராதனை செய்தார். ஆனைக்கடவுளை அடி பணிந்து ஏத்தினார். சாஷ்டாங்கமாக வீழ்ந்து வணங்கி எழுந்தார். ஆனையைக் காணவில்லை. அந்தக் காட்டின் நடுவே அந்த நேரத்தில் சேவல் ஒன்று கூவும் சத்தத்தைச் சுவாமிகள் கேட்டார்கள்.

ஆனையாக வந்து காட்சி கொடுத்தவர் குருநாதராகிய பெரிய ஆனை என்றும், சேவல் கூவியதன் கருத்து முருகப்பெருமானுடைய திருக்காட்சிக்கு அடையாளம் என்றும் கூறினார்கள். இதன் பின் வருடந்தோறும் சுவாமிகள் கதிர்காம யாத்திரை செய்வது வழக்கமாயிற்று.

## சேதும்மாவின் சந்திப்பு

திசைமகாரகமவில் முத்துக்கந்தையா என்பவர் P.W.D. ஓவசியராக இருந்தார். அவருடைய மனைவியார் பெயர் சேதம்மா என்பது. அம்மையார் காரைதீவைச் சேர்ந்தவர். இவர்களுக்குப் பிள்ளை குட்டிகள் யாரும் இல்லை. கந்தையா் ஓவசியர் பெருங்குடிகாரன். உழைப்பெல்லாம் குடிக்கே செலவு செய்தார். அம்மையார் கடவுள் பக்தியுடையவர். சிவனடியார்களைக் கண்டால் மனமுவந்து வரவேற்று உபசரித்து அனுப்புவார். முத்துக்கந்தையா குடியில் இன்பம் கண்டார். அம்மையார் அடியார்களை உபசரிப்பதில் ஆனந்தம் அடைந்தார். குடிகாரனோடு ஒரு பெண் என்ன இன்பத்தை அனுபவிக்க முடியும்.? மனிதன் இயல்பிலேயே விலங்கு மனத்தை உடையவன். தினமும் குடியிலே மூழ்கி இருப்பவனிடம் மனிதத்தன்மையை எப்போ காணமுடியும்? ஓவசியர் வீட்டில் இருக்கும் போது யாராவது சாதுக்கள் வந்தால் அவர்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்றத்தில் வைத்தே ஏதாவது இரக்சியமாகக் கொடுத்து அனுப்பி விடுவார். ஔவசியர் வீட்டில் இல்லாதபோது அடியார்கள் வந்தால் உள்ளே அழைத்து அவர்களைப் பாதம் விளக்கி பசியாற்றி கையிலும் ஏதாவது கொடுத்து அனுப்புவார்.

ஔவசியருக்குச் சாதுக்களைக் கண்டால் பிடிக்காது. அது அவருடைய இயற்கை. அம்மையார் ஔவசியர் முன்னிலையில் ஒரு வித வாழ்க்கையும் அவர் இல்லாத நேரத்தில் இன்னொரு வித வாழ்க்கையுமாக இரட்டை வாழ்க்கை வாழவேண்டி ஏற்பட்டது. குடிகாரனாயிருந்தாலும் கணவன் கணவன் தானே. அதை மனதுட் கொண்டவராய்க் கணவனுக்குச் செய்யும் கடமைகளில் எதுவும் குறையில்லாது செய்யும் கற்புடைய அம்மையாராய் விளங்கினார். கணவனுக்குச் சாதுக்களை ஆதரித்தல் விருப்பமில்லாததாயினும் தமது ஆன்ம ஈடேற்றத்திற்காக அதனையும் செய்து வந்தார்.

திசைமகாரகமவில் இருந்து கதிர்காமம் செல்லப் புறப்பட்ட சித்தானைக்குட்டி சுவாமிகள் ஔவசியர் முத்துக்கந்தையாவினுடைய வீடடைந்தார்கள். அம்மையார் சுவாமிகளை வரவேற்று உபசாரங்கள் செய்தார்கள். சுவாமிகளுடைய தோற்றம் அம்மையாருடைய உள்ளத்தைக் கவர்ந்து விட்டது. சிவபெருமானே தான் இந்தக் கோலத்தில் வந்தாரோ என்று அம்மையாருடைய உள்ளத்தில் ஒரு எண்ணம். முதல் முறைதான் சுவாமிகளைத் தரிசித்தார் என்றாலும் நீண்ட நாட்கள் அன்போடு பழகியவர்களைத் தரிசித்தது போல் மனதில் ஒரு உணர்வு.

'சுவாமி, கதிர்காமம் கொடியேற இன்னும் நாட்கள் பல இருக்கின்றன. அதுவரைக்கும் சுவாமிகள் இங்கு தங்கிச் செல்லலாமே' என்று அம்மையார் கேட்டார். 'சுவாமிகளுடைய வருகையால் நான் புனிதவதி ஆனேன். என் வீடும் புனிதம் அடைந்தது. சுவாமிகள் இங்கு தங்கினால் எனது கணவரும் திருந்தி விடுவார்' என்றார். சுவாமிகள் புன்முறுவல் பூத்தார். 'நீ நினைப்பது போல், நான் இங்கிருந்தால் நீ சுகம் அநுபவிக்க மாட்டாய். சன்னியாசிகள் குடும்பஸ்தர்களுடைய வீட்டில் தங்கக்கூடாது. அது சன்னியாச ஆச்சிரமத்திற்குப் பிழை. சன்னியாசிகளை இல்லறத்தவன் தான் காப்பாற்றுகிறவன் என்றாலும் ஒரு நேரச் சாப்பாட்டிற்கு மேல் அந்த வீட்டில் அவன் நிற்கக் கூடாது. ஒரு ஊரில் மூன்று நேரச் சாப்பாட்டிற்கு மேல் நிற்கக் கூடாது. ஆனபடியினால் நான் என்பாட்டிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்று பசிக்கும் போதெல்லாம் இங்கு வருவேன் என்று கூறிச் சென்றுவிட்டார். சுவாமிகள் அங்கு அடிக்கடி வந்து முற்றத்திலேயே நின்று அம்மையாரின் உபசாரத்தைப் பெற்றுத் திரும்பி விடுவார்.

அம்மையார் சுவாமிகள் மீது தமது உயிரையே வைத்திருந்தார். சுவாமிகள் வரும் நாட்களில் அம்மையாருக்குத் தனியான ஒரு மகிழ்ச்சி. சுவாமிகள் வராவிட்டால் எப்போ வருவார் வருவார் என்று ஏக்கத்தோடு காத்திருப்பார். அம்மையாரின் சக்தி போலும், சுவாமிகள் அடிக்கடி வந்து தரிசனை கொடுப்பார். அம்மையார் சுவாமிகள் மீது இவ்வளவு அளவு கடந்த அன்பு வைத்திருப்பது ஓவசியருக்குப் பிடிக்கவில்லை. அம்மையார் மீது சந்தேகப்படவும் தொடங்கினார். இது பற்றித் தினமும் ஏதாவது சச்சரவு நிகழ்ந்து கொண்டே இருந்தது.

ஒரு நாளிரவு ஓவசியர் நல்ல குடிவெறியில் வந்தார். அந்தச் சாமி இங்கே வந்தானா? என்று கேட்டுக் கொண்டே வந்தார். அம்மையார் அவர்கள் யாதொன்றும் பேசாது தனது கருமத்தில் ஈடுபட்டிருந்தார்கள். ஓவசியருக்கு மனைவியின் மௌனம் மேலும் கோபத்தை மூட்டியது. கட்டிய கணவனிலும் பார்க்க அந்தப் பரதேசிப் பயலிடம் உனக்கு என்ன கூட்டுறவு என்று அம்மையாரை அடிக்கத் தொடங்கினார். வெறி முறியும் வரை ஓவசியர் அடித்தார். அம்மையார் மூர்ச்சித்து விழுந்தவர் அப்படியே நித்திரையாகி விட்டார்.

வழக்கமாக அம்மையார் நான்கு மணிக்கே எழுந்து தமது கடமைகளைச் செய்பவர், இன்று ஆறுமணியாகியும் நித்திரைவிட்டு எழவில்லை. வேலை செய்பவர்களும் முற்றத்தில் வந்து கூடிவிட்டனர். சுவாமிகள் வழக்கம் போல் வந்து முற்றத்தில் நின்றார். சமையல்காரன் ஓடோடியும் வந்தான். "சுவாமி தயவு செய்து இந்த இடத்தை விட்டுச் சென்று விடுங்கள். இராமுழுவதும் அந்த அம்மா சுவாமிகளால் வாங்கிய அடியோ சொல்ல முடியாது" என்றான். "சுவாமி, ஐயா எழுந்து வரும்போது உங்களைக் கண்டால் தவறாமல் அடித்தே விடுவார். எங்களால் அதைப் பார்க்க முடியாது சுவாமி, தயவு செய்து இங்கு நிற்காமல் எங்காவது சென்று மறைந்து விடுங்கள்" என்று துரிதப்படுத்தினான் சமையல்காரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவத்துக்கும் காணும் உருவத்திற்கும் மிகுந்த வேறுபாடு காணப்படும். ஒருவருக்கும் சொல்லாமலே எழுந்துவிடுவார். சுவாமிகள் அத்தகையோரைக் கண்டு ஒரு புன்சிரிப்போடு அவர்கள் விஷயத்தை முடித்துவிடுவார்.

## கதிர்காமத்தில் பெற்ற காட்சி

கதிர்காமத்தில் மாணிக்ககங்கை நீராடி, கதிர்காமத்தையனின் தரிசனை செய்த பின் மாணிக்கப்பிள்ளையாரின் பக்கத்திலுள்ள கதவோரமாக முருகப்பெருமானின் திருக்காட்சி கிட்ட வேண்டும் என்று உண்ணாவிரதத்தோடு தவங்கிடந்தார். பல வாரங்கள் கழிந்து விட்டன. சுவாமிகள் தமது வைராக்கியத்தைக் கைவிடவில்லை. ஒருநாள் கதிர்காம முருகப்பெருமான் கோயில் பெரிய கப்புறாளை கோயிலுக்குள்ளிருந்து வெளியே வந்து சுவாமிகளிடம் சென்றார். 'உமது தந்தையார் உம்மை உள்ளே வருமாறு கூறினார்' என்றார். உடனே சுவாமியவர்கள் கப்புறாளையின் பின்னே சென்று கோயிலினுட் புகுந்தார். கதிர்காமத்தையன் சுவாமிகளை ஒரு சுரங்க வழியாக இட்டுச் சென்றார். ஏழு மலைகளிலுமுள்ள அற்புதக் காட்சிகளை ஒவ்வொன்றாய்க் காட்டினார். கடைசியாய் ஒரு மலையிலுள்ள சுனையினின்றும் நீரை விரலில் எடுத்துச் சொட்டுச் சொட்டாக மூன்று தரம் வாய்க்குள் விட்டார். அத்துடன் உண்ணா நோன்பிருந்த இளைப்புக் களைப்பு எல்லாம் சூரியனைக் கண்ட பனி போல் மறைந்து விட்டது. பிற்காலத்தில் சுவாமிகள் உணவைக் குறைத்தும் தொடர்ந்து பல நாட்களுக்கு உணவின்றியும் இருந்த போது உடலில் எவ்வித மாற்றமும் இல்லாமல் இருப்பதற்குக் காரணம் இந்த அமிர்தத் துளிகள் தான் என்று கூறுவாராம். கடைசியாகக் கதிர்காமத்தையன் கண்ணை மூடுமாறு கூறினாராம். இவர் கண்ணை மூடித் திறந்தார். கதிர்காம வீதியில் நடந்து கொண்டிருப்பதை உணர்ந்தார். காணாத காட்சிகளையெல்லாம் காட்டிய கதிர்காமத்தையன் மறைந்ததை எண்ணியெண்ணிக் கலங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமி அவர்கள் புன்முறுவல் பூத்தார்கள். "சரியப்பா நான் போகிறேன். இரவு முழுவதும் நானும் வயிற்று வலியால் மிகக் கஷ்டப்பட்டேன். இரண்டொரு மிளகும் வேர்க்கொம்பும் தா, நான் போய் விடுகிறேன்" என்று கூறினார். சமையல்காரன் உடனேயே மிளகும் வேர்க்கொம்பும் கொடுத்துச் சுவாமிகளை வெளியே அனுப்பிவிட்டான்.

ஓவசியர் வீட்டுக்கு எதிரே ஒரு கள்ளிப்பற்றை. அதனை நாடிச் சென்றார் சுவாமிகள். கள்ளிப்பற்றையின் முன்னால் நின்று படடி, படடி என்று உரத்தசத்தமாகக் கூறினார். நிமிர்ந்து நின்ற கள்ளிகள் தரைமட்டமாகப் படுத்துவிட்டன. அதன் மேல் சுவாமிகள் ஏறி இருந்தார்கள். ஒரு கள்ளித் தண்டைக் கத்தியால் தோண்டினார். கொண்டு சென்ற மிளகையும் வேர்க்கொம்பையும் அதனுள் வைத்து அடைத்தார். கஞ்சாக்குழலை எடுத்தார். அதனுள் கஞ்சாப்புகையிலையைச் செலுத்தினார். குழலில் நெருப்பை மூட்டினார். மேலே அண்ணாந்து பார்த்தார். ஏழுமலைகளும் வரிசையாகக் கண்ணுக்குத் தென்பட்டன. சுவாமிகள் ஆவேசம் வந்தவர் போலப் பின்வருமாறு பேசினார்.

"ஏழு மலையானே, நீ கள்வனா? அல்லது நான் கள்வனா? அல்லது முத்துக்கந்தையா கள்வனா? "இவ்வாசகங்களைச் சொன்ன பின்னர் புகையை உள்ளே இழுத்து இரண்டொரு தடவை வெளியே விட்டார். இருப்பிடத்தைவிட்டு எழுந்தார். ஜெய் சீத்தாராம், ஆனை, நவநாதா, கதிர்காமா என்று உரக்கக் கோஷமிட்டுக் கொண்டே கதிர்காமத்தை நோக்கிப் பயணமானார்.

கதிர்காமத்தில் பல சித்துகள் விளையாடினார். தீர்த்தம் முடிந்ததும் அம்பாந்தோட்டைக்குச் சென்று கப்பல் ஏறி மட்டக்களப்பை அடைந்தார். மட்டக்களப்பில் கார்த்திகேசு சுப்பிறிந்தர் வீடு மிகப்பிரபல்யமானது. இவர் ஒருபக்தர். அடியார்களை ஆண்டவன் எனவே எண்ணி உபசரிப்பவர். அதனால் இவரைக் கார்த்திகேசு சுவாமிகள் என்றும் ஊரவர்கள் அழைப்பார்கள். இத்தகைய அன்பருடைய வீட்டுக்குச் சென்று சுவாமிகள் அமைதியாக சில மாதங்கள் கழித்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓவசியருக்குச் சோதனைக்காலம்

ஓவசியர் அடுத்தநாள் தனது மேலதிகாரியாகிய எஞ்சினியரிடம் சென்றார். காரணம் எதுவுமே இல்லாமல் எஞ்சினியர் ஓவசியரோடு வேண்டாவெறுப்பாகப் பேசினார். இதனால் வெறுப்புக் கொண்ட ஓவசியருக்கும் எஞ்சினியருக்குமிடையில் வாய்ப்போர் ஏற்பட்டது. எஞ்சினியர் ஒரு வெள்ளைக்காரர். கருப்பு மனிதன் தனக்கு மரியாதை கொடுக்காமல் பேசிவிட்டான் என்பது அவருடைய முறைப்பாடு. ஓவசியர் தற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கப்பட்டார். ஓவசியர் கொழும்புக்குச் சென்றார். பணம் செலவழித்தார். பலன் ஒன்றும் இல்லை. நிரந்தரமாக வேலையிலிருந்து நீக்கப்பட்டார். இளைப்பாற்றிச் சம்பளம் தானும் பெற முடியாமல் தவித்தார். சம்பளம், கிம்பளம், மேல் வெட்டு இத்தனை வரும் படியும் ஆறு போல் பாய்ந்த ஓவசியருக்கு எல்லாம் திடீரென அடைபட்ட உடனே என்னசெய்யவதென்றறியாமல் திகைத்தார். மற்றைய ஓவசியர்மார் வீடுவாசலைக் கட்டி, காணி வாங்கி பிள்ளைகுட்டி களுக்கென்றாவது பணத்தைச் சேகரித்து வைத்தார்கள். இந்த மனிதனோ குடி தான் சுவர்க்கம் என்று வாழ்ந்தவர். தேட்டம் எதுவும் தேடினாரும் அல்லர்.

ஓவசியருக்கு இப்போ கொஞ்சம் ஞானம் உதயமாயிற்று. தான் செய்த அட்டாதுட்டித்தனம் எல்லாவற்றையும் நினைவு கூர்ந்தார். எப்போதும் அன்பாகவே தம்மோடு பழகி வந்த எஞ்சினியர் காரணமின்றித் திடீரெனக் கோபம் கொள்ள வேண்டிய காரணம் என்னவாயிருக்கும் என்பதை ஆழ்ந்து யோசித்தார். உள்ளத்தில் உண்மை உதயமாயிற்று. மனைவியை அன்போடு அழைத்தார்.

"அடி ஆத்தாளே, உன்னுடைய சாமியாராலே தான் இந்த வரத்து வந்திருக்கு உடனே மட்டக்களப்புக்குச் சென்று சுவாமியைத் தேடிபிடித்துத் தக்க பரிகாரம் தேடிக்கொண்டு வருவாயாக" என்று கூறி அனுப்பி வைத்தார்.

அம்மையாரும் உடனே சென்று கப்பல் ஏறி மட்டக்களப்புச் சென்று சேர்ந்தார். கார்த்திகேசு சுவாமியாருடைய வீட்டில் சுவாமிகளை அம்மையார் சந்தித்தார். சுவாமிகளைக் கண்டதும் அவரது பாதங்களில் வீழ்ந்து வணங்கினார். கண்ணீரால் சுவாமிகளுடைய பாதங்களைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழுவினார். நாத்தழுதழுக்க மன்னிக்குமாறு வேண்டினார். சுவாமியவர்களோ, "ஏனம்மா இங்கு வந்தீர்கள்? நான் ஒரு தீமையுமே உன் புருஷனுக்குச் செய்தறியேன். அவரவர் செய்த வினையை அவரவர் அனுபவித்துத்தானே ஆக வேண்டும். ஒருவர் செய்த வினையை இன்னொருவர் அனுபவிக்க முடியாது. பக்கத்திலே கதிர்காம சுவாமி இருக்க இங்கு ஏனம்மா வந்து அலைந்தீர்கள்? கதிர்காமத்து ஐயனிடம் சென்று முறையிடுங்கள்" என்று கூறி அம்மையாரைச் சுவாமிகள் கப்பலேற்றி அம்பாந்தோட்டைக்கு அனுப்பி வைத்தார்கள்.

அம்மையார் சேமமே திசையைச் சென்று அடைந்தார்கள். நடந்த எல்லாவற்றையும் ஒன்றும் விடாமல் கூறினார்கள். ஆனால் ஓவசியரின் எந்த முயற்சியும் பலன் அளிக்கவில்லை. எடுத்த முயற்சி எல்லாம் தோல்விக்கு மேல் தோல்வியாகவே முடிந்தன. கடன்காரர் தினமும் ஓவசியரை நெருக்கத் தொடங்கினர். நீதிஸ்தலத்தில் கடன் சம்பந்தமான வழக்குகளும் தாக்கலாயின.

அம்மையார் ஒரு முறைக்குப் பல முறை சிந்தித்தார்; ஆழ்ந்து சிந்தித்தார். தனக்கு ஒரு நல்ல வழி காட்டுமாறு முருகப் பிரானை வேண்டினார். தான் ஓவசியருடன் இருப்பதால் தனக்கும் ஒரு நன்மையும் இல்லை; தன்னால் ஓவசியருக்கும் ஒரு நன்மையும் இல்லை என்று உணர்ந்தார். இவ்வளவு நாளும் திருந்தாத ஓவசியர் இனிமேலும் திருந்தப் போவதில்லை என்ற முடிவுக்கு வந்தார். தான் இல்லாவிட்டால் தானாகப் பட்டாவது திருந்தக்கூடும் என்று எண்ணினார். கதிர்காமத்தையனை மனதிலிருத்தியவராய் அம்மையார் மட்டக்களப்பை நோக்கிப் பிரயாணம் ஆனார்.

## சேதம்மா சித்தரனைக்கு அடிமையாதல்

அம்மையார் நேராகக் கார்த்திகேசு சுவாமிகளுடைய இல்லத்திற்குச் சென்றார். சுவாமிகளிடம் ஓடிச் சென்று திருப்பாதங்கள் இரண்டையும் சிக்கெனப் பிடித்துக் கொண்டார். "இனி மேல் நீர் தான் என்ரை துரை; நான் இனிமேல் உம்மோடு தான் இருந்து வாழப் போகிறேன். இதைத் தட்டாமல் என்னை ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்று வேண்டிக் கொண்டார். சுவாமிகள் பல எடுத்துக்காட்டுகள் எடுத்துக் கூறியும் அம்மையார் தாம் பிடித்த பிடியை விடவில்லை. தனக்கும் கெட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர் வரப் போகிறது; அம்மையாருக்கும் கெட்ட பெயர் வரப் போகிறது என்றெல்லாம் கூறினார்கள். அம்மையார் எதற்கும் மசியவில்லை. கார்த்திகேசு சுவாமிகள் அம்மையாரைப் பார்த்து, "அம்மா, சுவாமிகளைத் தொந்தரவு பண்ணாதீர்கள். அவரை அவருடைய வழியிலே விட்டு விடுங்கள். உங்களுக்கு நான் மாதா மாதா ஐம்பது ரூபா அனுப்பி வைக்கிறேன்" என்றார்கள். அதற்கு அம்மையார், "எனக்கு உமது பணம் வேண்டாம். எனக்குச் சுவாமிகளைத் தான் வேண்டும்." என ஒரே பிடிவாதமாக நின்றார்கள்.

சுவாமிகள் முக்காலமும் உணர்ந்தவரல்லவா? தமது வினைப் பயனும் அனுபவித்துப் பொசுக்க வேண்டுமே என எண்ணினார். குருநாதனின் தீர்க்கதரிசனமும் நடந்தேற வேண்டுமே எனத் திருவுளங் கொண்டார். அம்மையாரின் வேண்டுகோளின் படியே அம்மையாரோடு கூடிக்கொண்டு காரைதீவுக்குச் சென்றார். அம்மையாருடைய பெயரில் காரைதீவிலே ஒரு காணியிருந்தது. அக்காணியில் ஒரு பெரிய புளிய மரமும் ஒரு வீடும் இருந்தன.

அவ்வீட்டிலே தான் சுவாமிகளும் அம்மையாரும் குடி இருந்தனர். காரைதீவு சென்றதும் அம்மையார் முதன் முதலாகச் செய்த வேலை தனது பேரிலிருந்த காணியைச் சுவாமிகள் பேரில் எழுதி வைத்ததாகும்.

திசைமகாரகமவில் கடன் தொல்லை பொறுக்க முடியாது ஒவசியர் இரவோடிரவாகப் புறப்பட்டுக் காரைதீவு வந்தடைந்தார். அம்மாவையும் சுவாமியையும் சந்தித்து அவர்களிடம் மன்னிப்புக் கோரி மூவரும் சிறிது காலம் அவ்வீட்டிலேயே வாழ்ந்தனர். ஓவசியரின் கடன்காரர் காரைதீவிலுள்ள அம்மையாரின் வீடுவளவைப் பறிமுதல் செய்வதற்காக வழக்குத் தொடுத்தனர். சுவாமிகள் கோடேறி வழக்குப் பேசி வழக்கினை வென்றார். அன்று தொடக்கம் குறிப்பிட்ட வீடும் வளவும் சுவாமி அவர்களுடைய பேரிலேயே இருந்து வருகிறது.

குருநாதன் சொன்ன புளியமரத்து வீட்டுக்காரி இந்தச் சேதம்மாவே தான். கள்ளன் என்பது ஒவசியரை. கள்ளன் பெண்ணை எடுப்பாய் என்றது அம்மையாரை. வம்பும் வரும் வழக்கும் வரும் என்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மையாரையும் சுவாமிகளையும் பற்றி எத்தனையோ கதைகள், கற்பனைகள், காணிக்காகச் சுவாமிகளே கோடேறி வழக்குப் பேசினார்கள்.

முதல் முதல் அம்மையாரையும் சுவாமிகளையும் வம்பு சொன்னவர் ஓவசியர் தான். அவர் அங்ஙனம் சொல்லி வாழ்க்கையில் அவர் பட்டபாட்டை அறிந்தோம். சிலருக்கு நாக்குக் கொஞ்சம் நீளம். அதனால் உண்மையோ பொய்யோ வாய்க்கு வந்தபடியெல்லாம் பேசிவிடுவார்கள், கோள் சொல்லுவார்கள், பொய்யும் புனைசுருட்டும் பேசுவார்கள். இதனால் தாமே பிறருடைய கர்மத்தை வாங்கி அனுபவிக்க வேண்டி ஏற்படுகிறது. பிறருடைய தீமைகளை எடுத்து நாம் பேசும் போது அவருடைய பாவத்தில் ஒரு பகுதியை நாம் பெற்றுக் கொண்டு எமது புண்ணியத்தில் ஒரு பகுதியையளித்து விடுகின்றோம். மகான்களைப் பற்றிக் குறை கூறுபவர்கள் அவர்களைப் பற்றிக் கூறும் அவதூறு அவ்வளவையும் தாமே அனுபவித்துத் தொலைக்க வேண்டியவர்களாவார்கள்.

மகான்களைப் பற்றிக் கூறும் அவதூறுகளை எல்லாம் அவர்கள் ஒரே ஒரு வார்த்தையில் இவை எமக்குச் சொந்தமும் இல்லை; இவை எமக்கு வேண்டியதும் இல்லை என்று சொல்லிவிடுவார்கள். மகான்களுடைய ஆத்மீக சக்தியால் அவதூறுகள் யாவும் எந்த இடத்திலிருந்து புறப்பட்டனவோ அந்த இடத்தை நோக்கிச் செல்லும். திரும்பிச் சென்ற பிசாசு சும்மா விடுமா? அதன் வேகத்தை ஏவிவிட்டவரே தாங்க வேண்டும். அதன் வேகத்தைத் தாங்க மாட்டாது உயிரை மாய்த்துக் கொண்டவர்களும் உண்டு. தன்வினை தன்னைச் சுடும் அல்லவா?

## ஓவசியரின் முடிவு

ஒருநாள் ஓவசியர் நன்றாக மது அருந்திவிட்டு வீட்டுக்கு வந்திருந்தார். கட்டிய பெண்டாட்டி சுவாமி மீது தான் உயிராயிருக்கிறாள். அவளுடைய சொத்தோ சுவாமிக்குச் சொந்தமாகி விட்டது. இவையெல்லாம் ஒன்று சேர்ந்து ஓவசியருக்குச் சுவாமிமீது குரோதத்தை உண்டாக்கி விட்டது. நிறைவெறியில் சுவாமியைக் கத்தியால் குத்திக் கொல்வதற்கு ஓவசியர் முயன்றார். சுவாமிகள் உடனே கத்தியைப் பறித்துத் தூர வீசி விட்டார். சுவாமிகளிடம் தனது தீமை எதுவும் பலிக்காதது கண்ட ஓவசியர்7 உன்னிச்சைப் பகுதிக்கு வேலை தேடிச் சென்றார். அங்கேயே சில காலம் கொந்தறாத்து வேலை செய்துகொண்டிருந்து, அங்கேயே காலமாகிவிட்டார். அங்கேயே அவரது அடக்கமும் நடைபெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓவசியரைத் தொடர்ந்து சேதம்மாவும் காரைதீவில் சமாதி அடைந்தார். அவருடைய சமாதியை சுவாமிகள் எதிரே உள்ள வளவில் முறையாக வைத்தார். சேதம்மாவுக்கு ஒரு மாமியார், அவரின் பெயர் சிந்தாமணி அம்மையார். சேதம்மாவுக்குப் பின் சுவாமிகளுக்குத் தொண்டு செய்ய சிந்தாமணி அம்மையார் வந்திருந்தார்கள். இப்பொழுதும் மக்கள் சுவாமியையும் சிந்தாமணி அம்மையையும் சேர்த்து ஒரு முடிச்சுப் போட்டு விட்டார்கள். எலும்பில்லாத நாவால் எல்லாம் பேசிக் கொள்வார்கள்.

சுவாமிகள் அந்தக் காலத்திலே தலையில் தலைப் பாகையுடனும் கையில் ஒரு பிரம்புடனும் மகாராஜா மாதிரி உலாவுவார்கள். காலில் மிதிதடியும் இருக்கும். அக்காலத்தில் சுவாமிகளோடு, கோளாவில் கந்தன் பரிகாரியார், வெள்ளையப்போடியார் பூபாலபிள்ளை, ஆறு விரல் கந்தையா, மேசன்வேலுப்பிள்ளை சவரத் தொழிலாளி புஞ்சர் முதலியோர் அடிக்கடி நெருங்கிப் பழகியவர்களாவர். கல்முனையில் கடை வைத்திருந்த வீரப்பச் செட்டியாரும் மிக முக்கியமானவர். செட்டியாரோடு எதிர்மன்ன சிங்க உபாத்தியாயர் நல்ல நண்பர். எதிர்மன்னசிங்க உபாத்தியாயர் மெதடிஸ்ட் மிஷனைச் சேர்ந்தவர். அவருக்குச் சாதுக்கள் மீது ஒரு தனிப் பிரியம். வீரப்ப செட்டியார் மூலமும் வேறு நண்பர்கள் மூலமும் சுவாமிகளுடைய மகிமையைக் கேள்வியுற்றிருந்தார். நல்ல ஒரு தினத்தில் சுவாமிகளைச் சென்று காணவேண்டுமென ஆவல் கொண்டிருந்தார். சுவாமிகளின் பெருமைகளைப் பலரும் பலவிதமாகக் கூறியிருந்த போதிலும், வீரப்பச் செட்டியார் தமது சொந்த அனுபவம் ஒன்றைக் கூறியபோது தான் எதிர்மன்னசிங்க உபாத்தியாயருக்குச் சுவாமிகளைக் காணவேண்டும் என்ற அவா மேலிட்டெழுந்தது. காணாமலிருக்க முடியாது என்ற நிலைக்கு மனதில் ஆர்வம் பொங்கியெழுந்தது.

## கண்ணோய் மாற்றிய கருணை

வீரப்பச் செட்டியாருக்குக் கண்ணில் ஒரு வருத்தம். கைமருந்து, ஆயுர்வேதமருந்து, கடைமருந்து ஆங்கில மருந்து எல்லாம் செய்து பார்த்து விட்டார். கூடியதே அல்லாமல் குறைந்த பாடில்லை. இந்தியாவில் இருந்தும் மருந்துகள் எடுப்பித்தார். காசு கரைந்ததே அல்லாமல் கண்வருத்தம் குறையவில்லை. சித்தானைக்குட்டி சுவாமிகளுடன் நெருங்கிய தொடர்புடைய நண்பர் ஒருவர் செட்டியாரிடம் சென்ற போது சுவாமிகளிடம் ஒருமுறை சென்று வாருங்கள் எல்லாம் சரியாகிவிடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றார். செட்டியார் தலை அசைத்தாராயினும் செல்லவில்லை. உரிய காலம் வர வேண்டுமே. மருந்து தேடி அலைந்தார் செட்டியார். நண்பர் சிலதினங்கள் கழித்து வந்தபோதும் செட்டியார் சுவாமிகளிடம் சென்றதாகத் தெரியவில்லை. கண்ணும் நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டே இருந்தது. நண்பர் தன்னோடு உடனே புறப்படுமாறு கட்டளை இட்டார். செட்டியார் எதிர்வார்த்தை கூறாது இருவருமாகக் காரைதீவு சென்றனர். இருவரும் தூரத்திலே வரும்போதே சுவாமிகள் கண்டுவிட்டார்கள்.

"வாடா, வா மகனே! எங்கெல்லாமோ திரிந்து விட்டு இன்று தான் என்னிடம் வருவதற்கு உனக்குச் சாவகாசம் கிடைத்ததா? " என்று கேட்டார். செட்டியார் சுவாமிகளுடைய திருப்பாதங்களில் தமது கண்களை வைத்து ஒற்றி வணங்கினார். அருகிலே அழைத்தார் சுவாமிகள். தனக்குப் பக்கத்திலே அமர்த்திக்கொண்டு தன்னுடைய வாயைச் செட்டியாரின் கண்ணருகே கொண்டு சென்று உமிழ்நீரைக் கொப்புளித்துவிட்டார்.

செட்டியார் அருவருப்படையவில்லை. கண்ணிலிருந்த எல்லா வருத்தமும் அக்கணமே நீங்கி விட்டன. சுவாமிகளுடைய உமிழ்நீர் கண்களில் பன்னீர் விட்டுக் கழுவியது போல் குளிர்மையாக இருந்ததென்று கூறினார். தீராநோய் தீர்க்கவல்லானாகிய சித்தானைக்குட்டி சுவாமிகளின் தலைசிறந்த அடியானாக அக்கணமே மாறினார் செட்டியார். இந்த தனது சொந்த அனுபவத்தைச் செட்டியார் எதிர்மன்னசிங்க உபாத்தியாயருக்குக் கூறிய பின்புதான் எதிர்மன்னசிங்க உபாத்தியாயரிடம் தவிர்க்க முடியாத அருள் தாகம் ஒன்று எழுந்தது.

சுவாமிகளைத் தரிசிப்பதற்காக நல்ல நாள் ஒன்றும் குறிப்பிடப்பட்டது. 1930 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 24 ஆம் திகதி பின்னேரம் 5 மணி அளவில் வீரப்பச் செட்டியாரின் உதவியுடன் சுவாமிகளின் திருச் சமுகத்தை அடைந்தார் எதிர்மன்னசிங்க உபாத்தியாயர். அன்று நத்தார்த்தின பூஜை. மனைவி மக்கள் எல்லோரும் சர்ச்சுக்குச் செல்ல உபாத்தியாயர் சுவாமிகளை நாடி வந்தார். கிறிஸ்தவ முறைப்படி பெரியவர்களைக் காணச் செல்லப் போகும் போது, ஒரு முழுப்போத்தல் ஜினாம்ஸ் ஜின்னும், கேக்கும், பழங்களும் பலகாரங்களும் கொண்டு சென்றார். உபாத்தியாயர் சென்ற நேரம் சுவாமிகள் கௌபீனதாரியாகக் காட்சி தந்தார்கள். கையிற் கொண்டு சென்ற கையுறைகளை எல்லாம் சுவாமிகளுடைய திருப்பாதத்திலே வைத்து, அடியற்ற மரம் போல வீழ்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணங்கினார். பின்னர் எழுந்து முழந்தாளிலே நின்று சுவாமிகளைப் பார்த்துப் பின் வருமாறு வேண்டுதல் செய்தார்.

அப்பாபா! நான் ஒரு நல்லவனில்லை; மகாபாவி. என்னைப் போல ஒரு பாவி இவ்வுலகத்திலிருக்க முடியாது. என்னை ஒரு செல்லப் பிள்ளைச் சீராளனாக வளர்க்க முடியுமானால் கூட வைத்துக் கொள்ளுங்கள். அன்றேல் நான் திரும்பிச் செல்லுகின்றேன். விதிப்படி அனுபவித்து செத்து மடிந்த பின் மறுபிறவியிலாகுதல் என்னைச் சேர்த்துக் கொள்ளுங்கள். ஆனால் நானோர் சமுசாரி. எனது மனைவியும் என்னுடன் ஒத்துழைக்க வேண்டும். அன்றியும் நான் வறியவனாதலால் எனது சுற்றத்தார் என்னைப் புறக்கணித்து விட்டார்கள். ஆதலால் ஒரு நாளைக்காகுதல் நான் ஒரு பணக்காரனாய் உலாவ வேண்டும்."

கண்கலங்க, நாத்தழுதழுக்க, உடல் எல்லாம் நடுநடுங்க வேண்டுகோள் விடுத்த – பிரார்த்தித்த ஆசிரியரைச் சுவாமிகள் நிமிர்ந்து கடைக்கணித்தருளினார்கள். "எதுவேண்டுமானாலும் கேள் மகனே, எல்லாம் கிடைக்கும்" என்று திருவாய்மலர்ந்தருளினார்கள் சுவாமிகள்.

## இறைச்சிக்கறி குப்பைக்கீரை ஆனது

உபாத்தியாயருக்கு சுவாமிகளோடு உடனிருந்து சமைத்துச் சாப்பிட வேண்டுமென்று ஒரு ஆசை. ஒருநாள் சமையலுக்கு வேண்டிய அரிசி முதலான பொருட்களுடனும் ஒரு கோழியுடனும் ஆச்சிரமத்தை வந்து அடைந்தார் உபாத்தியாயர். சுவாமிகள் புன்முறுவல் பூத்தவராய் எல்லோரும் சேர்ந்து சமைப்போம் என்று கூறி வெகுநேரத்தியாகச் சமையல் முடிந்தது. முக்கிய கறி கோழிக்கறியாகும். சாப்பிடுவதற்கு வேண்டிய ஆயத்தங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கையில் சுவாமிகள் திடீரெனப் பின்வரும் கட்டளையைப் பிறப்பித்தார்கள்.

"இன்று இந்தச் சாப்பாட்டை இங்கிருக்கும் யாருக்கும் கொடுக்க மாட்டேன். யாரோ சில புண்ணியவான்கள் வருவார்கள். சற்றுப் பொறுத்திருப்போம்."

சிறிது நேரத்தில் ரிஜிஸ்ரார் சந்திரசேகரும், மதியாபரணம் கிளாக்கரும், வேறும் ஒருவரும் வந்து சேர்ந்தார்கள். மூவரும் புலால் உண்ணாதவர்கள். "தம்பிமாரே குப்பைக் கீரைதான் இன்று கறி. வாருங்கள் சாப்பிடலாம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றார் சுவாமி. மூவரும் எழுந்து சுவாமிகளுடன் பந்தியிலிருக்க உணவு பரிமாறப்பட்டது. கோழிக்கறியும் பரிமாறப்பட்டது. வந்த மூவரும் எவ்வித வித்தியாசமுமின்றி அதனை உண்டனர். சுவாமிகள் அந்தக் கோழிக்கறியை அவர்களுக்கு எந்த மரக்கறியின் உருவமாக்கி ருசிக்கச் செய்தாரோ, யாரறிவார்?

## குருநாதருக்கு அபிஷேகம்

தனது குருநாதருக்கு அபிஷேகம் செய்து பார்க்க வேண்டுமென்று ஆசைப்பட்டார் எதிர்மன்னசிங்க உபாத்தியாயர். கையிலோ காசு இல்லை. தனது ஆசையைத் தாயாரிடம் தெரிவித்தார். தாயார் தமது கழுத்தில் அணிந்திருந்த பசும்பொன் சவுக்கமணிக் கோவையைக் கழற்றிக் கொடுத்தார். உபாத்தியாயர் அதை விற்று கத்தரிப்பூ நிறத்தில் ஒரு நெடிய அங்கியும், சப்பாத்து, மேசு என்பனவும், செம்புக் கம்பியினால் செய்யப்பட்ட ஒரு நெடிய வேலும், நீளமான மயில் தோகையும், பசுப்பாலும் வாங்கிக் காவெடுத்துக் கொண்டு சுவாமி சந்நிதியை அடைந்தார். உபாத்தியாயரைக் கண்டதும் சுவாமிகள், ஓகோ உபாத்தியாயர் பூஜகராகிவிட்டாரே என்று சொல்லி சிரித்தார்கள். முறைப்படி சுவாமிகளுக்கு உபாத்தியாயர் அபிஷேகத்தை நடத்தி முடித்தார். அன்றைய பின்னேரம் புதிய அங்கி, சப்பாத்து, தலைப்பாகை, கையில் பிரம்பு சகிதமாகச் சுவாமிகள் நடந்து செல்ல, அவரைச் சூழ்ந்து சீடர்கள் சென்ற காட்சி, பார்த்தோர் எல்லாருடைய மனத்தையும் பரவசமடையச் செய்தது.

## அறியப்படாத கடவுளை அறிவித்த வகை

ஒருநாள் அதிகாலையிலேயே உபாத்தியாயர் சுவாமிகளை நாடிச் சென்றார். ஒரு மூலையில் உட்கார்ந்தார். ஆழ்ந்த ஆலோசனையில் காணப்பட்டார். இதைக் கண்ணுற்ற சுவாமிகள் 'என்னப்பா யோசிக்கிறாய்?' என்றார்கள். உபாத்தியாயர் திடுக்கிட்டு விட்டார். சுவாமிகள் ஒரு மான் தோலை எடுத்து கீழேபோட்டு, நீர் ஒரு உபாத்தியாயர்தானே. கணிதம் நல்லாகப்படித்திருப்பீர், இத்தோலில் உள்ள புள்ளிகள் எத்தனை என்று எண்ணிச்சொல்லும் பார்ப்போம் என்றார். உபாத்தியாயர் மிகக் கவனமாக எண்ணி 324 என்று சொன்னார். பார்த்தீரா தினமும் தவறாது மூன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெபமாலையாவது ஆண்டவனுடைய நாமத்தைச் செபம் செய்ய வேண்டுமென்று இந்தத் தோலிலுள்ள புள்ளிகளே கூறுகின்றன. சரி ஒரு புள்ளியில் எத்தனை மயிர்கள் உண்டு என்பதை எண்ணிக் கூறும் என்றார். அது முடியாத கருமம் என்று உபாத்தியாயர் கூறினார்.

அப்படித்தான் மகனே, இந்த மானுக்கு எத்தனை புள்ளியென்றும், புள்ளிக்கு எத்தனை மயிரென்றும் யாரும் திட்டமாகக் கூறமுடியாது. அதற்காகத்தான் அறியப்படாத கடவுள் என்றும், மாலும், அயனும் காணாத சிவன் என்றும் அறிஞர் சொல்கிறார் என்றார் சுவாமிகள். ஆதலால் மகனே யோசிப்பதிற் பயனில்லை. சிவபெருமான் எதை எதை அருளுவாரோ அதை அதை இருகைகளாலும் வாங்கி சந்தோஷமாக இருக்க வேண்டும் என்று தைரியம் கூறிச் சென்றார். சுவாமிகள் இப்படி வாழ்க்கையில் ஏற்படும் மிக இலகுவான உதாரணங்களைக் கொண்டே பெரிய பெரிய தத்துவங்களையெல்லாம் விளக்கிவிடுவார்கள். சுவாமிகள் சில சமயங்களில் சொல்லும் உதாரணங்களும் பிரச்சினைகளும் சிலருக்குப் புரிந்துகொள்ள முடிவதில்லை. சுவாமிகளோடு சில தினங்களாவது ஊடாடினால் அவருடைய கருத்துக்களை இலகுவிலே புரிந்து கொள்ள முடியும். 5

சிறிது நேரங் கழிந்து. சுவாமிகள் கிணற்றடி வக்கியில் நீர் நிரப்புமாறு கூறினார்கள். கற்பூரத் தீபாராதனை செய்தார்கள். ஸ்நானம் செய்யுமாறு எதிர்மன்னசிங்க உபாத்தியாயருக்குக் கட்டளை பிறந்தது. ஸ்நானத்தை முடித்துக்கொண்டு ஒரு துண்டு வேட்டி உடுத்தி வெறும் உடம்போடு உபாத்தியாயர் அடியார்கள் மத்தியில் இருந்தார். அப்போது சுவாமிகள் எனது ஞானப்புதல்வனுக்கு நாமகரணம் சூட்டும் நாள் என்று கூறினார்கள். தாய் தந்தையர் எதிர்மன்னசிங்கம் என்று பெயரிட்டனர். மிஷனரி சுவாமியார் அன்ரனி என்று பெயரிட்டனர். நானும் ஒரு பெயர் வைக்க வேண்டாமா? ஆ.சி.அரிசித்தரி என்று அழைப்போம் என்று சொல்லி முடித்தார்.

சுவாமிகள் இலங்கை முழுவதும் ஒரு இடமும் தவறாது கால்நடையாகவே சுற்றியிருக்கிறார்கள். சுவாமிகளுடைய திருப்பாதம் தீண்டாத ஊரேகிடைக்காது என்ற அளவுக்கு சுவாமிகள் எல்லா இடங்களுக்கும் சென்று சித்துகள் விளையாடி உள்ளார்கள். ஒரே நேரத்தில் இரு வேறிடங்களில் தமது சித்தினை நிகழ்த்தியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநுராதபுரத்தில் சித்து விளையாட்டு

யாழ்ப்பாணம் சென்றுகொண்டிருந்த சுவாமிகள் ஒருமுறை அநுராதபுரத்திலே தங்கினார்கள். அதிகாலையில் எழுந்து நுவரைப் பிள்ளையாரைத் தரிசிக்கச் சென்றார்கள். சுவாமிகள் செல்லும்போது கோயில் ஐயர் யாரோ சிலரோடு ஊர் விவகாரங்கள் பேசிக்கொண்டிருந்தார். சுவாமிகள் கோயில் மண்டபத்தில் தியானத்தில் அமர்ந்திருந்தார்கள். தியானம் கலைந்து எழுந்தார்கள். மணி எட்டாகிவிட்டது. ஐயரின் அரட்டை நின்றபாடில்லை. சுவாமி ஐயரைப் பார்த்து "மணி எட்டாகியும் கோயில் பூசைக்கு ஒரு ஆயத்தமும் செய்யாதிருப்பது சரியா? ஏன் எழும்பிப் பூசைக்குரிய ஆயத்தங்களைச் செய்தால் என்ன?" என்று கேட்டார். சுவாமிகளுடைய வார்த்தைகளைக் கேட்ட ஐயருக்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்தது. "அடே, என்னை நீ வைச்ச ஆள் என்று நினைத்தாயா? நீ யார் என்னைக் கேட்க? நீ மணியகாரனா? அல்லது எஜமானா? என்று பாய்ந்து விழுந்தார் ஐயர்.

"ஆம்! நான்தான் எஜமானன் என்பதை நீர் அறியீரா? சரி அறிவித்து வைக்கின்றேன்" என்று சுவாமிகள் சொல்லிவிட்டுப் போய்விட்டார்கள். சுவாமிகள் அன்றிரவே கோயிலுக்குச் சென்று பிள்ளையார் சிலையை எடுத்துக்கொண்டு போய் ஒரு அன்பருடைய வீட்டில் கொடுத்து, இந்தாரும் எனது அன்புப் பிள்ளையாரை வைத்து நன்றாகப் பூசை செய்வீராக என்று சொல்லிவிட்டு யாழ்ப்பாணப் புகையிரதம் ஏறி யாழ்ப்பாணம் சென்று விட்டார்.

அடுத்தநாட் காலை கோயில் ஐயர் கோயிலைத் திறந்து உள்ளே சென்றார். என்ன ஆச்சரியம்! பிள்ளையார் சிலையைக் காணவில்லை. கோயில் பூட்டியபடியே இருக்கத்தக்கதாகச் சிலை காணாமற்போனதுதான் ஐயருடைய ஆச்சரியத்திற்குக் காரணமாகும். கோயில் எஜமானிடம் அறிவித்தார். பொலீசிலும் பிராது செய்யப்பட்டது.

முதல் நாள் ஒரு பரதேசி தன்னோடு தர்க்கமிட்ட செய்தியைக் கூறி அவர்தான் இதனைச் செய்திருக்கக் கூடுமெனவும் ஐயர் கூறினார். கோட்டில் வழக்கும் தாக்கல் செய்யப்பட்டது. சுவாமிகளுக்குப் பிடிவிறாந்தும் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்பட்டது. பிள்ளையார் சிலை வைத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்பிட்டுக் கொண்டிருந்த பக்தரும் விசாரிக்கப்பட்டார். பொலிசார் சகல விபரங்களையும் அறிந்து கொண்டனர். சுவாமியவர்கள் யாழ்ப்பாணத்தில் விறாந்தில் பிடிக்கப்பட்டு அநுராதபுரத்திற்குக் கொண்டுவரப்பட்டார். ஆனால் சுவாமியவர்களை நன்கறிந்த சில நியாயதுரந்தரர்களும் அங்கிருந்தனர். நீதிபதியாக இருந்தவர் ஒரு வெள்ளைக்காரர். ஐயர் பக்கமாகப் பேச இருந்தவர் ஒரே ஒரு நியாய துரந்தரர். மற்றவர்கள் எல்லோரும் பணம் எதையும் எதிர்பாராமலே சுவாமிகள் பக்கமாக வாதித்தனர்.

"கதவு உடைக்கப்படவில்லை, கூரை சேதப்படுத்தப்படவில்லை, கன்னக்கோல் உபயோகப்படவில்லை. நில அறை தோண்டப்படவில்லை, கதவுகள் வழமைபோல் பூட்டப்பட்டிருந்தன. ஐயரும் வழமைபோல் திறப்பினாலேயே கதவைத் திறந்திருக்கிறார்." அப்படியிருக்கக் களவுக் குற்றச்சாட்டிற்குச் சட்டத்தில் இடமில்லை என வாதித்தனர். நீதிவான் அவர்களும் சட்டத்தின் உட்பொருளை நன்றாக ஆராய்ந்தபின் சுவாமிகளை விடுதலை செய்தார்கள். சுவாமியவர்கள் விளக்க மறியலில் இருந்த ஒரு கிழமை காலத்தில் பல திருவிளையாடல்களைப் புரிந்தார்கள். சுவாமி அவர்கள் விளக்கமறியலில் மறியல்வீட்டிலிருந்த காலத்தில் வீதிகளிலே, தவறணையிலே, பல வீடுகளிலே, ஏன் நீதிவான் அவர்களுடைய பூந்தோட்டத்திலே, நியாயதுரந்தரருடைய இல்லங்களிலே நடமாடி வழமையான குதூகலத்தோடு பாட்டுக்கள் பாடித் திரிந்துள்ளார். கோயில் ஐயருடைய கண்காணத்தக்கதாகவும் நடமாடினார். இதனால் நகரத்தில் பெரிய பரபரப்பு ஏற்பட்டிருந்தது. பட்டினத்திலுள்ள தமிழரும், சிங்களவரும், முஸ்லிம்களும் சுவாமி மீது பெரிதும் அன்புகாட்டி நல்ல முறையில் ஆதரிக்கலாயினர்.

ஒருகாலத்தில் கதிர்காமத்திலிருந்து திரும்பிய சுவாமிகள் பண்டாரவளையில் சில நாட்கள் நடமாடித் திரிந்தார்கள். ஒருநாள் மாலை நேரத்தில் சுவாமிகள் தனியாக றோட்டோரத்தில் இருந்து கஞ்சா புகைத்துக்கொண்டிருந்தார்கள். பொலீசார் கையும் மெய்யுமாகப் பிடித்துவிட்டனர். வதுளைக் கோட்டில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. இங்குள்ள நீதிபதியும் ஒரு வெள்ளைக்காரரே. நீதிபதி சுவாமியைப் பார்த்து குற்றவாளியா? சுத்தவாளியா? என்று கேட்டார். சுவாமிகள் புன்முறுவல் பூத்து இது கோட்டு வழமைதானே. நான் குற்றவாளியோ, சுத்தவாளியோ என்பதைத் தீர்மானிக்க வேண்டிய பொறுப்பு உங்களுடையதாகும் என்று கூறினார்கள். நீதிபதிக்கு கோபம் மேலிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடனே 50 ரூபா தெண்டம் என்று தீர்ப்பளித்தார். வதுளையில் பிரபலவர்த்தகராயிருந்த அவினாசிலிங்கம் செட்டியார் அவர்கள் உடனேயே பணத்தைக்கட்டி சுவாமிகளை விடுவித்தார்கள்.

## சுவாமிக்கு இலக்கணம்

ஒருமுறை அன்பர் ஒருவர் சுவாமிகளைப் பார்த்து சுவாமி என்ற சொல்லுக்கு இலக்கணம் என்ன என்று கேட்டார். கேட்டவருடைய உள்ளத்திலே சுவாமியைப் பற்றி ஒரு இலக்கணம் இருந்தது. அதனைச் சுவாமி நன்கறிவார். ஒரு புன்முறுவல் பூத்து அருளினார்.

"மனிதருடைய பாவங்களுக்காகப் பாடுபடவும், அப்பாடுகளினால் பாவங்கள் பொடிபடவும் வகை செய்யத் தெரியாத அல்லது முடியாத பேர்வழிகள் உண்மையான சுவாமிகள் ஆக மாட்டார். கடவுளே மனித உருவத்தில் அவதாரஞ் செய்தால் ஒழிய மற்றவர்கள் எத்தனை சித்து ஆடினாலும் சுவாமி என அழைத்தல் கூடாது. சுவாமி எனுஞ் சொல் சுவாமியின் மேல் கொஞ்சம் பற்றுள்ள சகலருக்கும் சூட்டப்படும் ஒரு பொதுச் சொல்லாக இருக்கிறது. சுவாமி என்னும் சொல் ஆண்டவனுக்கும் அவன் அருள்வழிப்பட்டோருக்குமே வழங்கப்பட வேண்டியதொன்றாகும். மற்றையோருக்கு வழங்குவது மகாதவறு; மகாபாவம். சாதாரண மனிதன் ஒருவன் அப்பட்டத்தை ஏற்றுக்கொண்டால் சுவாமி என்ற சொல்லின் புனிதத்தைப் பொது மக்கள் புரிந்து கொள்ள முடியாமல் போய்விடும். அவதார புருஷர்களுக்கும் ஆண்டவனுக்குமே சுவாமி எனும் பட்டம் தகுதியானதாகும். பரமசிவனுக்கும் குருபரனாகி வந்து பிரணவப் பொருளை உபதேசம் செய்த சிவகுருவாகிய ஸ்ரீ சிவசுப்பிரமணியப் பெருமானுக்கே 'சுவாமி' என்ற பட்டம் தகும். அவர் அசுரரை அழித்து தேவர்களைக் காப்பாற்றிய பெருமையுடையவர் அல்லவா? விபூதி, உருத்திராக்கம், காவி ஆகிய மூன்றும் ஸ்ரீ சிவசுப்பிரமணியப் பெருமானின் சொந்தச் சொத்து. அதை அணியும் சுவாமிமார் தங்களை அதற்குத் தகுதி யாளர்களாக்கிக் கொள்ள வேண்டும்!"

இப்படி ஒரு குட்டிப் பிரசங்கம் செய்தருளினார்கள் சுவாமிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாய்க்குட்டியிடம் பேரன்பு

கனகன் என்றொரு சாது இருந்தார். இவர் கும்புறுப்பிட்டி ஊரைச் சேர்ந்தவர். இவர் அடிக்கடி சுவாமிகளைக் காண வருவார். வரும் போது சுவாமிகளுடைய வேறு சில பக்தர்களையும் அழைத்துக்கொண்டு வருவார். சின்னத்துரை சார்ஜன்ட் அவரது மனைவி இராமசீதா (இராமாசி), பொலிஸ் வேலுப்பிள்ளை, அவரது மனைவி சொர்ணம் ஆகியோரே கனகன் சாதுவோடு அடிக்கடி வருபவர்கள்.கனகன் சாது ஒரு இல்லறவாசி. இராமாசிக்குப் பிள்ளை குட்டிகள் இல்லை. அமிர்தகழி மாமாங்கப் பிள்ளையார் கோயில் வீதியில் எடுத்த ஒரு பெட்டை நாய்க் குட்டியை கனகன் சாது இராமாசிக்கு வழங்கி இருந்தார். அந்த நாய்க்குட்டியை இராமாசி பிள்ளைபோலப் பிரியமாக வளர்த்து வந்தார். இவர்கள் எல்லோரும் ஒருநாள் சுவாமியிடம் வந்தபோது இந்த நாய்க்குட்டியையும் கொண்டு வந்திருந்தார்கள். வந்தவர்கள் 4,5 நாட்கள் சுவாமிகளுடன் தங்கியிருந்து புறப்பட்டார்கள்.

இவர்கள் புறப்படும் போது நாய் கட்டிலில் ஏறிப்படுத்துக்கொண்டது. அவர்கள் எவ்வளவோ தந்திரங்கள் செய்தும் நாய் அவர்களுடன் போக மறுத்துவிட்டது. பூர்வீகத் தொடர்புபோலும். நாய் நம்மோடு சொந்தங்கொண்டாட வந்துவிட்டது. நீங்கள் அதனை விட்டுச் செல்லுங்கள் என்று சுவாமிகள் சொன்னார்கள். சுவாமிகளோடு மக்கள் மாத்திரமல்ல, வாயில்லாப் பிராணிகள் பழகினாலுங்கூட அவற்றால் சுவாமிகளை விட்டுப் பிரியமுடிவதில்லை. சுவாமிகளுடைய உள்ளமும் அன்பு, உருவாகும் அன்பு, அவர் சந்நிதியும் அன்பே. சுவாமிகள் அதற்குச் செல்லம்மா என்று பெயர் வைத்து அன்போடு செல்லி என்று அழைப்பார்கள். நாய்ப்பிறவியானாலும் புண்ணியம் செய்தது. ஒரு மகானோடு ஒரு நாளைக்காயினும் வாழ்வதற்கு எத்தனையோ மானிடர்களுக்கு வாய்ப்பில்லை. ஆனால் இந்த நாய்க்கோ சுவாமிகளோடு உடனுறையும் பாக்கியம் கிடைத்தது.

ஒருமுறை சாது கனகர் சிறிய பிழை ஒன்று புரிந்துவிட்டார். அதற்குத் தண்டனையாகச் சுவாமிகள் வேப்பங்கட்டையால் கனகரின் மண்டையில் அடித்தார். மண்டை உடைந்துவிட்டது. இரத்தம் பெருகியும் கனகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசையவில்லை. கனகரை அழைத்துத் தனது கட்டிலில் படுக்கச்செய்து தனது வாயிலுள்ள வெற்றிலைத்தம்பலத்தை காயத்தின் மேல் வைத்தார். அடுத்த நாளே காயம் இருந்த இடம் தெரியாமல் காய்ந்துவிட்டது.

## இராமாசி அம்மையார்

இன்றைக்குச் சரியாக பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன் வடலூர் சென்றிருந்தேன். அங்கு அருட்பெருஞ்சோதி நிலையத்தில் அம்மையார் ஒருவரைத் தரிசித்தேன். மௌனமே உருவமாகித் தியானத்தில் நிலைபெற்றிருந்தார்கள். உள்ளொளி முகத்தில் பிரகாசித்தது. தவத்தால் மெலிந்த உடல். யாருடனும் பேசுவதில்லை. அம்மையார் முன்னிலையில் சில நிமிடங்கள் தியானத்தில் அமர்ந்தேன். அம்மையார் சந்நிதியில் ஆத்மீக அலையொன்று வீசுவதை உணர முடிந்தது.

தம்பி சிலோனில் எந்த ஊர் என்று விசாரித்தார்கள். அம்மையாரின் பேச்சிலிருந்து அம்மையார் சிலோனைச் சேர்ந்தவர் என்பதை அறிந்து கொண்டேன். அம்மாவின் பூர்வாச்சிரமத்தை நான் அறியலாமா? என்றேன். தம்பிக்குச் சித்தானைக்குட்டிச் சுவாமிகளைத் தெரியுமா? என்றார்கள். ஆம் அம்மா சுவாமிகளை வாழ்க்கையில் ஒரே ஒருமுறை தரிசிக்கும் பாக்கியம் கிடைத்ததம்மா. அது இன்றும் உள்ளத்தில் பசுமையாக இருக்கிறதம்மா என்றேன்.

தம்பி அது ஒரு கடல். சுவாமிகளுடைய அருமை பெருமைகளை இன்னும் சிலோன் மக்கள் சரியாக உணரவில்லை. சுவாமிகளும் தம்மை மற்றவர்களுக்கு உண்மையாகக் காட்டிக்கொள்ளாமலே பல சித்தாடல் புரிகின்றார். இந்த அடிமையை ஆட்கொண்ட பெருமான் அவர்தான். நான் இங்கிருந்தாலும் அவருடைய சித்தாடலை இங்கே இன்றும் கண்டு கொண்டிருக்கின்றேன்.

சுவாமிகளுடைய சந்திப்பினால் எனக்கு ஆத்மீக் தாகம் எழுந்தது. பூர்வாச்சிரமத்தில் சின்னத்துரை சார்ஜனுக்கு மனைவியாராக இராமசீதா என்ற பெயருடன் வாழ்ந்தேன். சுவாமிகள் அப்பொழுக இராமாசி என்று அழைப்பார்கள். அப்பெயரில் எனக்கே ஒரு தனி இன்பம். அப்பெயரே நிலைத்து விட்டது. துறவறத்தை மேற்கொள்ள வேண்டுமென உள்ளுணர்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்று கூறியது. கணவனாரிடம் நீங்கள் வேறோர் திருமணம் முடித்துச் சந்தோஷமாக இருங்கள் நான் துறவியாகப் போகிறேன் என்றேன். கணவர் என்மேல் உயிராக இருந்தார். அதனால் அவர் சம்மதிக்கவில்லை. எங்களுக்குக் குழந்தைகுட்டிகளும் இல்லை.

சுவாமிகளிடம் முறையிட்டேன். இந்த ஜென்மம் கடைத்தேற எம்பெருமானே நீர்தான் வழிகாட்ட வேண்டும் என்று இரந்தேன். சுவாமிகள் கனவிலே தோன்றி கைகளை உயர்த்தியபடி அபயம் அளித்தார்கள். மணம் முடித்த நாள் முதலாக என்மீது எவ்வித சந்தேகமும் கொள்ளாத எனது கணவர் திடீரென என்மீது சந்தேகம் கொண்டு வாயில் வந்தபடியெல்லாம் தூற்றி எனது தாயார் வீட்டிற்குத் துரத்திவிட்டார். குருநாதனை மனதில் தியானித்த வண்ணம் தாயாரிடம் சென்றேன். தாயார் மகிழ்வுடன் வரவேற்றார். நேற்றைக்குச் சுவாமிகள் இங்கு வந்தார். எல்லாம் சொன்னார். எனக்கும் சிதம்பரம் போக வேண்டும் என்ற ஆசை இருக்கிறது. நாளைக்கே புறப்படுவோம் என்றார்.

எல்லாம் எனக்கே ஆச்சரியமாக இருந்தது. காரைதீவு எங்கே? திருகோணமலை எங்கே? சுவாமிகளுடைய ஆசியை நேற்றைக்குப் பெற்றுக்கொண்டுதானே புறப்பட்டேன். ஆண்டவன் எங்கும் இருப்பவர் அல்லவா? அவனடியார்களுக்கும் அவருடைய வல்லமை இருக்கத்தானே செய்யும் என்று சொல்லி முடித்தார் இராமாசி அம்மையார்.

## நந்தனார் வீட்டில் சாப்பிடும் பாக்கியம் எல்லார்க்கும் கிடைக்குமா?

கந்தப்பன் பரிகாரியார் நந்தனார் வமிசத்தைச் சேர்ந்தவர். அவரது இருப்பிடம் கோளாவில். சுவாமிகள் கோளாவிலுக்குச் சென்றால் கந்தப்பன் வீட்டில்தான் தங்குவார். பெரிய பெரிய சாதிமான்கள் எல்லாரும் சுவாமியைத் தரிசிக்க வருவார்கள். வருகிறவர்கள் எல்லாருக்கும் கந்தப்பன் வீட்டில் பால், தேநீர், இளநீர் எல்லாம் தாராளமாகக் கிடைக்கும். நந்தனார் வமிசத்தில் சாப்பிடுவதற்கு எல்லாருக்கும் கிடைக்குமா? என்று சுவாமிகள் வேடிக்கையாகச் சொல்லுவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமிகள் கோளாவிலுக்குப் போய் இருந்த சமயம் அவ்வூர் மக்கள் மழை இல்லாது வாடினார்கள். நெல்லெல்லாம் வாடிவிட்டன. மக்கள் அவ்வருட விளைச்சலைப் பற்றி நம்பிக்கை இழந்திருந்தார்கள். ஒரு நாள் மாலை கமக்காரர் எல்லாரும் ஒன்றுகூடி வந்து சுவாமிகளிடம் முறையிட்டார்கள்.

அடுத்தநாள் மத்தியானம் வரை சுவாமிகள் வீட்டிற்கு வெளியே வரவில்லை.மத்தியானத்தின் பின் வீட்டிற்கு வெளியே வந்தார்கள். 'ஷறிஷறி' எனச் சத்தமிட்டுக்கொண்டு வெளியே உலவினார். சிறிது நேரத்தில் மழையும் சோனாவாரியாகப் பொழியத் தொடங்கியது. வயல் முழுவதும் வெள்ளம் பெருக்கெடுத்தோடியது. சுவாமிகள் கந்தப்பன் வீட்டில் நீண்ட நாட்கள் தங்கி விட்டார்கள். காரைதீவு செல்ல எண்ணம் கொண்டார். அன்று காலையில் கொழும்பு, காலி முதலிய இடங்களிலிருந்து சுவாமியைத் தரிசிக்கப் பிரபல்யமான சில செட்டிமார் வந்திருந்தனர். வரும்போது கையுறையாகப் பழவர்க்கங்கள், கற்பூரம், சாம்பிராணி முதலிய பொருட்கள் கொண்டுவந்ததோடு பாதகாணிக்கையும் வைத்து வணங்கினர்.

வந்தவர்கள் எல்லோருக்கும் கந்தப்பன் அன்பினோடும் பால், பழம், வழங்கினார். வந்தவர்கள் பால் அருந்தும் போது சுவாமிகள் இது நந்தனாருடைய வீடு; பால் அருந்துவீர்களா? என்று கேட்டார். ஒரு அன்பர், "இது சுவாமிகளுடைய பிரசாதம். இது கிடைப்பதற்கு நாங்கள் முற்பிறப்பில் என்ன தவம் செய்தோமோ?" என்றார். செட்டியார் கொண்டு வந்த பழம், பணம் எல்லாவற்றையுமே சுவாமிகள் கந்தப்பரிடம் விட்டு செட்டியாரின் மோட்டாரில் ஏறிக் காரைதீவு சென்றுவிட்டார். கந்தப்பன் மாதக்கணக்காகச் சுவாமிகளையும் அன்பர்களையும் உபசரித்த கூலியைச் சுவாமிகள் எவ்வளவு நாசூக்காகச் செலுத்தி விட்டுச் சென்றார் என்பதை நினைக்கும் போது உடல் புல்லரிக்கிறது.

நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் கூட்டுறவே நாட்டுயர்வு புத்தகத்துள் உறைவாழ்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தை கர்ப்பந்தரிக்கும் முன்பே குழந்தைக்கு பெயரிட்ட சுவாமிகள்

ஒருநாள் சுவாமி அவர்களுக்கு 5 ரூபாவுக்கு மணி ஓடர் வந்திருந்தது. அதனை மாற்றுவதற்காகக் கல்முனைத் தபாற்கந்தோருக்கு எதிர்மன்னசிங்க உபாத்தியாயர் சென்றிருந்தார். சுவாமிகள் நடுக்கத்தோடு கையொப்பம இட்டிருந்தபடியால் தபால் அதிபராய் இருந்த சித்திரவேல் அவர்கள் பணத்தைக் கொடுக்க மறுத்து விட்டார்கள். சித்திரவேல் அவர்கள் சுவாமிகளையும் உபாத்தியாயரையும் நன்கு அறிந்தவர். உபாத்தியாயர் தாம் மேலொப்பம் போட்டுத் தருவதாகக் கூறியும் தபாலதிபர் மாற்றிக் கொடுக்க மறுத்துவிட்டார். சுவாமிகளிடம் காரணத்தைக்கூறி உபாத்தியாயர் இன்னொரு ஒப்பம் போட்டுத் தருமாறு கூறினார். சுவாமிகள் தெளிவான எழுத்தில் 'ஆ.சி.சித்தானைக்குட்டி சுவாமி' என்று எழுதிக் கொடுத்தார்கள். இதன் பின்பே தபாலதிபர் மணி ஓடரை மாற்றிக் கொடுத்தார்.

சில நாட்கள் சென்றன. தபாலதிபருடைய 2 வயது மகன் திடீரென நோய் கண்டு இறந்து விட்டான். இத்துன்பத்தைத் தபாலதிபராலும் மனைவியாலும் தாங்க முடியவில்லை. இவர்கள் துன்பத்தை விசாரிக்க சுவாமிகளே சிலரோடு இவர்கள் இல்லம் சென்றிருந்தார். சுவாமிகள் செல்லும் போது வீட்டில் தபாலதிபர் நடுக்கத்தோடு இருந்தார். அன்று சுவாமிகளின் நடுங்கிய கையொப்பத்திற்குப் பணம் கொடுக்க மறுத்த தபாலதிபர் இன்று தாமே நடுக்கத்திற்கு ஆளாகி இருந்தார்.

அம்மா, அவன் புண்ணியசாலி, அவனை ஆண்டவன் கெதியில் அழைத்துக் கொண்டார். உங்கள் துன்பத்திற்கிரங்கி மறுபடியும் அவன் உங்களிடம் வருகின்றான். நீங்கள் கர்ப்பவதிதானே? என்றார்கள் சுவாமிகள். அம்மையார் மறுத்தார். அவர் கர்ப்பவதியாக இருந்ததை அவரே அறியாது இருந்தார். சுவாமிகள் கூறிய அதே மாதத்தில் அம்மையார் கர்ப்பவதியாகி உரிய காலத்தில் ஒரு ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தார். சுவாமிகள் தீர்க்கதரிசனம் சொன்ன அதே நாளில் உனக்குப் பெயர் சித்திரவேல், மகனுக்கு கதிர்வேல் என்று பெயரிடுமாறு கூறினார்கள். அவ்வண்ணமே மகனுக்குக் கதிர்வேலு என்று பெயரிட்டு வளர்த்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன்பின்பு சித்திரவேல் அடிக்கடி சுவாமிகளிடம் வரத்தொடங்கினார். வரும்போதெல்லாம் தனது குடும்பப் பாரத்தைப் பற்றியேதான் பேசுவார். தனக்கு ஒரு வீடுமாத்திரமேதான் உண்டென்றும் மற்றைய பிள்ளைகளுக்குச் சீதனம் கொடுக்க பொருள் பண்டமோ காசோ இல்லை என்றும் கவலைப்படுவார்.

ஒருநாள் சுவாமி அவர்கள் டேய் சித்திரவேல் உனக்கு எப்பொழுது பார்த்தாலும் குடும்பக்கவலை தான். உனது மூத்த மகளுக்கு செல்லையா என்றொரு மாப்பிள்ளை வருவான். அவன் வந்த பின் உனது பாரங்களையெல்லாம் அவன் தாங்கிக் கொள்வான்" என்றார். ஒருநாள் திடீரென சித்தாண்டி வேலாயுதன் விதானையாருடைய மூத்த புத்திரன் செல்லத்தம்பி டாக்டரும் மற்றும் சிலரும் கல்முனைத் தபாற்கந்தோருக்கு வந்து, அளவைக்காரத் துரை செல்லையாவை மணம் பேசி விவாகத்தைத் தீவிரமாக நடத்தி வைத்தார்கள்.

## மௌனானந்த சுவாமிகள்

பழனிமலை அடிவாரத்தில் இருந்து நீண்டகாலம் தவத்தை மேற்கொண்ட மௌனானந்த சுவாமிகள் கதிர்காம முருகனைத் தரிசிப்பதற்காகக் கதிர்காமம் வந்திருந்தார். இந்தியாவில கயிலாயம் முதல் கன்னியாகுமரி வரை யாத்திரை செய்தாலும் கதிர்காம முருகனைத் தரிசித்தால்தான் அந்த யாத்திரை பூரணமானதாகக் கருதப்படும் மௌனானந்த சுவாமிகள் சில நாட்களாவது கதிர்காமத்திலிருந்து தவம் செய்து தவசித்தி பெறும் நோக்கமாகவே வந்திருந்தார்.

சுவாமிகள் கவர்ச்சியான தோற்றம் உடையவர். ஒருமுறை பார்த்தவர்கள் அவரது திருவுருவை எந்தநாளிலும் மறக்க முடியாது. அவர் காவியுடை தரிப்பதில்லை. பால்போல் வெள்ளை நிறமுடைய 1703 மல்வேட்டியே உடுப்பார் ஐந்து முழம் வேட்டியாக உடுப்பார். இரண்டு முழத்தில் கட்டைக் கால்சட்டை தைத்துப் போடுவார். ஒரு முழத்தில் கௌபீனம் அணிவார். தினமும் அதிகாலையில் ஸ்நானம் செய்யும் போது உடைகளைத் தோய்த்து உலரவிடுவார். அதனால் அவருடைய உடை எந்த நேரத்திலும் பரிசுத்தமாகவே காணப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாண்டோ சங்கரதாஸ் அவர்கள் மட்டக்களப்பைப் பிறப்பிடமாகக் கொண்டவர்கள். ஆள் சாண்டோவாக இருந்தாலும் அவரது உள்ளம் எந்த நேரமும் சாதுக்களைச் சுற்றியே வட்டமிடும். கதிர்காம ஆடிவிழாவிற்குத் தவறாது செல்வார். ஆடிவிழாவின் போது மௌனானந்த சுவாமிகளைத் தரிசித்தார். மௌனானந்த சுவாமிகள் மௌனமாய் இருந்தாலும் இருவரது உள்ளங்களும் பேசிக்கொண்டன. சங்கரதாஸ், மௌனானந்த சுவாமிகளை மட்டக்களப்புக்கு அழைத்து வந்தார்.

சித்தானைக்குட்டி சுவாமிகள் கிழக்கு மாகாணத்தில் பிரபல்யம் பெற்றிருந்த காலம். சித்தானைக்குட்டி சுவாமிகள் கள்ளுக் குடிப்பார். இறைச்சி தின்பார் என்று சிலர் மௌனானந்த சுவாமிகளிடம் கூறுவார்கள். அவர் புன்முறுவல் பூத்தவராய், அவர் செய்கிறாரே என்று நாமும் அதைச் செய்யலாகாது. மகான்கள் ஏதோ கருத்துக்கொண்டு செய்கிறார்கள். அவர்கள் புலாலை மரக்கறி ஆக்குவார்கள்.மரக்கறியைப் புலால் மணம் வீசச் செய்வார்கள். இறந்தாரை எழுப்புவார்கள். நோயாளியைத் தமது பார்வையினாலேயே எழுந்து உலாவச் செய்வார்கள். ஆதலால் அவர்கள் சாப்பிடுகிறார்களே என்று நாம் சாப்பிடுவது பிழை எனக் கூறினார்கள்.

சுவாமிகள் ஒரு முருக பக்தர். கந்தசஷ்டி கவசம், கந்தர் அனுபூதி, கந்தரலங்காரம் போன்ற நூல்களைத் தினமும் பாராயணம் செய்பவர். ஒரு முறை சில அன்பர்கள் சென்றிருந்தனர். அதில் ஒரு அன்பர் கந்தசஷ்டி கவசம் வைத்திருந்தார். அதில் ஒரு பகுதியை எடுத்து அப்பகுதியை வாசிக்குமாறு சைகை செய்தார்.

**"அட்டலட்சுமிகளில் வீரலட்சுமிக்கு**
**விருந்துணவாகச் சூரபத்மாவை**
**துணிந்த கையதனால் இருபத்தேழ்வர்க்கு**
**உவந்து அமுதளித்த குருபரன்**
**பழனிக் குன்றினிலிருக்கும் சின்னக்**
**குழந்தை சேவடி போற்றி"**

என்பதே அப்பகுதியாகும். அப்பகுதியை மும்முறை வாசிக்கச் செய்து வந்தவர்களை ஆழ்ந்த தியானத்திற்கு அழைத்துச் சென்றார்கள். ஒருமந்திரத்தையோ, ஒரு பாடலையோ, ஒரு புத்தகத்தையோ, ஜெபத்தின் மூலமும் பாராயணத்தின் மூலமும் தனக்கு ஆக்கிக் கொள்பவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசாதாரண சக்தியைத் தனக்குத் தேடிக் கொள்ளுகின்றான். இந்நிலையை மௌனானந்த சுவாமிகளிடம் காண* முடிந்தது.

தியானம் கலைந்தபின் சுவாமிகள் நிலத்திலே பின்வரும் வசனங்களை எழுதிக்காட்டினார்கள்.

**"உன்னிடத்திலுள்ளதை இல்லையென்னாமல் மற்றவர்களுக்குக் கொடு."**
**"எங்கும் அலையாதே, இருந்தபடியே இரு"**
**"கோபத்தை விடு. முருகன் அருள் தானேவரும்!"**

அங்கு சென்றவர்களுக்குச் சுவாமிகள் அன்று அருளிய அருளுபதேசம் இதுவாகும். தம்மை நாடி வருவோருக்கு மிக எளிய உபதேசங்களையே சுவாமிகள் செய்தார்கள். காரணம்; உபதேசம் பெறும் மக்கள் அவற்றைத்தானும் செயலில் கொண்டு வருவதில்லை, சுவாமிகளை ஒருமுறை தரிசித்த தரிசனையிலேயே கடவுளைக் கண்டுவிட வேண்டும் என்று நினைக்கிறார்கள். ஒருவன் தனது சுய சாதனையினாலேயேதான் முன்னேற முடியும் குருமார் வழிகாட்டிகளாக மாத்திரம் தான் இருப்பார்கள்.

**"அதிகாலை நித்திரை விட்டுஎழு.**
**எழும்போதே ஆண்டவனை நினை.**
**காலைக் கடன்களை குறைவறச் செய்.**
**தேநீர் காப்பியைத் தூரத்தள்ளு.**
**மரக்கறி உணவு மனதிற்கு மகிழ்ச்சி.**
**பசித்து வந்தோர் முகம்பார்.**
**உண்ணுமுன்பு ஒரு கணம் இறைவனை நினை.**
**கடமையில் தவறினால் கடவுளைக் காணமாட்டாய்.**
**நெற்றிக்கழகு விபூதி பூசுதல்.**
**படுக்குமுன்பு இறைவனைப் பிரார்த்தி."**

இவை எவ்வளவு இலகுவான அருளுபதேசங்கள். இவற்றை வாசிக்கும் போதே அவற்றில் என்ன கஷ்டம் உண்டு என்று சொல்லத்தோன்றும். ஆனால் இவற்றில் ஒன்றையும் ஒழுங்காகக் கடைப்பிடித்திருக்க மாட்டோம். மகான்களுடைய தரிசனையினாலே எமது சோம்பல் நீங்கி ஒரு புத்துணர்வு தோன்றுகிறது. சாதனையாளன் ஒருவன் அடிக்கடி சாதுக்களின் தரிசனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறுவதனால் தனது சாதனையில் எதிர்பாராத முன்னேற்றத்தை அடைகின்றான்.

மௌனானந்த சுவாமிகளைத் தரிசிப்பவர்கள் சித்தானைக் குட்டிகளையும் தரிசிக்கச் செல்வார்கள். இருவரும் இருவேறு எதிர்த்திசைகள் ஆனால் அடையும் இடம் ஒன்றுதான். இதனை இரு சுவாமிகளுமே உணர்ந்திருந்தார்கள். இரு சுவாமிகளும் ஒருவரை ஒருவர் சந்தித்ததில்லை. அவர்கள் சந்திக்க வேண்டுமென்று சங்கற்பம் செய்து கொண்டதுமில்லை. 1939 ஆம் ஆண்டில் சுவாமிகள் சமாதி அடைந்து ஆலையடிச் சோலையில சமாதி வைக்கப்பட்டார்.

## மிளகாய்ச்சாமியார்

இவர் சித்தாண்டி முருகன் சந்நிதியில் நீண்ட காலம் தவம் புரிந்து வந்தார். இவர் பூர்வாச்சிரமத்தில் ஈச்சிலம்பத்தை ஆசிரியராக இருந்தார். பொருள் பண்டம் உடையவர். ஒரு கடைவைத்து வியாபாரமுஞ் செய்து வந்தார். வேளாண்மைச் செய்கையிலும் ஈடுபடுவார். இருபாதங்களும் சப்பையானவை. ஏதோ ஒரு பழைய ஏடுகிடைத்தது. அதில் ஸ்ரீ பஞ்சாட்சரசக்கரம் இருந்தது. அதில் கண்டவாறு ஒரு பலகையில் எழுதினார். தினமும் தியானஜெபத்தில் மும்முரமாக ஈடுபடலானார். உரு ஏறத் திருஏறும் என்று சொல்லுவார்கள். வீட்டை மறந்தார். எல்லாப்பற்றும் கழன்றது. சித்தாண்டி முருகன் சந்நிதியிலேயே தொடர்ந்து வசிக்கலானார்.

உற்றார் உறவினர் வந்தனர். அவர்களைக் கண்ணெடுத்தும் பார்க்கவில்லை. தியானத்தில் லயித்தார். தியானசித்தி பெற்றார். யாராவது சாப்பாடு கொண்டுவந்து கொடுத்தால் சாப்பிடுவார். சுவாமிக்கு என்ன வேண்டும் என்று கேட்டால் மிளகாய்த் துவையல் வேண்டும் என்பார். மிளகாயை அப்படியே அரைத்துக் கொண்டுவரத் தலைப்பட்டனர். அவற்றை அப்படியே விழுங்கிவிடுவார். சிலசமயம் உடலெல்லாம் மிளகாயைப் பூசி வெயிலில் இருப்பார். மக்கள் வேடிக்கை பார்ப்பர். மிளகாயை விரும்பிச் சாப்பிட்டால் அவரது சொந்தப் பெயர் மறைந்து மிளகாய்ச்சாமியார் என்று எல்லோராலும் அழைக்கப்பட்டார்.

ஒரு சாக்கினுள்ளே இருகால்களையும் செலுத்திக்கொண்டு தெரு ஒரத்திலே படுத்து உறங்குவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில் குருக்களையும் மற்றும் சிலரையும் வாய்க்கு வந்தபடி ஏசுவார்; திட்டுவார். இவ்வன்சொற்களைப் பொறுக்கமாட்டாதவர்கள் தடி கொண்டு அடிப்பர். சிரித்தமுகத்தோடு அவற்றை எல்லாம் பொறுத்துக் கொள்வார். ஒருநாள் ஒரு தடியன் சுவாமிகளைத் துடிக்கப்பதைக்க அடித்தான். "நல்லாய் அடிபடு. நீ செய்தவினை துலையவேண்டாமா? அவனுடைய சூட்டுக்கு நெருப்பு வைத்தாய் அல்லவா? அவன் குடும்பம் பசியால் வாடியதைக்கண்டு மகிழ்ந்தாய் அல்லவா? அப்படிச் செய்தாய் அல்லவா? இப்படிச் செய்தாய் அல்லவா? ஆமாம் போடு, போடு நல்லாய்போடு" அடித்தவன் குண்டனாயிருந்தாலும் களைத்துவிட்டான். அடி ஓய்ந்தது. அவனுக்கு ஒரு தீர்க்கதரிசனமும் கூறினாராம்.

"என்னப்பா போதுமா? நாலாம் சந்தியிலே சட்டைக்காரன் தொப்பிக்காரன் வருவான், கீறுவான் கிளிப்பான்."

இவ்வார்த்தைகளைக் கேட்டவனுக்கு உள்ளூரப் பயம் தொட்டுவிட்டது. ஆனால் அவனது மமதை சுவாமியிடம் மன்னிப்புக் கேட்க மறுத்து விட்டது.

சில நாட்களுக்குப் பின் அக்கொடிய மனிதன் வேறொரு உலுத்தனால் குத்தப்பட்டுச் சந்தியிலே விழுந்துகிடந்தான். தேடுவாரற்றுக் கிடந்தான். அவனுக்காக ஒரு சொட்டுக் கண்ணீர் விட ஆளில்லை. பிரேதபரிசோதனை நடத்திய பின் அரசாங்கத்தின் செலவிலேயே அடக்கம் செய்யப்பட்டான்.

மிளகாய்ச் சுவாமியார் சித்தானைக்குட்டிச் சுவாமிகளைச் சந்திக்க வந்திருந்தார். கையில் ஒரு உலக்கையுடன் காளியின் ஆவேசத்தோடு மிளகாய்ச் சாமியாரைத் துரத்திக்கொண்டு வந்தார். மிளகாய்ச் சாமியார் ஒரு ஈர்க்கை உயர்த்தி "என்னடி உலக்கையா" என்று கூறினார். உடனே சுவாமிகளின் ஆவேசம் தணிந்து உலக்கையைக் கீழேபோட்டு மிளகாய்ச்சாமியாரைத் தழுவிக் கொண்டார். சில நாட்கள் அங்கிருந்தபின் பழநிக்குச் செல் என்று சுவாமிகளுடைய கட்டளை பிறந்தது.

பழநிக்குச் செல்லுமுன் யாழ்ப்பாணத்திற்குச் சென்றார். அங்கே சடைவரத சுவாமிகளுடைய மடத்திற்குச் சென்றார் அங்கும் சோதனை நடைபெற்றது. அச்சோதனையிலும் வெற்றிபெற்று 1001 இளநீர்களை தமது தலையிலே தாமே அடித்து அபிஷேகம் செய்து கொண்டார். அதன் பின் பழநிக்குச் சென்று அங்குச் சிலகாலம் வசித்து அங்கேயே சமாதி அடைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாமி விபுலானந்தர்

கிழக்கு மாகாணத்தில் காரைதீவு என்றொரு ஊர் இருக்கிறது என்பதை உலகறியச் செய்த பெருமை சுவாமி விபுலானந்த அடிகளாருக்குரியதாகும். சாதுக்கள் உலகத்தில் காரைதீவை உதயசூரியனாக்கிய பெருமை சித்தானைக்குட்டி சுவாமிகளைச் சேர்ந்ததாகும். சித்தானைக்குட்டி சுவாமிகளுக்கு சுவாமி விபுலானந்த அடிகளார்மீது தனி ஒரு மதிப்பும் அன்பும் இருந்து வந்தது. ஆனால் சித்தானையின் அருளாட்டங்களைச் சுவாமி விபுலானந்தரால் புரிந்து கொள்ள முடியவில்லை.

ஒரு நாள் நண்பகல் நேரம். சித்தானைக்குட்டி சுவாமிகள் கல்முனை இராமக்கிருஸ்ணமிஷன் பாடசாலை ஒழுங்கையால் சென்று கொண்டிருந்தார். பாடசாலை வாயிலை அடைந்ததும் பாடசாலைக்குட் புகுந்தார். "சுவாமியாரே, நாய் கட்டியிருக்கா? " என்று கேட்டுக்கொண்டே உள்ளே சென்றார்கள். சுவாமி விபுலானந்தருடன் நொத்தாரிஸ் இராஜேஸ்வர முதலியார் பேசிக்கொண்டிருந்தார். இருவரில் எவராவது சுவாமிகள் வாருங்கள் என்றோ, அன்றி எழுந்தோ, ஆசனம் கொடுத்தோ உபசரிக்கவில்லை. சுவாமிகள் தாமகவே சென்று சுவாமி விபுலானந்தர் இருந்த சாய்மனை நாற்காலியின் வலது பக்கத்துச் சட்டத்தில் உட்கார்ந்தார்கள். சுவாமிகள் விபுலானந்த அடிகளாரைப் பார்த்து,

"நீ சாமி விதானையாரின் மகனல்லவா? உன் பெயர் மயில்வாகனம் அல்லவா? விபுலானந்த சுவாமி என்ற பெயர் எப்படிவந்தது? நீ சுவாமியா?" என்றெல்லாம் கேள்விமேல் கேள்வி போட்டுக் கொண்டேயிருந்தார். கதிரைக் கையிலிருந்து இடையிடையே உன்னி உன்னி எழும்ப கதிரைக்கை ஒடிந்துவிழும்போல இருந்தது. அந்த நேரம் நொத்தாரிசார் எழும்பி "சுவாமி இந்த நாற்காலியில் உட்காருங்கள். சாய்மனைக் கதிரை கைஒடியும் போல இருக்கிறதே" என்றார். சித்தானை சினந்து "டேய் உன் வேலையை நீ பார். என்வேலையை நான் பார்ப்பேன்" என்றார். பின்னர் ஸ்ரீ இராமகிருஸ்ணரின் படத்தைப் பார்த்து, "இவன் என்ன பெரிய சாமியா" என்று தொடங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வளவு நேரமும் சித்தானையின் திருவிளையாடலை அமைதியாகப் பொறுத்துக் கொண்டிருந்த அடிகளார் கோபாவேசத்தரானார். "இவ்வளவு நேரமும் என்னைப்பற்றிச் சொன்னதையெல்லாம் பொறுத்துக் கொண்டேன். என் குருநாதனைப்பற்றி இகழ்ந்து சொல்வீரகளாயின் எனது பொறுமையை இழக்க நேரிடும். அதனால் சங்கடம் வரும்" என்றார்.

சித்தானை சிரித்துக்கொண்டு அமைதியாக எழுந்து "நாய் கட்டாதவன் சாமியாவதெப்படி?" என்று கூறினார். விபுலானந்தரின் வலது பாதத்தில் உமிழ்ந்தார் சுவாமிகள். அந்தக் கணமே நொத்தாரிசு ஓடிச்சென்று தண்ணீர கொண்டு வந்து அடிகளாரின் பாதங்களைக் கழுவினார். நாய்கட்டாதவன் என்று சுவாமிகள் குறிப்பிட்டது ஆணவத்தை அடக்காதவன் என்ற குறிப்பிலேதான்.

சுவாமிகள் உடனே வெளியேறினார். நேராகச் சிவபாதம் வித்தியாதரிசிகளின் வீட்டிற்குச் சென்றார். தனக்குச் சாராயம் வேண்டும் என்று கேட்டார். வித்தியாதரிசகர் தான் குடிப்பதில்லை என்றும் புலால் உண்பதில்லையென்றும் கூறினார். ஆனபடியினால் தான் உபயோகிக்காத ஒன்றை மற்றவர்களுக்குக் கொடுக்க முடியாதென மறுத்துவிட்டார். சுவாமிகளும் கண்டிப்பாகக் கேட்டார். அவரும் கண்டிப்பாக மறுத்துவிட்டார். ஈற்றில் சுவாமிகள் சாந்த சொருபராய் நீ கட்டாயம் மதுவும் பாவிப்பாய்! மச்சமாமிசமும் புசிப்பாய் என்று கூறிவிட்டு வெளியேறினார்.

சிவபாதம் அவர்கள் கல்முனையிலிருந்து மாற்றம் பெற்று கற்றனுக்குச் சென்றார்கள். அங்கே அவருக்கு டபிள்நியூமோனியா வந்து மிகக் கஷ்டப்பட்டார். இறைவன் திருவருளால் சுகம் பெற்றார். ஆனால் சித்தானையின் தீர்க்கதரிசனமும் நிறைவேறியது. டாக்ரரின் ஆலோசனையின் படி விறண்டியும் கோழிக்குஞ்சு விறாத்தும் பாவிக்க நேர்ந்தது.

விபுலானந்த அடிகளார் பாரிசவாத நோயால் வருந்த வேண்டிய காலம் வந்தது. கொழும்பில் அடிகளார் ஆஸ்பத்திரியில் வேதனையுற்றிருந்த காலம் முழுவதும் சித்தானையும் மிக வருந்தியிருக்கிறார். அடிகளாரின் நோயைத் தாமே ஏற்று அநுபவித்திருக்கிறார். யாரோ ஒருவன் தன்னை வாளால் அறுப்பது போன்று சுவாமிகள் துடிதுடித்துக் கஷ்டம் உற்றார். அந்தக் காலத்தில் சுவாமிகளைப் பார்க்கச் சென்றவர்களிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்மை யாரோ வாளால் அறுத்துக் கொடுமைப்படுத்துகிறான் என்று சொல்லிக்கொண்டிருப்பார். அடிகளார் மறைந்ததும் சுவாமிகள் அநுபவித்த துன்பமும் நீங்கிவிட்டது. இதிலிருந்து சுவாமிகளுக்கு அடிகளார் மீதிருந்த அன்பும் மதிப்பும் நன்கு விளங்குகிறது. கலைகள் எல்லாம் கற்றாலும், சுவாமி வேடம் பூண்டாலும் நான் என்ற அகந்தை நீங்காவிட்டால் யாதும் பயனில்லை என்பதை விளக்கவே சித்தானை மேற்படி திருவிளையாடலை நடத்திக் காட்டியது.

## பனங்காட்டில் சுவாமிகள்

சுவாமிகள் கிழக்கு மாகாணத்திலுள்ள எல்லாத் தமிழ்க் கிராமங்களுக்கும் காலால் நடந்து சென்று அக்கிராமங்களைப் புனிதப்படுத்தியுள்ளார். பனங்காடு என்பது அக்கரைப்பற்றைச் சேர்ந்த ஒரு கிராமம். அங்கு பெரியதம்பி என்றொரு புண்ணியசீலர் வாழ்ந்து வந்தார். சுவாமிகள் பனங்காட்டிற்கு வருவதாகக் கேள்வியுற்றார். சுவாமிகளுக்கும் அவரோடு உடன் வருபவர்களுக்கும் பெரிய விருந்து ஒன்று தயாரித்தார். அவர் எதிர்பார்த்தபடி சுவாமிகள் அன்று வரவில்லை. அவரும் அவரது மனைவியாரும் அன்று முழுவதும் சுவாமிகளை எதிர்பார்த்து உண்ணாமலே இருந்து விட்டார்கள். உணவுப் பொருட்களை அப்படியே எடுத்துவைத்து மூடிவிட்டுச் சுவாமி வந்த பின்பு தான் தாம் உண்பதாக பிரதிக்கினை எடுத்துக் கொண்டார்கள். மூன்று நாட்களின் பின்புதான் சுவாமிகள் வந்தார்கள். வீட்டிலுள்ளவர்கள் மூன்று நாட்களாக உண்ணவே இல்லை.

சுவாமிகள் வரும் போதே சாப்பாட்டைக் கெதியில் எடுங்கள்; நல்லாகப் பசிக்கிறது என்று கூறினார்கள். சாப்பாட்டைத் திறந்து பார்த்த போது அப்பொழுது ஆக்கிய உணவு போல ஆவி பறந்தது. எல்லாரும் மகிழ்வுடன் உண்டு மகிழ்ந்தனர்.

பெரிய தம்பிக்கு நீண்ட நாட்கள் குழந்தை இல்லை. பலருடைய முன்னிலையில் தமக்குப் புத்திரப் பாக்கியம் கிட்ட வேண்டுமென்று சுவாமிகளிடம் வேண்டுதல் செய்தார். "என்னைப்போல உனக்கொருவன் வருவான்" என்று சுவாமிகள் கூறினார்கள். சுவாமிகளுடைய வாக்குப் பலித்தது. ஒரே ஒரு மகன் பிறந்துள்ளான். அவரின் பெயர் இராமநாதன் என்பதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனங்காட்டிலுள்ள முருகன் மார்க்கண்டு என்பவருக்குத் திடீரெனப் பைத்தியம் பிடித்து விட்டது. சுவாமிகளுடைய பக்தர்களிற் சிலர் அவரைச் சுவாமிகளிடம் கொண்டு சென்றனர். சுவாமிகள் ஒரு கிளாசில் சாராயத்தை ஊற்றிக் கொடுத்தார். மார்க்கண்டு அதை வாங்கிக் குடித்தார். குடித்து முடிந்ததும் கிளாசையும் சப்பிச் சாப்பிடத் தொடங்கினார். அத்துடன் பைத்தியமும் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விட்டது.

பனங்காட்டில் ஆறுமுகம் குடும்பத்தினர் சுவாமிகள் மீது மிகுந்த பற்றுடையவர்கள். ஒருமுறை ஆறுமுகத்திற்குக் கடுமையான காய்ச்சல். காய்ச்சலின் வேகத்தில் மணித்தியாலக்கணக்கில் அறிவிழந்திருந்தார். உடனே சுவாமிகளிடம் காரைதீவிற்குக் கொண்டு சென்றார்கள். அங்கு சுவாமிகள் இல்லை. களுவாஞ்சிக்குடியில் இருக்கிறார் என்று சொன்னார்கள். சுவாமியைத் தேடி அங்கு சென்று இருக்கும் இடத்தைக் கண்டுபிடித்தார்கள். சுவாமிகள் ஆறுமுகத்தைத் தன்மடிமீது படுக்கவைத்தார். டாக்டர் வரவழைக்கப்பட்டார். டாக்டர் பரிசோதித்துப்பார்த்துவிட்டு தகுந்த நடவடிக்கை எடுக்காவிட்டால் உடனே இறந்துவிடுவார் என்றார். ஆறுமுகம் கண்விழித்துச் சுவாமிகளுடைய முகத்தைப் பார்த்தார். சுவாமிகள் வேண்டாம் என்பதற்கு அடையாளமாகத் தலையை அசைத்தார். சுவாமிகள் மீது கொண்ட நம்பிக்கையினால் மருந்தை நாடவில்லை. சுவாமிகள் சிறிது நேரம் மௌனமாய் இருந்தார். ஆறுமுகம் நோய் தீர்ந்து சுவாமிகளுடைய மடியினின்று எழுந்து சுவாமிகளை வணங்கினார். கூட இருந்தவர்கள் எல்லாரும் பெரிய ஆச்சரியத்திற்குள்ளானார்கள். சுவாமிகளோ ஒன்றும் நடவாதது போல் மிகமிகச் சாதாரணமாகக் காணப்பட்டார்.

ஒருமுறை ஆறுமுகத்தினுடைய மனைவியாருக்குக் கடுமையான சுகவீனம் ஏற்பட்டது. ஆறுமுகம் மனைவியாரைக் கூட்டிக் கொண்டு சுவாமிகளிடம் காரைதீவுக்குச் சென்றார். இவர்கள் செல்லும் போது நன்றாக இருட்டிவிட்டது. அங்கு பல அடியார்கள் தங்கி இருந்தனர். சுவாமிகள் இப்பொழுதுதான் சாப்பிட்டுவிட்டுப் படுத்துவிட்டார் என்றார்கள். இவர்கள் இருவரும் தாம் கொண்டு சென்ற பிரசாதத்தைச் சுவாமிகள் முன் வைத்துச் சூடம் கொழுத்திக் கும்பிட்டார்கள். சுவாமிகள் புன்முறுவலோடு எழுந்து படைக்கப்பட்ட பிரசாதம் முழுவதையும் உண்டுவிட்டு அந்த அம்மையாருக்கு விபூதி கொடுத்தார். அத்துடன் அம்மையாரின் நோய் நீங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனங்காட்டில சிவன் கோயில் ஒன்று உள்ளது. கோயில் கட்டப் படுவதற்கு முன்பு மக்கள் அந்த இடத்திற்குப் பகலில்தானும் போக அஞ்சுவார்கள். காரணம் அந்த இடத்தில் பேய்கள் நடமாடுவதாக வதந்தி பரவியிருந்தது. சுவாமிகள் அங்கு வருங்காலங்களில் இரவிலே உலாவித்திரிவார்கள். ஒருநாள் சுவாமிகள் அந்த ஊரவர்களை அழைத்து, காலால் நிலம் அளந்து இந்த இடத்தில் சிவன் கோயில் கட்டுங்கள் என்று அடையாளம் வைத்துக் கொடுத்தார்.

பிராமணர்களும் ஊர்ப் பிரமுகர்களும் விசேட சோதிடர்களை வரவழைத்து நிலையம் இட்டுத் தருமாறு கேட்டார்கள். வந்த சோதிடர்களும் அதே இடத்தையே கோயில் கட்டுவதற்கு நிலையமாகத் தெரிவு செய்தார்கள். அதே இடத்தில் தான் கோயிலும் கட்டப்பட்டுள்ளது.

பனங்காட்டு விதானையார் கணபதிப்பிள்ளை சதாசிவத்திற்கு மிகக் கடுமையான நோய். யாழ்ப்பாண வைத்தியர்களும் இயலாதெனக் கைவிட்டுவிட்டார்கள். ஆறுமுகத்தை விபூதி போடுமாறு வற்புறுத்தினார்கள். சித்தானைக்குட்டி சுவாமிகள் கொடுத்த விபூதியை ஆறுமுகம் அவரை நினைத்துக் கொண்டே போட்டார். நோய் உடனே மாறியது.

பனங்காட்டில் உள்ள செம்பன் பாக்கியம் என்பவர் ஒரு சலவைத் தொழிலாள வர்க்கத்தைச் சேர்ந்தவர். கலியாணத்தகராறு காரணமாக அவருக்கு யாரோ சூனியம் செய்து விட்டார்கள். பல வைத்தியர்களும் மந்திரவாதிகளும் முயன்றும் இயலாது கைவிட்டுவிட்டார்கள். சுவாமி கொடுத்த விபூதியை ஆறுமுகம் வெகுபக்தி சிரத்தையோடு சுவாமிகளின் நாமத்தை ஓதிக்கொண்டே போட்டார்கள். அத்துடன் நோய் இருந்த இடம் தெரியாமலே போய்விட்டது.

நடராஜா என்பவருக்கு ஒரு குழந்தை. அதன்பெயர் சரஸ்பதி என்பது. குழந்தைக்கு நோய் கண்டதும் மட்டக்களப்பு ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசென்றனர். 21 நாட்களாகியும் குழந்தையின் நோய் குறையவில்லை. குழந்தையை உடனே கொண்டு செல்லுமாறு டாக்டர்கள் பெற்றாருக்குத் தந்தி அடித்தார்கள். குழந்தை இனி ஒரு நாளைக்கு மேல் உயிர் வாழாது என்று டாக்டர்கள் முடிபு கட்டினர். அதனால் குழந்தையைப் பெற்றாரிடம் ஒப்படைத்துவிட வேண்டுமென்று கருதினர். குழந்தையை நேராக ஆறுமுகம் வீட்டிற்கே கொண்டு சென்றனர். குருநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்த விபூதியை ஆறுமுகம் குருநாதரின் நாமத்தை உச்சரித்துக் கொண்டே குழந்தையின் வாயில் இட்டார். வேறு எந்த மருந்துகளும் இல்லாமலே குழந்தையின் நோய் குணமாகிவிட்டது.

## கோளாவிலில் சுவாமிகள்

கோளாவில் குழந்தைவேல் வண்ணக்கர் சுவாமிகளுடன் மிக ஈடுபாடுள்ளவர். ஒருநாள் இருவரும் தெருவிலே சென்று கொண்டிருந்தார்கள். எதிரே ஒருவன் கூடையில் மீன் கொண்டு வந்தான். அதில் ஒரு கோர்வையைச் சுவாமிகள் எடுத்தார்கள். மீன் கொண்டு வந்தவன் நிமிர்ந்து பார்த்து விட்டுத் தன் வழியே சென்று விட்டான். பக்கத்திலுள்ள கோயிலில் கொண்டு சென்று மீனைப் பக்குவப்படுத்தி அடுப்பில் வைத்து நெருப்பை மூட்டினார்கள். சுவாமி கோயிலில் மீன் ஆக்குகிறார் என்ற செய்தி கோயில் முகாமையாளருடைய காதுக்கு எப்படியோ எட்டியது. ஓடோடியும் வந்தார். சட்டியைத் திறந்து பார்த்தார். சட்டியில் பலாச்சுளைகள் இருப்பதைக் கண்டு சுவாமிகளிடம் மன்னிப்புக்கோரிச் சென்றுவிட்டார்.

குழந்தைவேல் வண்ணக்கர் சிதம்பரயாத்திரை சென்று திரும்பினார். ஊர் திரும்பும்போது ஊர்க்கோடியிலே சுவாமிகளைத் தரிசித்தார். எதிரிலே ஒருவர் இளநீர் கொண்டு வந்தார். அதனை வாங்கிக் கத்தியால் வெட்டி இதனைக் குடிப்பீராக என்று வண்ணக்கரிடம் சுவாமிகள் கொடுத்தார்கள். வண்ணக்கர் பயபத்தியுடன் வாங்கிக் குடித்தார். குடித்து முடிந்ததும் சுவாமிகள், சிதம்பரம் தீர்த்தம் எப்படியிருக்கிறது? என்று கேட்டார். வண்ணக்கர் சிதம்பரத்தில் குடித்த தீர்த்தமே அந்த இளநீருள் இருந்ததை நினைத்து ஆச்சரியப்பட்டார். சிதம்பரத்தில் வண்ணக்கர் கண்ட காட்சிகளை எல்லாம் ஒன்று விடாமல் சுவாமிகள் விவரித்துரைத்தார்கள். வண்ணக்கர் ஆச்சரியத்துடன் கேட்டார்.

சுவாமிகளுடைய உண்மை நிலை உணர்ந்தவர் எவருமில்லை என்றே கூறலாம். அவர் தமது கோலங்களையும் செயல்களையும் அடிக்கடி மாற்றி உலாவுவார். சில சமயம் மௌனமாய் இருப்பார். யோக நித்திரையிலும் ஆழ்ந்திருப்பார். இருந்தாற் போல் சுடலையில் தனிமையில் உலாவுவார். யோகநித்திரையில் இருக்கும் காலங்களில் வேறோர் ஊரில் சுவாமிகள் உலாவியதாகச் செய்திகள் வரும். இதனைச் சாதாரண மக்களால் புரிந்துகொள்ள முடிவதில்லை. சுவாமிகள் முன்னிலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவரும் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசமுடியாது. அங்ஙனம் பொய் பேசுபவர்கள் எவராயினும் சரி பகிரங்கமாக உடனே தண்டனைக்குள்ளாவர்.

கோளாவிலைச் சேர்ந்த வெள்ளையன் வைத்தியர் 1944 ஆம் ஆண்டு ஆவணிமாதம் குயீன்ஸ்பரி நவநாதசித்த சுவாமிகளின் சமாதியைத் தரிசிக்கச் சென்றிருந்தார். சமாதியில் மூன்று நாட்கள் தங்கியிருந்தார். ஒரு விளக்கு வாங்கி வைப்பதாக நேர்த்திக்கடன் செய்தார். அர்ச்சனை செய்வித்து விபூதி சந்தனம் முதலிய பிரசாதங்களுடன் ஊர் திரும்பினார். கணவனும் மனைவியுமாகச் சுவாமிகளைத் தரிசிக்கக் காரைதீவு சென்றனர். செல்லும் போது நவநாதசித்தரின் பிரசாதங்களும் கொண்டு சென்றனர். இவர்கள் சென்ற சமயம் 42 பேர் சுவாமிகளின் சந்நிதியில் இருந்தனர். அவர்களும் சென்று சுவாமிகளுக்கு வணக்கம் செலுத்திவிட்டு ஓரிடத்தில் அமர்ந்தனர்.

சிறிது நேரம் கழிந்தது. "கொண்டு வந்த விபூதி சந்தனத்தைக் கொண்டுவாடா, கொண்டு வாடா" என்று சுவாமிகள் உரத்த குரலில் கூறினார்கள். எல்லோரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தனர். சுவாமிகள் எழுந்து சென்று வெள்ளையன் வைத்தியரின் மடியில் அருந்து விபூதி சந்தனத்தைத் தாமாகவே வலுவில் எடுத்து எல்லோருக்கும் பங்கிட்டார். வந்தவுடன் ஏன் கொடுக்கவில்லை என்று கடிந்து கொண்டார். "நான் படுத்த மாமரத்தில் ஒரு காணிக்கை கட்டியிருக்கிறாய். அது நல்ல காணிக்கை அங்கே எப்போதாவது ஒரு விளக்குக்கொண்டு சென்று வை" என்று சுவாமிகள் கூறினார்கள்.

1948 ஆம் ஆண்டில் சுவாமிகள் வெள்ளையன் வைத்தியர் வீட்டில் ஏழு நாட்கள் சவம்போலக் கிடந்தார்கள். ஆடவில்லை,அசையவில்லை. அவ்வேளையில் அப்புத்தளையைச் சேர்ந்த ரீமேக்கர் குழந்தை அப்பர் அவர்களும் வைத்தியர் வீட்டில் நின்றார். சுவாமிகள் இங்கு நிற்கிறார்கள் என்பதைக் கேள்வியுற்று ஐந்து சுவாமிகள் சுவாமியைப் பார்க்க வந்தார்கள். அப்பொழுது பனங்காடு, கோளாவில் ஆட்களும் சுவாமியைத் தரிசிக்க வந்தார்கள். கிராம மக்கள் சுவாமியைத் தரிசிக்க வரும் போது வெறுங்கையுடன் வருவதில்லை. கையுறை ஏதாவது கொண்டுவருவார்கள். மக்கள் சுவாமிக்கு 5 போத்தல் சாராயமும் 41 ரூபா பணமும் காணிக்கையாக வைத்தார்கள். ஐந்து சுவாமிகளுள் ஒருவர் சாராயத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறையக் குடித்ததோடு 41 ரூபாவையும் எடுத்துக் கொண்டு சென்று விட்டார். இதனைக் கண்ணுற்ற குழந்தை அப்பர் சுவாமிக்குக் கிடைக்கிற காணிக்கையைப் பாதுகாத்துக் கொடுக்க வேண்டிய பொறுப்பு உம்முடையதல்லவா என்று வைத்தியரைக் கண்டித்தார். அதற்கு வைத்தியர் "இது சுவாமிகளின் கட்டளை அல்ல" என்றார். எல்லாவற்றையும் சுவாமி அறிவார்தானே என்றார்.

காசை எடுத்துக்கொண்டு போன சாமியார் கஞ்சாவுடன் திரும்பினார். ஐந்து பேரும் சேர்ந்து கஞ்சா புகைத்துக்கொண்டிருந்தனர். ஆறாம் நாள் அனுமான் சுவாமி மாத்திரம் நிற்க மற்றவர்கள் எல்லாரும் போய் விட்டனர். ஏழாம் நாள் சாண்டோசங்கரதாஸ் வந்தார். சுவாமிகளும் எழுந்து உட்கார்ந்தார்கள். குழந்தை அப்பரைப் பார்த்து இருக்கிற சாராயம் எல்லாவற்றையும் எடு என்றார்.

3 போத்தல் சாராயத்தையும் ஒரே முறையில் குடித்தார். வந்தவர்கள் எல்லோரும் சுவாமிகளை வணங்கி விபூதி பெற்று இருக்கும் சமயத்தில் பணத்தை எடுத்துச் சென்ற சாமியார் வந்தார். அவரைக் கண்டதும் சுவாமிகள் வாருங்கள் வாருங்கள் என்று கூறி வரவேற்றுத் தமக்குப் பக்கத்தில் இருத்தினார்கள்.

சிறிது நேரம் மௌனமாயிருந்தார். திடீரெனச் சுவாமிகள் மௌனத்தைக் கலைத்தார். "இது உனக்குச் சௌக்கியமான வேலையா சுவாமி" என்று கேட்டார் சித்தானைக்குட்டி சுவாமிகள். "நீ சாராயம் குடிக்கிறது, கஞ்சாக் குடிக்கிறது, பெண்சாதி பிள்ளைகளுக்கு யார் சாப்பாடு கொடுக்கிறது?" அவர் கொண்டு வந்த பாத்திரத்தால் சித்தானைக்குட்டி சுவாமிகள் அவரது தலையில் அடித்தார். பொய்யாகக் கட்டியிருந்த சடாமுடி பிய்த்துக் கொண்டு விழுந்தது. தாடியில் பிடித்துக்கொண்டு சுவாமிகள் அவருடைய பிரம்பினாலேயே அடித்தார்கள். குட்டு வெளிப்பட்டதும் போலிச்சாமியார் பனங்காட்டுப் பக்கமாக ஓடிச்சென்று மறைந்து விட்டார்.

இத்தருணத்தில் ஆரப்பற்றையைச் சேர்ந்த காசுபதச் சுவாமிகள் வந்து சுவாமியைப் பணிந்து வணங்கி நின்றார். சுவாமிகள் எப்போ வந்தார்? என்று காசுபதிச் சுவாமி வைத்தியரைக் கேட்டார். சுவாமிகள் ஒருவாரகாலமாக இங்குதான் இருக்கிறார் என்று கூறினார். வைத்தியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசுபதிச்சுவாமியார், "நான் இப்போதுதான் கதிர்காமத்திலிருந்து நேராக வருகின்றேன். இருதினங்களுக்கு முன் கதிர்காமத்தில் சுவாமிகளைச் சந்தித்து விபூதியும் வாங்கிப்பூசி அடியும் வாங்கினேன்" என்றார். எல்லாரும் ஆச்சரியமிக்கவராயினர்.

சுவாமிகள் ஒருமுறை கோளாவிலில் தெரு ஓரமாகப் படுத்து விட்டார்கள். இவரைத் தூக்கிச் செல்வதற்காக 8 பேர் முயன்றார்கள். சுவாமிகளை அவர்களால் அசைக்கவே முடியவில்லை. சுவாமிகளிடம் உண்மையான பக்திகொண்ட குமரர் என்பவர்அவ்வழியே வந்தார். அவர் தனியாகவே சுவாமிகளைத் தூக்கிக் கொண்டு 1/4 மைல் தூரத்திலுள்ள கந்தன் பரிகாரியாரின் வீட்டில் கொண்டு சென்று சேர்த்தார். இதனைக் கண்ணுற்றவர்கள், எப்படியப்பா சுவாமியைத் தூக்கிச் சென்றீர்? என குமரரிடம் விசாரித்தனர். அதற்கு அவர், "ஒரு குழந்தையைத் தூக்குவது போன்ற பாரம்தானே சுவாமி இருந்தார்" என்று விடை அளித்தார்.

கந்தன் முருகப்பன் ஒரு கமக்கார் கோளாவில் வடபகுதியை இருப்பிடமாகக் கொண்டவர். சுவாமிகளுடைய அடியார்களுள் ஒருவர். முருகப்பனின் தோட்டத்திலுள்ள சோளப்பயிர்கள் மழையில்லாமல் வாடி வதங்கி நின்றன. தனது குறையை முறையிடக் காரைதீவுக்குச் சுவாமிகளிடம் சென்றிருந்தார். முறையீட்டைக் கேட்ட சுவாமிகள் "கீழேயுந் தண்ணீர்தான், மேலேயுந் தண்ணீர்தானே" ஏன் கவலைப்படுவான் என்றார். அன்றுமாலையே மழை சோனாவாரியாகப் பெய்து பயிர்கள் எல்லாம் வாட்டம் தெளிந்து நின்றன.

முருகப்பனின் பிள்ளைகளான சின்னப்பிள்ளை, திரையாள என்பவர்களுக்கு நீண்ட நாட்களாகக் காய்ச்சல், பல வைத்தியர்களிடம் மருந்து எடுத்தும் பலன் ஒன்றும் கிட்டவில்லை. கடைசியாகச் சுவாமிகளிடம் மனைவியும் பிள்ளைகளுமாகச் சென்றனர். அன்று மரவள்ளிக்கிழங்குக் கறியும் சோறும்தான் சுவாமிகளுடைய ஆச்சிரமத்தில் சாப்பாடு. வெகு நாட்களாக அன்ன ஆகாரமின்றி இருந்த குழந்தைகள் மிக விருப்பத்தோடும் மரவள்ளிக்கிழங்கும் சோறும் சாப்பிட்டனர். காய்ச்சல் இருந்த இடம் தெரியாமலே நீங்கிவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கன்னங்குடாவில் நடைபெற்ற பேரதிசயம்

கந்தப்போடியார் கன்னங்குடாவைச் சேர்ந்தவர். சுவாமிகளிடம் நீங்காத பக்தி உடையவர். தன்னையே முழுவதாகச் சுவாமிகளிடம் ஒப்புக்கொடுத்தார். "தந்தது உன்றன்னைக் கொண்டது என்றன்னை" என்ற திருவாசகத்திற்கு இலக்கிய புருஷனாக வாழ்ந்தவர். சித்தானைக்குட்டி சுவாமிகளைத் தவிர வாழ்க்கையில் வேறு எதனையும் உயர்வாக மதியாதவர்.சித்தானைக் கடவுள் தான் தனது கடவுள் என உறுதி பூண்டார்.

தம்மிடம் யார் அதிக பக்தி உடையவர்களாய் இருக்கிறார்களோ அவர்களைத்தான் சுவாமிகள் அதிக சோதனைக்குள்ளாக்குவார். அச் சோதனைகளில் தேறியவர்களுக்குத் தனது சக்தி முழுவதையுமே ஈந்துவிடுவார்.

கந்தப்போடியார் மனைவியாரிடம் மிகுந்த அன்புள்ளவர். மனைவியாருக்கு ஒரு சுகவீனம் ஏற்பட்டது. பல வைத்தியர்கள் மருந்து செய்து நீங்காத நோயாக இருந்தது. கந்தப்போடியார் சுவாமிகளிடம் முறையிட்டார். "அது ஒன்றும் செய்யாதடா, பயப்படாதே," என்று சுவாமிகள் கூறினார்கள். கந்தப்போடியார் சுவாமிகளைப் பூரணமாக நம்பியவர் ஆனபடியினால் மனைவியாரின் நோயைப்பற்றிக் கவலை ஒழித்து வாழ்ந்தார்.

அம்மையாரின் நோய் சிறிது தணிந்தது போலக் காணப்பட்டது. ஒரு நாள் திடீரென நோய் உச்சக் கட்டத்தை அடைந்தது. அம்மையார் பேச்சுமூச்சற்றுக் கிடந்தார். அன்று மாலை ஏழு மணிக்கு அம்மையாரின் உயிர் பிரிந்தது. எதுவரினும் சித்தானைதான் கதி என்று வாழ்ந்த கந்தப்போடியாரின் மனதில் ஒரு திடம் ஏற்பட்டது. தான் வரும் வரை எவரும் அழவேண்டாம். சடலத்தைத் தீண்டவும் வேண்டாம் என்று உறவினரிடம் கட்டளையிட்டு விட்டு உடனே தோணி ஏறி வாவியின் அக்கரை சேர்ந்து மோட்டார் ஒன்றை வாடகைக்கு அமர்த்தி 26 மைல் தூரமான காரைதீவை அடைந்தார். இவர் செல்லும் போது இரவு 10 மணிக்கு மேலாகிவிட்டது. சென்றதும் சித்தானைக்குட்டிகளின் காலைப்பிடித்து அழத்தொடங்கினார். முதலில் கந்தப்போடியாருக்கு அடியும் உதையும் தான் விழுந்தன. மிக முரட்டுத்தனமாகவும் கடுமையாகவும் நடந்துகொண்டார் சுவாமிகள். கந்தப்போடியார் சுவாமிகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலடியிலேயே தமது உயிரை மாய்த்துக் கொள்வதாகக் கங்கணம் கட்டிக்கொண்டார்.

பரீட்சையில் கந்தப்போடியார் வென்றுவிட்டார் என்றே சொல்லவேண்டும். சுவாமிகள் போவதற்குச் சம்மதித்துவிட்டார்கள். மோட்டாரில் ஏறிக்கொண்டார்கள். மோட்டார் வாவிக்கரையை அடைந்தது. கீழே இறங்க மறுத்துவிட்டார். கால் நிலத்தில் படலாகாது என்று சொல்லிவிட்டார். 4,5 பேராகச் சேர்ந்து தூக்கிச் சென்று வள்ளத்தில் வைத்தனர். வள்ளம் அக்கரையை அடைந்தது. அக்கரையிலிருந்து கந்தப்போடியார் வீடுவரை தூக்கிச்சென்றனர். இரண்டாவது பரீட்சையிலும் கந்தப்போடியார் சித்திபெற்றுவிட்டார்.

அந்தக் கிராமம் முழுவதுமே அங்கு திரண்டிருந்தது. அழுகை ஒலி ஒரே அல்லோலகல்லோலமாகக் காணப்பட்டது. கையோடு கொண்டு வந்த விபூதியை நெற்றியில் சுவாமிகள் வைத்து "என்ன அம்மா இன்னுந் தூக்கமா?" என்றார்கள். என்ன ஆச்சரியம்! துடிதுடித்து எழுந்தார்கள் சுற்றுமுற்றும் பார்த்தார்கள். ஊரே திரண்டிருந்தது. அதிர்ச்சியடைந்து பார்த்தார்கள். கூடியிருந்தவர்களுக்குமே பேராச்சரியம். மாண்டவர் மீண்டால் யார்தான் ஆச்சரியப்படமாட்டார்கள்? அங்கிருந்தவரில் ஒருவர் ஆவேசம் வந்தவராய் சித்தானைக்குட்டி சுவாமிகளுக்கு அரோகரா என்றார். அங்கு கூடியிருந்த அத்தனை பேருமே ஊர் அதிரும் படி அரோகரா ஒலியை எழுப்பினார்கள். அழுகை ஒலி மாறி 5,10 நிமிடங்களுக்கு ஒரே அரோகரா ஒலியாக இருந்தது

## ஒரு சதம் பணத்தைப் பெற்றுக் கொள்ள
## ஆறு மாத காலமா?

1932 ஆம் ஆண்டு மாசி மகம் அர்த்தோதய புண்ணிய காலமாகும். அன்றைய தினத்தில் கடலாடுதல் மிக விசேடமாகும். ஆசிரியர் பூபாலபிள்ளை அவர்கள் வீட்டில் கிடைத்த ஒரு சதத்துடன் கடலாடச் சென்றிருந்தார். கடலில் ஒரு சதத்தை எறிந்துவிட்டுத் தீர்த்தமாடச் சென்ற ஆசிரியர், தீர்த்தமாடிவிட்டு ஒரு சதத்தை எறிய மறந்து வேட்டியில் முடிந்தபடியே வீடு திரும்பினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் அவர்கள் பாடசாலைக்குச் செல்லும் வழியில் சுவாமிகள் நின்றார்கள். இவரைக் கண்டதும் இன்று நல்ல புண்ணிய காலம்; ஏதாவது தருமம் செய்யுங்கள் என்றார். அப்பொழுதுகூட ஆசிரியருக்குத் தமது முடிச்சில் இருக்கும் பணம் பற்றி நினைவு வரவில்லை. தெருவில் வருபவர்களிடம் கைநீட்டி வாங்கி வாங்கி ஆசிரியரிடமே கொடுத்தார்கள். கொடுக்கும் போது, அரிசிக்காறி பின்னேரம் வருவாள். 16 சதம் கொடுக்க வேண்டும் என்று கூறுவார். அப்போது கையில் 15 சதம் இருக்கும். வருகிறவர்கள் எல்லாரிடமும் பெற்றுப்பெற்று ஆசிரியரிடமே கொடுத்தார்கள். அரிசிக்காறி வருவாள்; அப்பக்காறி வருவாள். 23 சதம் கொடுக்க வேண்டும் என்று கூறுவார். அந்த நேரத்தில் கையில் 22 சதம் இருக்கும். சுவாமிகள் தானும் பாடசாலைக்கு வருவதாகக் கூறி ஆசிரியரையும் அழைத்துக் கொண்டு சென்றார். செல்லும்போது அகப்பட்டவர்களிடமெல்லாம் பணம் வாங்கினார். ஆசிரியர் கையில் 75 சதம் இருக்கும் போது 76 சதம் தேவை என்பார். கையில் 80 சதம் இருக்கும் போது 81 சதம் தேவை என்பார். இத்தனை திருவிளையாடலும் இத்தனை ஒரு சதக் கணக்கும் ஆசிரியர் முடிச்சிலிருக்கும். ஒரு சதத்திற்காக என்பதை ஆசிரியர் அறியார். பாடசாலைக்குக் கிட்டச் சென்றதும் ஆசிரியரிடமிருக்கும் பணம் முழுவதையும் கொடுக்குமாறு கட்டளை பிறந்தது. கையிலிருந்த பணம் முழுவதையும் ஆசிரியர் கொடுத்தார். சுவாமிகள் கையிலிருந்த பொல்லைத் தூக்கி, 'பணம் கொடுக்க மாட்டாயா?" என்று கேட்டபோது தான் ஆசிரியருக்குத் தான் முடிந்து வைத்திருந்த ஒரு சத நினைவு வந்தது. அப்போது ஆசிரியருக்கு வெட்கமுந் துக்கமும் உண்டானது. "சுவாமி பாடசாலைக்கு வாருங்கள் பணம் தருகிறேன்" என்று ஆசிரியர் அழைத்தார். சிறிது நேரம் கழித்து வருவதாகக் கூறிச் சுவாமிகள் வந்தவழியே திரும்பிவிட்டார்கள்.

ஆசிரியர் தேநீர்க் கடையொன்றில் ஒரு ரூபா கடனாகப் பெற்று சுவாமிகளுக்குக் கொடுக்க என்று ஒரு சதம் முடிந்து வைத்திருந்தார். அன்று முழுவதும் சுவாமிகள் வரவே இல்லை. இப்பணத்தை சுவாமி கேட்கும்போதுதான் கொடுப்பது என்று வைராக்கியத்துடன் அப்பணத்தை வேட்டியில் முடிந்துகொண்டே திரிந்தார். நாட்கள் கடந்து வாரங்களாகி வாரங்கள் கடந்து மாதங்களாகி மாதங்களும் 6 கடந்து விட்டன. அப்பணம் ஆசிரியருடைய வேட்டியின் முடிச்சிலேதான் இருந்தது. ஒருநாள் ஆசிரியர் தமது தாயாரைப் பார்க்கச் சென்று கொண்டிருந்தார். அப்போது தற்செயலாகச் சுவாமிகள் எதிர்ப்பட்டார்கள். சுவாமிகள் உடனே, "எனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணத்தை இவ்வளவு காலத்துக்கும் வைத்துக்கொண்டு தராதிருக்கிறாய். நான் எவ்வளவு கஷ்டப்படுகிறேன எடு" என்றார். ஆசிரியரும் முடிச்சை அவிழ்த்து ஒரு ரூபாய் ஒரு சதத்தைச் சுவாமிகளிடம் கொடுத்தார். சுவாமிகளும் புன்முறுவலோடு பெற்றுக் கொண்டார்.

சுவாமிகள் சித்தே உருவானவர்கள். சித்து என்பது அவரது இயல்பு. அவரது வாழ்க்கை முழுவதுமே சித்தாக நிறைந்திருந்தது. சித்துக்கள் நிறைந்த ஆனைதானே. அவற்றை எல்லாருக்கும் வெளிக்காட்டுவதில்லை தன்னை ஒரு தூர்த்தன் போலவும் மிக வறியவன் போலவும் கையாலாகாதவன் போலவும் காட்டுவதே ஒரு சித்துத்தான். சித்தே உருவான ஒரு பொருளைச் சித்தில்லாதது போல் காட்டுவதும் ஒரு சித்தேதான்.

ஆசிரியர் பூபாலபிள்ளை அவர்களுடன் பேசிக்கொண்டிருக்கும் போது ஒருநாள் சுவாமிகள், திடீரென "மகனே! நாளை இரவைக்கு உமது மகளுக்குத் திருமணம் முடியப் போகிறது" என்றார்கள். இது எப்படி என்று ஆசிரியர் பல விதமாக யோசித்தார். வழி ஒன்றும் தென்படவில்லை.

ஆசிரியர் குருநாதரிடமிருந்து வீடு திரும்பிப் கொண்டிருக்கும் போது பின்னால் ஒருவர் கைதட்டி அழைத்தார். உமது மூத்த மருமகன் என்னை அனுப்பினார். விவாகம் ஒன்று பொருந்தி இருப்பதாகவும் நாளை இரவைக்கே பதிவையும் சீதன எழுத்தையும் வைத்துக்கொள்ளலாம் என்றுங் கூறினார். நின்ற நிலையிலேயே சம்மதத்தைத் தெரிவித்து ஆளை அனுப்பிவிட்டு ஆசிரியர் வீடுசென்றார். வீடு சென்றவர் குருநாதருடைய சொற்களை வேத வாக்காகக் கொண்டு திருமணத்திற்கான ஆயத்தங்களைச் செய்யலானார். விவாகப்பதிவுக்கு என்று வந்தவர்கள் விவாகத்தையே செய்துவிட்டால் என்ன என்று அபிப்பிராயப்பட்டார்கள். எவ்வித தடையுமின்றி விவாகமும் நிறைவேறியது.

சித்தானையின் பக்தர்களுக்கு மலைபோல் வினை வந்தாலும் அவர்கள் சித்தானையை மனதில் தியானித்துக் கற்பூரம் கொழுத்தி வழிபாடு ஆற்றுவார்கள். ஆனால் அது அணுப்போல் கரைந்து விடுவதைச் சொந்த அனுபவங்களிலே உணர்ந்திருக்கிறார்கள் சித்தானையினிடத்து அவர்கள் நேராகச் செல்ல வேண்டும் என்பதில்லை. தாம் இருக்குமிடத்தில் இருந்தே மனத்தில் தியானிப்பார்களானால் அவரது திருவருள் கிட்டிவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீப்பிடித்த கதிர்காமத் திரையைக் கல்முனைச் சந்தியில் நின்று கசக்கி அணைத்த புதுமை

ஒருநாள் சித்தானைக்குட்டிச் சுவாமிகள் கல்முனைச் சந்தியில் தெரு ஓரத்தில் உட்கார்ந்து இருந்தார்கள். சில அடியார்கள் சுவாமியைச் சூழநின்றார்கள். சுவாமி முன்னிலையில் ஒரு அமைதிகாணப்பட்டது. திடீரென உடுத்திருந்த வேட்டியை உரிந்து கசக்கிக் கொண்டிருந்தார். கூட நின்றவர்கள் ஆச்சரியமாகப் பார்த்தார்கள். "என்னடா பார்த்துக் கொண்டு நிற்கிறீர்கள்! கதிர்காமத்திரை தீப்பிடித்து எரிகிறது. கசக்கி அணையுங்களடா!" என்றார். இதை அணைப்பது எவ்வளவு கஷ்டம் தெரியுமோ என்று கூறினார். கூட நின்றவர்களுக்கு இதன் அர்த்தம் புரியவே இல்லை. அடுத்தநாள் கதிர்காமக்கோயில் திருவிழாவில் பங்கு பற்றிய ஒரு அன்பர் வந்து நேற்றைக்கு இத்தனை மணிக்கு கதிர்காமத்திரையில் தீப்பிடித்து எரிந்தது, உள்ளே நின்றவர்கள் நிலைகுலைந்து அங்குமிங்கும் ஓடினார்கள். வந்து அதனைத் ஒருவராவது அணைக்க முன் வரவில்லை. எங்கிருந்தோ சித்தானைக்குட்டிச் சுவாமிகள் ஓடி வந்து அதனை கசக்கி அணைத்தார்கள். நெருப்போடு மிகப் போராடினார்கள். சுவாமிகள் தகுந்த சந்தர்ப்பத்தில் வந்திருக்கா விட்டால் என்ன நிகழ்ந்திருக்குமோ என்று கற்பனை பண்ணிக்கூடப் பார்க்க முடியவில்லை என்று அந்த அன்பர் கூறினார் முதல்நாள் கல்முனைச் சந்தியில் சுவாமியைச் சந்தித்தவர்கள் சுவாமியின் மகிமையை ஓரளவு உணர்த்தலைப்பட்டார்கள்.

## கதிர்காமக்காட்டில் வழிதப்பியவர்களுக்கு வழிகாட்டிய குருநாதர்

சுவாமிகள் தமது குத்தகைக்காரர் வைரமுத்து பக்தன் ஒருவனுடைய வீட்டிற்கு அடிக்கடி செல்வது வழக்கம். ஒருநாள் அப்பக்தனோடு உரையாடிக் கொண்டிருக்கும் போது திடீரென்று மூர்ச்சைபோட்டு விழுந்து விட்டாராம். பக்தன் பயந்தே போய்விட்டார். டாக்டர் அழைக்கப்பட்டார். அரைமணி நேரத்தில் சுவாமிகளுக்குச் சுய உணர்வு வந்தது. சுவாமிகள் படுக்கையில் இருந்து எழும்பும் போதே "இந்தக் கந்தன் வைத்தியன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகுட்டிகளுடன் கதிர்காமம் சென்றானே. வழிதப்பி யானைக் காட்டில் திரிகிறான். நான் போய் வழியில் திருப்பி விட்டு வந்தேன்" என்று கூறினார். அங்கிருந்தவர்கள் எவருக்காவது சுவாமி என்ன கூறினார் என்பது விளங்கவில்லை.

மூன்றாம் நாள் கந்தன் வைத்தியர் கதிர்காமத்தால் வந்து தமது அநுபவத்தைக் கூறினார். திசைமாறிக் காட்டில் அலைந்த போது தான் குருநாதனை நினைந்ததாகவும் அவர் உடனே தோன்றி வழிகாட்டி மறைந்து விட்டதாகவும் கூறினார். அப்போதுதான் அங்கிருந்தவர்களால் சுவாமியின் செயற்கரும் செயலை உணரமுடிந்தது

## அமிர்தகளியில் அமர்க்களம்

அமிர்தகளித் தலத்தில் ஆடி அமாவாசைக்கு விசேட தீர்த்தோற்சவம் நடைபெறுவதுண்டு. இத்தீர்த்த விழாவிற்குக் கிழக்குமாகாணத்து மக்கள் முழுப்பேருமே திரண்டு வருவர். ஒருமுறை சில அன்பர்கள் சுவாமிகளுடன் செல்வதற்குத் திட்டமிட்டனர். தொண்டர் கந்தப்பர், அவரது தந்தையார், செல்லத்துரைவண்ணக்கர், வேலுப்பிள்ளைச் சாமியார், மயிலன் பரிகாரியார் ஆகியோர் சுவாமிகளுடன் சேர்ந்து பி.ப 4 மணிக்குப் புறப்படுவதாகத் திட்டம் இட்டனர். குறிப்பிட்ட நேரத்திற்கு எல்லாரும் வந்து சேர்ந்துவிட்டனர். சுவாமிகளோ செல்லத்துரைவண்ணக்கருடைய துடையில் படுத்து குறட்டை விட்டுக்கொண்டே தூங்கி விட்டார்கள். பல மணிநேரம் கழிந்துவிட்டது. எல்லாரும் ஏமாந்தார்கள். ஒருவரும் செல்லவில்லை.

சுவாமிகளும் எழுந்து சென்று வீட்டுக்குள்ளே படுத்துக் கொண்டார்கள். அமிர்தகளியிலிருந்து அடுத்தநாள் வந்த காரைதீவு மக்கள் "இந்தக் கள்ளச் சாமி இந்த முறை அமிர்தகளியில் நல்ல பாடம் படித்தார். நேற்றைக்கு எத்தனை பெண்களுடைய சீலையைப் பிடித்து இழுத்து அடி வாங்கினார்கள் .இவர்களெல்லாம் சாமியா? இனிமேலாவது திருந்தி நடக்கட்டும்" என்று கூறினார்கள். நான் மாத்திரம் அந்த நேரத்தில் நில்லாது இருந்தால் சாமியை உடனே கொன்றிருப்பார்கள். நான் முன்நின்று ஒருமாதிரி விலக்கி விட்டேன்" என்றெல்லாம் கூறினார்கள். சுவாமிகளின் திருவிளையாடல்களைக் காணும் போதும் கேட்கும்போதும் நாம் கண்டதும் கேட்டதும் பொய் எனவே நினைக்கத் தோன்றுகிறது. கண்ணால் கண்டதும் பொய்; காதால் கேட்டதும் பொய்; தீர விசாரித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிந்ததே மெய் என்பதற்கு இலக்கியமாக விளங்கின சுவாமிகளின் திருவிளையாடல்கள்.

தொண்டர் கந்தப்பர் ஒருநாள் காலை 5.30 மணிக்கு சுவாமிகளுடன் உலாவச் சென்றார். உலாவிவிட்டுக் கடற்கரையில மலங்கழித்துவிட்டு கால் கழுவுவதற்காகக் கடலில் இறங்கினார். இரண்டு மைல் தூரம் வரை நடந்தும் கால் கழுவுவதற்குத் தண்ணீர் கிடைக்கவில்லை. கந்தப்பருக்குப் பயம் தொட்டு விட்டது. சுவாமிகள் திரும்பிப் போவோம் என்று கூறினார். இருவரும் கரை நோக்கித் திரும்பி வந்தனர். கரையேறியதும் கரையில் தண்ணீர் நிறைந்திருப்பதைக் கண்டனர். சுவாமிகள் அந்த நேரத்தில் ஏதோ தனக்கு விளங்காத பாஷையில் பேசினதாகக் கந்தப்பர் கூறினார்.

## மீன்கறி கத்தரிக்காய்க் கறியாக மாறியது

பரிகாரி குஞ்சன் கதிர்காம யாத்திரையை மேற்கொண்டார். வழியில் அக்கரைப்பற்றுக்கு அருகே சித்தானைக்குட்டி சுவாமிகளைத் தரிசித்தார். சுவாமிகளைக் கண்டதும் கதிர்காம முருகனைத் தரிசித்ததுபோன்று பரவசங்கொண்டார். நேரம் இரவு ஏழு மணி இருக்கும். சுவாமி ஒரு கடைக்குள் குஞ்சனைச் சாப்பிடுவதற்காக அழைத்துச் சென்றார். கடைக்காரர் மீன்கறி மாத்திரம் தான் இருக்கிறது. வேறு கறி இல்லை என்றார். இருவருக்கும் சோறு பரிமாறப்பட்டது. குஞ்சன் சுவாமியைப் பார்த்து இரகசியமாக 'நான் மீன் சாப்பிடுவதில்லை' என்றார். 'அது கத்தரிக்காய்க் கறி, நீ பயம் இல்லாமல் சாப்பிடு' என்றார் சுவாமிகள். ஒரு சட்டியிலிருந்து பரிமாறப்பட்ட கறி குஞ்சனுக்கு கத்தரிக்காயாகவும், சுவாமிகளுக்கு மீனாகவும் இருந்தது. சுவாமிகள் கள்ளுச் சாராயம் குடிக்கிறார் இறைச்சி மீன் சாப்பிடுகிறார், நாங்களும் அப்படிச் செய்தால் என்ன என்று சிலர் கேட்பதுண்டு.

சுவாமியால் மீனைக் கத்தரிக்காயாக்கவும், கத்தரிக்காயை இறைச்சியாக்கவும், சாராயத்தைச் சர்பத்தாக்கவும், இறந்தவர்களை எழுப்பவும் முடியும். எங்களால் இவற்றில் எதைத்தான் செய்யமுடியும்?. ஆகவே சுவாமிகள் செய்வதையெல்லாம் நாமும் செய்ய வேண்டுமென்று விரும்புவது பிழை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவரும் சாப்பிட்டுக்கொண்டிருக்கும் போது அங்கிருந்த குத்துவிளக்கு எண்ணெய் இல்லாது ஒளி மங்கியது. உடனே சுவாமிகள் தமக்குக் குடிக்க வைத்திருந்த தண்ணீரை எடுத்து குத்து விளக்கில் ஊற்றினார்கள். விளக்கு சுடர்விட்டு எரிந்தது. குஞ்சன் ஆச்சரியத்துடன் பார்த்தார். வள்ளலார் தண்ணீரில் விளக்கெரித்த கதையை நினைவுபடுத்தினார்கள்.

ஒருநாள் சுவாமிகள் சில பக்தர்களுடன் ஆச்சிரமத்தில் இருந்தார்கள். அந்த நேரத்தில் ஒரு அன்பர் ஒரு போத்தல் சாராயம் கொண்டு வந்தார். சிலருடைய உள்ளத்திலே ஒருவித அசுசி ஏற்பட்டது. சுவாமிகள் ஒரு திருவிளையாடலை நடத்த எண்ணினார். ஒரு சிரட்டை எடுத்து அதிலே ஊற்றி ஒருவருக்குக் கொடுத்தார். அவர் ஒன்றும் பேசாது வாங்கிக் குடித்துவிட்டார். மற்றவருக்குக் கொடுக்க அவர் தாம் சாராயம் குடிப்பதில்லை என்று வாங்க மறுத்துவிட்டார். முதலில் குடித்தவர் அது சாராயம் இல்லை என்றும் அது சர்பத் என்றும் கூறினார். குடிக்க மறுத்தவர் இப்போது குடிக்க விருப்பம் காட்டினார். தனக்குத் தந்தது போதாது என்றும் சிரட்டை நிறைய ஊற்றித்தருமாறும் கேட்டார். இவ்வளவுதான் தரமுடியும் என்று சுவாமிகள் கூற அவர் அதனை வாங்கிக் குடித்தார். குடித்த உடனேயே வெறிகொண்டு ஆடத்தொடங்கிவிட்டார். மீதியைத் தொண்டர் கந்தப்பனுக்குக் கொடுத்தார். அவர் எதுவுமே குடிப்பதில்லை என்று சொல்லி மறுத்துவிட்டார். சுவாமிகள் அந்தப் பங்கை தமது கையிலிலெடுத்து "நவநாதர் சாட்சியாகத் தொண்டர் கந்தப்பனே இதைக் குடிக்கிறான்" என்று சுவாமிகள் குடித்தார்கள். சுவாமிகள் குடித்த உடனேயே தொண்டர் வெறியாட்டம் ஆடினார்.

## பெண்பிடிக்கும்சாமி பிள்ளைப்பேறு கொடுத்தார்

காளி என்பவர் காரைதீவு 3-ம் குறிச்சிவாசி. இவருக்கு நீண்ட காலமாகக் குழந்தைகுட்டிகள் ஒருவரும் இல்லை. சித்தானைக்குட்டிச் சுவாமிகளிடம் சென்று அவருடைய ஆசீர்வாதத்தால் குழந்தை குட்டிகள் கிடைக்கப்பெற்றவர்கள் பலர் என்பதைக் கேள்விப்பட்டிருந்தார். ஒருநாள் மனைவியிடம், "நாமும் சுவாமிகளிடம் சென்று எமது குறையை முறையிடுவோமா" என்று கேட்டார் காளி. அதற்கு மனைவியார், "அவர்தான் பெண்பிடிக்கிற சாமி ஆச்சே தான் வரமுடியாது" என்று மறுத்து விட்டார். காலஞ்செல்லச் செல்ல அவாவினுடைய மனத்திலும் மாற்றம் ஏற்படலாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காளியும் மனைவியும் சுவாமியை நாடிச் சென்றனர். மனைவியை வெளியில் விட்டுவிட்டு சுவாமிகளைப் பார்க்க காளி உள்ளே சென்றார். கிணற்றடியில் சட்டி பானை கழுவிக்கொண்டு நின்ற 14 வயதுப் பையன் ஒருவன் காளியின் மனைவியின் சீலையைப் பிடித்து இழுத்தான். அந்த அம்மை குய்யோ முறையோ என்று அழுதார். எல்லோரும் ஓடி வந்தனர். பையன் ஓடி மறைந்து விட்டான். அந்தப் பையன் யார் என்பதை யாரும் அறியார்.

காளியின் மனைவி சுவாமியைப் பணித்து விபூதி பெற்றுச் சென்றார். காலகதியில் அவருக்குப் பெண் குழந்தை ஒன்று கிடைத்துச் சுகமாக வாழ்ந்தனர்.

## மரவள்ளிக் கிழங்குக்கறி ஒருவார காலத்திற்குச் சூடு ஆறாமல் இருந்த அதிசயம்

கோளாவில் பூபாலபிள்ளை என்பவர் கல்முனையை வசிப்பிடமாகக் கொண்டவர். சுவாமிகளிடம் அடிக்கடி சென்று வருவார். என்ன பயிர் செய்தாலும் அதில் முதல் பங்கு சுவாமிக்குக் கொடுத்தே மற்றதைத் தான் பயன்படுத்தும் வழக்கம் அவரிடம் உண்டு. தனது வளவில் மரவள்ளிக்கிழங்கு வைத்திருந்தார். சுவாமி கல்முனையில் நிற்பதாகக் கேள்விப்பட்டு முதன் முதல் மரவள்ளி பிடுங்கிக் கிழங்கு அவித்து வைத்து விட்டுச் சுவாமியைத் தேடலானார். சுவாமி யாழ்ப்பாணம் சென்று விட்டதாகத் தகவல் கிடைத்தது. சுவாமிக்குரிய பொருள் சுவாமிக்குரியது என்று வைராக்கியம் பூண்டார். பரணில் உறி ஒன்றைக் கட்டினார். அவித்த கிழங்கை அப்படியே மூடி உறியில் வைத்தார். சிவநேசச் செட்டியர் தனது மகள் பூம்பாவை இறந்தபோது அவளது எலும்பை, திருஞானசம்பந்தருக்கென்று உரியவள் எப்போதும் அவருக்கே உரியவள் ஆவாள் என்ற நம்பிக்கையில், ஒரு பானையில் இட்டு ஞானசம்பந்தர் வரும்வரை பத்திரப்படுத்தி வைத்தார்.

இது போன்றதே பூபாலபிள்ளையினது செயலுமாகும். ஒரு வாரத்தின் பின்பு சுவாமிகள் கல்முனைக்கு வந்தார்கள். நேராகப் பூபாலபிள்ளையின் வீடு சென்றார்கள். போகும்போதே "கிழங்கை எடு அப்பா பசிக்கிறதே" என்றாராம். கிழங்கை உறியிலிருந்து எடுத்துக்கொண்டு வந்து சட்டியைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறந்தார்கள். ஆவி போய்க்கொண்டிருந்தது. 'இப்போதுதான் அடுப்பிலிருந்து இறக்கிக் கொண்டு வருகிறாயோ' என்று சுவாமிகள் கேலி செய்தார்கள்.

## ஒரு பெண் ஒரே நேரத்தில் இரு இடங்களில் சின்னமேளம் ஆடிய அதிசயம்

கந்தப்பன் வைத்தியருக்குச் சின்னமேளம் பார்க்க வேண்டுமென்று ஒரே ஆசை. அந்த அவருடைய ஆசையை நிறைவேற்றச் சுவாமிகள் அவரை யாழ்ப்பாணத்திற்கு அழைத்துச் சென்றார்கள். நேராகச் சின்னமேளம் தங்கம்மாவின் வீட்டுக்கே சென்றார்கள் இருவரும். வீடு சென்றதும் சுவாமிகள் தங்கம்மாவிடம் நீங்கள் இன்று வீட்டில் ஆடிக்காட்ட வேண்டும். நாங்கள் இருவரும் பார்க்க வேண்டும். உரியபணத்தை நாங்கள் தருவோம் என்றார்கள்.

அன்றிரவு கோயில் ஒன்றில் ஆடுவதாக திருவிழாக்காரரிடம் அச்சவாரம் பெற்றிருந்தார் தங்கம்மா. வீட்டில் ஆடிக்காட்டி ஆட்டத்தை முடித்துக் கொண்டு கோயிலுக்குச் சென்று விடலாம் என்ற எண்ணத்தில் வீட்டிலே ஆட்டம் ஆரம்பிக்கப்பட்டது. வைத்தியர் பார்த்து நன்கு ரசித்துக் கொண்டிருந்தார். ஆட்டம் முடியும் போது விடிந்து விட்டது.

கோயில் திருவிழாவைப் பார்த்துவிட்டு வந்தவர்கள் இன்றைக்கல்லவோ சின்னமேள ஆட்டம் என்று கூறிக்கொண்டவர்கள். சபையின் பாராட்டும் கிடைத்தது. தங்கம்மாவின் வீட்டைத் தேடிக் கொண்டு வந்து மீதிப்பணத்தையும் விசேடப் பரிசுப்பொருளையும் கொடுத்துச் சென்றார்கள் திருவிழாக்காரர்கள்.

## கள் இல்லையென்று சொன்னவருக்கு குடத்தில் கள் இல்லாமல் போனது

ஒருவர் கள் இறக்கிக்கொண்டு தவறணைக்குக் கொடுப்பதற்காக வேகமாக நடந்து சென்றார். வழியில் நின்ற சுவாமிகள் ஒரு சிரட்டை கள்ளுத் தந்துவிட்டுப்போ அப்பா என்றார்கள். அவர்போகிற அவசரத்தில் இன்றைக்குக் கள்ளு இல்லை என்று கூறிவிட்டுச் சென்றார். தவறணைக்குச் சென்று குடத்தை இறக்கினார். இருகுடங்களிலும் கள்ளைக் காணவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சொட்டுக்கூட இல்லை. சுவாமிகளை நோக்கி ஓடோடியும் வந்தார். சுவாமிகளுடைய காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டுக்கொண்டார்.

## மாண்ட சுவாமிகள் மீண்ட அதிசயம்

சுவாமிகளுடைய திருவிளையாடல்களைப் புரிந்து கொள்ள முடியாதவர்களுக்குச் சுவாமிமேல் ஒரு வெறுப்பு உண்டாகியது. அதனால் சுவாமிகளைக் கொன்று ஒழித்துவிட வேண்டும் என்று கூடச் சிலர் கங்கணம்கட்டிக் கொண்டார்கள். அத்தகையவர்களில் ஒருவர்தான் நந்தவனம் பிள்ளையார் கோயில் வண்ணக்கர் சிற்றம்பலம் அவர்கள். இவர் சுவாமிகளை நஞ்சு கொடுத்துக் கொல்வதென்றே தீர்மானித்துவிட்டார். தீர்மானத்தைச் செயலிலும் காட்டி விட்டார். சாராயத்தில் நஞ்சு கலந்து கொடுக்கப்பட்டது. சுவாமிகளும் இறந்ததுபோல் மயங்கி விழுந்தார். வயலுக்கு தூக்கிச் செல்லப்பட்டார். வைக்கோலால் மூடப்பட்டார். நெருப்புக் கொளுத்தப்பட்டது. சித்தானைக்குட்டிச் சுவாமி தொலைந்தது என்ற மனத்திருப்தியுடன் வண்ணக்கர் வீடு சென்றார்.

சுவாமிகள் சிறிது நேரத்தில் எழுந்து சென்று பக்கத்திலுள்ள வண்ணானுடைய மடுவில் விழுந்து கிடந்தார். யாரோ இனந்தெரியாத ஒரு அன்பர் சுவாமிகளை அழைத்துச் சென்று சுவாமிகள் இருக்கும் இடத்தில் விட்டார்.

குறிப்பிட்ட சிற்றம்பலத்தாருக்கு ஒரே ஒரு மகன். பெரிய ஐசுவரியம் படைத்தவர். கடைசிக்காலத்தில் மனைவியை இழந்து, பொருள் எல்லாம் இழந்து ஐயம் ஏற்கும் நிலை அடைந்து துன்பத்தில் அழுந்தி இறந்தார். மகனும் பிற்காலத்தில் இரு கண்ணும் இழந்து இறந்தார். வைக்கோல் சாம்பலானது போலக் குடும்பமே நாசமாய்ப்போனது. மகான்களுக்கு மனதால் தீமை நினைத்தாலும் அவர்கள் வாழமாட்டார்கள் என்பதற்குச் சிற்றம்பலத்தாருடைய சரித்திரமே ஒரு சான்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்நோய் தீர்த்த கருணையாளன்

பூபாலபிள்ளை ஆசிரியருக்கு ஒருமுறை கண்நோய் வந்து மிகக் கொடுமைப்படுத்தியது. வீட்டு வைத்தியம், நாட்டு வைத்தியம் ஆங்கில வைத்தியம் எல்லாம் செய்து பார்த்துவிட்டார். நோய் தீரவில்லை. மாதக்கணக்கில் நாட்கள் ஓடி விட்டன. ஆசிரியர் கொழும்புமார்க்கமாகத் தனது நண்பர்களுடன் கதிர்காமம் செல்லத் திட்டமிட்டார். கொழும்பில் படுத்திருக்கும் போது ஆசிரியர் கனவொன்று கண்டார். "கதிர்காமம் சென்றாலும் கண்நோய் தீராது. சித்தானைக்குட்டியிடம் போனால் தீரும்" என்று ஒருவர் சொல்வது போல் கனவு கண்டார்.

கதிர்காமம் சென்றாலும் சித்தானையைச் சென்றடையும் வரை யாரையும் வணங்குவதில்லை என்றொரு பிரதிக்கினை எடுத்துக் கொண்டார் ஆசிரியர். கதிர்காமம் சென்றும் உள்ளத்தில் சித்தானையே தோன்றிக்கொண்டிருந்தார். சனக்கூட்டம் அதிகம். அதனால் கதிர்காமத்தைவிட்டு அன்றே திரும்பி விட்டனர்.

ஆசிரியர் கதிர்காமத்திலிருந்து நேராகச் சித்தானைக்குட்டிச் சுவாமிகளிடம் சென்றார. ஆசிரியர் நடந்து செல்லும் சத்தம் கேட்டதும், "கண்ணாடி போடாது கண் வருத்தம் சுகப்படுமா? கதிர்காமம் போனாலும் தீராது" கலிங்கமிட்டாலும் தீராது" என்று கூறினார் சுவாமிகள். சுவாமிகளுடைய பாதங்களில் கண்ணீர் பெருக விழுந்து வணங்கினார் ஆசிரியர். "எல்லாம் நான் வாங்கிக் கொண்டேன். நீ சுகம் அடைவாய்" என்றார் சுவாமிகள். அடுத்தநாள் ஆசிரியர் வந்தார். ஆசிரியருடைய கண்ணில் நோய் இருந்த இடமே தெரியவில்லை. சுவாமிகளுடைய கண்ணில் நோய் கண்டிருந்தது. சுவாமிகளே அவருடைய நோயை வாங்கித் தாம் அனுபவித்தார்

பெரிய மகான்கள் எவரையும் சீடராக ஏற்றுக்கொள்ளாத இரகசியம் இதுவேயாகும். குரு ஒருவர் ஒருவரைச் சீடராக ஏற்றுக் கொள்ளும் போது அச்சீடனது வினையையும். ஏற்று அனுபவிக்க வேண்டியவராகிறார். பகவான் ரமணரிஷிகள் தமது சீடராக யாரையும் ஏற்றுக் கொண்டதில்லை. ஒருசிலர் தாமாகவே தம்மை அவரது சீடர் என்று சொல்லிக்கொண்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகவான்ரமணமகரிஷிகளும், ஸ்ரீ பரமஹம்சதேவரும் கடைசிக் காலத்திலே கான்சர் நோயினால் வருந்த நேரிட்டது. காரணம் அவர்களது சீடர்களின் வினைகளை அவர்களே வாங்கி அனுபவிக்க நேரிட்டது. அன்னை சாரதாதேவியாரிடம் தினமும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வந்து காலில் விழுந்து வணங்கி ஆசிபெற்றுச் சென்றனர். அன்னையின் தூய பாதங்களில் தொட்டு வணங்குவதால் இளகிய மனமுடைய அன்னையார் அவர்களுடைய வினைகளில் ஒரு பகுதியை வாங்கி அனுபவிக்கும்படி நேரிட்டது. பக்தர்கள் எல்லாரும் கலைந்தபின் அன்னையார் இரவில் கங்கைக் கரைக்குச் சென்று கால்கள் இரண்டையும் கங்கையினுள்ளே நனைத்த வண்ணம் படித்துறையிலே மணித்தியாலக்கணக்காக அமர்ந்திருப்பார்கள். அன்றாடம் சேர்த்துக்கொண்ட வினைகளை அன்றாடே கங்காதேவியிடம் ஒப்புக்கொடுத்து நிவாரண மார்க்கம் தேடிக்கொள்வார்கள். இதே போன்று நல்ல சீடனால் நன்மை அடைந்த குருமாருமுண்டு. நல்ல சீடனுக்கு உதாரண புருஷராகவும் நல்ல குருவுக்கு உதாரண புருஷராகவும் விளங்கியவர் நமது சித்தானைக்குட்டிச்சுவாமிகளாவர்.

## சுவாமியே மந்திர சொரூபர்

இந்தியத் தமிழ்க் குடும்பம் ஒன்று புளியந்தீவில் வசித்து வந்தது. அந்த வீட்டு அம்மையார் பிரசவ வேதனையால் துன்பப்பட்டார். டாக்டர் அழைக்கப்பட்டும் குழந்தை பிறக்கவில்லை. மந்திரவாதிகள் மந்திர ஜெபம் செய்தனர். அம்மையின் வேதனை குறையவில்லை. மேலேறிச் சென்றது. கோழியும் நேர்ந்து விட்டனர். ஒன்றுக்கும் குறையவில்லை.

அத்தருணத்தில் அங்கு காசுபதிச் சுவாமிகள் நின்றார்கள். அக்குடும்பம் சித்தானைக்குட்டிச் சுவாமிகளை கடவுளாக மதித்துக் கொண்டாடுபவர்கள். பிரசவப் பெண்ணின் சிறிய தாயார் ஒரு கோப்பையில் ஆமனக்கெண்ணெய் கொண்டு வந்து காசுபதிச் சுவாமிகளிடம் கொடுத்து அதை ஓதித்தருமாறு வேண்டினார். காசுபதிச் சாமிக்கோ மந்திரமும் தெரியாது. தந்திரமும் தெரியாது. இக்கட்டான நிலை. எண்ணெயை வாங்கி சித்தானைக்குட்டி சுவாமிகளை மனதில் நினைந்து அவரது பெயரையே 108 முறை உச்சரித்த பின் எண்ணெயைக் கொடுத்தார். இனி இங்கு நின்றால் தனக்கு ஜோலி உண்டாகும் என்ற எண்ணத்தில் எண்ணெயைக் கொடுத்த உடனேயே அவ்விடத்தைவிட்டு அகன்றார். நான்கு வீடுகள் தாண்டியிருப்பார். பின்னால் அந்த வீட்டுக்காரர் ஓடி வந்தார். "சுவாமி! குழந்தை சுகமாகப் பிறந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டது. வீட்டுக்கு வாருங்கள்" என்று அழைத்தார்கள். காசுபதிச் சுவாமிகள் வந்தவருக்குச் சமாதானம் சொல்லிவிட்டு உடனடியாகக் காரைதீவுக்குச் சுவாமிகளிடம் சென்றார். நடந்த விஷயங்களைச் சுவாமியிடம் கூறினார். சுவாமி புன்முறுவல் பூத்தவராய்த் தான் யாழ்ப்பாணத்தில் சித்தாடித் திரிந்த காலத்தில் அங்கு நடைபெற்ற செய்தி ஒன்றை நினைவுபடுத்தினார்.

ஒருவன் சுவாமியினுடைய கையினால் தன் நெற்றியில் பொட்டு ஒன்று இட வேண்டும் என விரும்பினான். பலமுறை சுவாமிகளைச் சந்தித்து வேண்டிக் கொண்டான். சுவாமிகளோ நாளைக்குச் செய்கிறேன்; நாளைக்குச் செய்கிறேன் என்று நாளைப் பின்போட்டுக்கொண்டு வந்தார். ஒருநாள் சுவாமிகளுடைய காலைப் பிடித்துக்கொண்டு பழிக்கிடையாகக் கிடந்தானாம். சுவாமிகள் பக்கத்தில் வந்த வண்டி ஒன்றின் மசையை (கொழுப்பை) எடுத்து அவனின் நெற்றியில் பொட்டு ஒன்று வைத்து விட்டாராம். அவன் மகிழ்வுடன் சென்று பின் திரும்பி வந்து தனது காரியம் வெற்றி என்று கூறினானாம்.

அவன் நினைத்த காரியம் தான் நினைத்த பெண் தனக்குப் பின்னால் வரவேண்டும் என்பதாகும். நன்மைக்கும் சரி, தீமைக்கும் சரி, மக்கள் சுவாமிகளுடைய நாமத்தைப் பயன்படுத்தி பலன் பெற்ற சம்பவங்கள் ஆயிரக்கணக்கில் உள்ளன. சுவாமிகளுடைய ஒருநாள் திருவிளையாடலே ஒரு பெரும் புத்தகமாக அமையும். நாம் பாக்கியசாலிகளாக இல்லாத படியினால் அவருடைய அன்றாட நிகழ்ச்சிகளைக் குறித்துவைக்க யாருக்குந் தோன்றவில்லை. சுவாமிகள் அமெரிக்காவிலே தமது திருவிளையாடலை நடத்தியிருந்தால் அமெரிக்கர்கள் சுவாமிகளைப்பற்றி தனியாக ஒரு 'என்சைக்கிளோபீடியே'வே வெளியிட்டிருப்பார்கள்.

## தீவுமுனை வெளியில் மழை பெய்வித்த அதிசயம்

1935 ஆம் ஆண்டில் மழைக் குறைவினால் தீவுமுனை வெளியில் உள்ள கமக்காரருக்குக் குளப்பாய்ச்சல் தண்ணீர் கிடைக்கவில்லை. வேளாண்மை கரிந்து சாம்பலாகுந் தறுவாயில் இருந்தது. சுவாமிகளுடைய பக்தர்களில் சிலர் சுவாமிகளுடைய வரவை எதிர்நோக்கியிருந்தார்கள். சுவாமிகள் வந்ததும் கண்ணீர் விட்டு அழுதார்கள். சுவாமிகள் வயலைப் பார்வையிட வயலுக்குள்ளே இறங்கிச் சென்றார்கள். அந்த நேரத்தில் சுவாமிகளைப் பார்த்த ஊரவர்கள் மழைப்பெட்டி கொண்டு போகிறார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கேலி செய்தனர். சுவாமிகள் வயலைச் சுற்றிப் பார்வையிட்டு வெளியேறினதும் எங்கிருந்தோ முகில்கள் ஒன்றுகூடி மழை சோனாவாரியாகப் பொழிந்தது. சுவாமியைக் கேலிசெய்தவரும் சுவாமிகளின் மகிமையை உணர முடிந்தது.

## சுவாமிகளின் உபதேசம்

சுவாமிகள் தன்னைப் பூரணமாகச் சரணாகதி அடைந்தவர்களது துன்பங்களையெல்லாம் தாமே ஏற்று அனுபவித்து வந்தார். எப்பொழுதும் பக்தர்களுடைய ஆன்ம வளர்ச்சியிலேயே கண்ணுங் கருத்துமாக இருந்தார். பூரண நம்பிக்கை உள்ளவர்களுடைய தவறுகள் எல்லாவற்றையும் பொறுத்துக் கொள்ளுவார். காதலில் இருவகை உண்டு. ஒன்று அருட்காதல்; மற்றது மருட்காதல். கண்ணன் கோபிகளிடத்திலும் கோபிகள் கண்ணனிடத்திலும் கொண்ட காதல் அருட்காதலாகும். சுவாமிகள் தமது பக்தர்களிடத்துக் கொண்டதும் அருட்காதலைச் சேர்ந்ததாகும்.

அரட் காதலாகிய தெய்வீகக் காதலுக்கும், மருட் காதலுக்கும் உள்ள வித்தியாசத்தைப் புரிந்து கொள்ளாதவர்கள் மருட்காதலை மனதிற்கொண்டே சுவாமிகளை அளவு போடுவார்கள். அவர்கள் உள்ளத்தில் உள்ள எண்ணமே பார்க்கும் காட்சிகளிலெல்லாம் பிரதிபலிக்கிறது. சிவப்பு நிறக் கண்ணாடி போட்டுக்கொண்டு பார்ப்பவனுக்குப் பார்ப்பதெல்லாம் சிவப்பாகவே தோன்றுகிறது. பார்ப்பவனுடைய பிழையே தவிரப் பொருளினுடைய பிழை அன்று. மஞ்சள் காய்ச்சலால் பீடிக்கப் பட்டிருப்பவனுக்குத் தேன் கசக்கிறது. கசப்புக்குக் காரணம் அவனது நோயே தவிர தேன் அல்ல.

மகான்களிடம் காணப்படும் தெய்வீகக்காதலை உள்ளபடி உணராமல் அன்னாரைத் தூஷிப்பது மகாதவறு. தூஷித்தவனுக்குத் துன்பமும் பூஜித்தவனுக்குப் புண்ணியமும் எப்பொழுதும் உண்டு. ஆனால் உலகில் பொய்யரும் உலாவத்தான் செய்கிறார்கள். கள்ளனையும் வெள்ளனையும் வித்தியாசம் கண்டறிவது எப்படி? எனப் பலரும் வினாவுவர். வினோபாஜி சொல்லுகிற; வீட்டிற்கு வருபவன் ஆண்டவனுடைய பிரதிநிதி என்று நீ கருது. அவன் பிழை அவனோடு போகட்டும். நீ உயர்ந்த நோக்கோடு உபசரி. அப்படி வருகிற ஆயிரவரில் ஒரு உண்மையான ஆத்மாவாவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரக்கூடும். அந்த ஒரு உண்மையான ஆத்மாவே அந்த ஆயிரவரின் பலனையும் கொடுத்து விடும். சிலவேளைகளில் இறைவனே ஒரு அடியானாக வரக்கூடும். நல்ல அடியானாக மாத்திரம் வருவானா? கொடூரமான அடியானாகவும் வரக்கூடும் அல்லவா?

சிறுத்தொண்டர் வீட்டிற்குப் பிள்ளைக்கறி தின்பவராகவும், இயற்பகையாரிடம் அவருடைய மனைவியையே பெற்றுக் கொள்ளுபவராக வும் வரவில்லையா? இவற்றைக் குறித்தே சித்தானைக்குட்டிச் சுவாமிகள் பின்வருமாறு உபதேசம் செய்கின்றார்.

"சாதுக்கள், சந்நியாசிகள், ஏன் இறைவனே வீட்டிற்கு வந்தால், அவர்களை உபசரித்து ஒருநேர உணவு அளி. அன்று தங்கி நிற்க உத்தேசித்தால் சந்தோஷமாகத் தங்கி நிற்க அனுமதி. அடுத்தநாட் காலை நோக்கத்தைப் பார்த்து வழி அனுப்பு. உண்மையான சாதுக்கள் சந்நியாசிகள் ஒரு இடத்தில் மூன்று நேரச் சாப்பிடிற்கு மேல் தங்கக்கூடாது என்ற விதியைக் கடைப்பிடிப்பார்கள். அதாவது அவர்கள் ஒரு நாளைக்கு ஒரு முறையே உண்பவர்கள். அதுவும் மத்தியானத்திற்கு முன் பிச்சை எடுத்து உண்டு விடுவார்கள்.

மத்தியானம் கடந்துவிட்டால், அன்று பட்டினிகிடப்பார்கள். வேண்டிய உணவு ஒரு வீட்டிலேயே கிடைத்து விட்டால் வேறு வீடுகளுக்குப் பிச்சைக்காகச் செல்லமாட்டார்கள். ஒருநேர உணவுக்கு ஏழு வீடுகளில் மாத்திரம்தான் பிச்சை எடுக்கலாம் என்ற நியதி உண்டு. ஏழு வீடுகளிலும் பிச்சை மறுக்கப்பட்டால் அன்று முழுநாளும் பட்டினியே கிடக்க வேண்டும். பிச்சைக்குப் போகும்போது பிட்சா பாத்திரத்தை முன் ஏந்தியராய் பத்துமாதக் கர்ப்பிணி எண்ணெய்க் குடத்தைத் தாங்கி நடப்பதுபோல நடந்து சென்று வீட்டின் முன்னால் தலை நிலத்தையோ பெருவிரலையோ பார்த்த வண்ணம் இறைவன் புகழைப் பாடிய வண்ணம் நிற்க வேண்டும். ஒரு பாக்குக் கடித்து உமிழக்கூடிய நேரம் தாமதித்து நிற்க வேண்டும். அதற்கு மேல் தாமதிக்கக்கூடாது. திரும்பிவிட வேண்டும். பிட்சா பாத்திரத்தில் என்ன போடுகிறார்கள் என்று பார்க்கக்கூடாது. பிச்சை போட்டதும் ஏதாவது ஒரு தரும உபதேசம் செய்து திரும்ப வேண்டும். இக்கட்டுப்பாடு சாதக சந்நியாசிகளுக்கு மிகமிக அவசியமானது. ஒருவன் சந்நியாசியாவதற்கு முன் பரிவிராஜக யாத்திரையை மேற்கொள்ள வேண்டும். அதாவது கையில் பணம் இன்றி, எங்கு செல்லுகிறேன் என்ற எண்ணமின்றி, வாய்ப் பேச்சின்றி இறைவன் ஒருவனையே துணையாகக்கொண்டு முன் பின் அறியாத புதிய இடத்திற்குச் செல்ல வேண்டும். உணவு கிடைத்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்ண வேண்டும். எங்கு படுக்க நேருதோ அங்குப் படுக்க வேண்டும்.

வீட்டுக்கு வந்த சந்நியாசியின் வயது நிலையைக் கவனித்து பிரயாணத்திற்கு வேண்டிய பண உதவி புரி. உன்னோடுதான் சில நாட்கள் தங்கவேண்டுமென்று அவர் விரும்பினால் மண்வெட்டி ஒன்றைக் கொடுத்து நிலத்தைக் கொத்திப் பண்படுத்துமாறு கட்டளையிடு. அல்லது கோடரியைக் கொடுத்து விறகு வெட்டச் சொல். நேரத்திற்குச் சாப்பாடு வழங்கு.

சுவாமிகளின் இந்த உபதேசம் சாதுக்களும் சந்நியாசிகளும் இல்லறத்தார்களும் எவ்வாறு ஒருவரை ஒருவர் அனுசரித்து நடந்துகொள்ள வேண்டும் என்பதைக் காட்டுகின்றது.

**"நக்கிக் கண்ட நாயும் கொத்திக் கண்ட கோழியும் விட்டு நீங்கா"** என்பது சுவாமிகள் அடிக்கடி கூறும் பழமொழியாகும்.

**"உன்னையும் அறியாய் என்னையும் நம்பாய்"**
**"தூஷித்தவன் துன்பத்தைக் கொண்டுபோவான்"**
**"பூசித்தவன் புண்ணியத்தைக் கொண்டுபோவான்"**

இவை சுவாமிகளின் திருவாக்குகள்.

## உடைந்த சாராயப்பீப்பா அடைபட்டது

ஒருமுறை சுவாமிகள் ஏறாவூருக்குச் சென்றிருந்தார். சாராயத் தவறணை ஒன்றின் முன்னால் நின்றார். எனக்குச் சாராயம் தா என்றார். அவன் பணத்தைக் கொடுத்தால்தான் தருவேன் என்றான். சுவாமிகள் பணம் கிடையாது சாராயம் வேண்டும் என வற்புறுத்தினார். அவனும் கொடுக்க முடியாது என்று மறுத்துவிட்டான். சரி என்று சுவாமிகள் அந்த இடத்தைவிட்டு அகன்றார். உள்ளே இருந்த சாராயப்பீப்பா இரண்டாகப் பிளந்து சாராயம் முழுவதும் நிலத்தில் சிந்தியது. இதனைக் கேள்வியுற்ற தவறணை முதலாளி ஓடோடியும் வந்தார். சுவாமிகளை ஓடிச்சென்று கண்டார். காலில் வீழ்ந்து வணங்கினார். சின்னப்பயல்கள் அறியாது செய்ததைச் சுவாமிகள் மன்னிக்க வேண்டும். சுவாமிகள் வந்து சாராயம் அருந்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். சுவாமிகள் முதலில் மறுத்தார். முதலாளியின் விடாப்பிடியான வேண்டுகோளின்படி திரும்பி வந்தார். வெளியே நின்றார். பெரிய ஒரு பாத்திரத்தில் சாராயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தது. சாராயம் குடிக்க வேண்டுமா? என்று சுவாமிகள் கேட்டார். கட்டாயம் குடிக்க வேண்டும் என்று முதலாளியார் வேண்டிக் கொண்டார். சுவாமிகள் இரு கைகளையும் வாயில் வைத்தபடி ஊற்றுமாறு கேட்டுக் கொண்டார். பாத்திரத்தில் இருந்த சாராயத்தை முதலாளி ஊற்ற ஊற்றச் சுவாமிகள் குடித்தார். இடையில் தலை நிமிர்ந்து இன்னும் குடிக்கவேண்டுமா? என்று கேட்டார். முதலாளி ஒன்றும் பேசவே இல்லை. ஊற்றிக்கொண்டே இருந்தார். இன்னும் ஒருமுறை சுவாமிகள் போதுமா! என்றார். அதற்கும் பதில் இல்லை. ஊற்றிக்கொண்டே இருந்தார். பாத்திரம் முடிந்ததும் சுவாமிகள் சரி என்றார். சுவாமிகள் திரும்பினார். சுவாமிகள் மறைந்ததும் உடைந்த பீப்பா பழையபடியே ஆனது. வெளியே ஊற்றுண்ட சாராயம் முழுவதும் பீப்பாவில் நிறைந்திருந்தது.

## சமமாகப் பங்கீடு செய்த வாழைப்பழம்

ஒருமுறை சுற்றாடலில் உள்ள கிராமங்களில் இருந்து சுவாமிகளைத் தரிசிக்க நூற்றுக்கணக்கான பொற்கொல்லர்கள் வந்திருந்தனர். ஆச்சிரமத்திலும் ஐம்பதுக்கு அதிகமானவர்கள் இருந்தார்கள். வந்தவர்கள் மூன்றுசீப்பு வாழைப்பழம் கொண்டு வந்திருந்தார்கள். பூசை முடிந்தபின் பழங்களை ஒரு தட்டில் வைத்துச் சுவாமிகள் ஒரு கத்தியால் வெட்டிவிட்டு பங்கீடு செய்யுமாறு சொன்னார். எல்லாரும் ஒவ்வொரு பழம் பெற்றுக் கொண்டபின் தட்டில் சுவாமிகளுக்கும் ஒரு பழம் மீதியாக இருந்தது.

## பைத்தியத்தை மாற்றிய பக்குவம்

சுந்தரம் டாக்டர் கல்முனை ஆஸ்பத்திரியில் D.M.O.வாக இருந்தார்கள். அவரது மனைவியாரின் சகோதரியாருக்கு ஹிஸ்ரீறியா நோய். அது முற்றிப் பைத்தியமாகி விட்டது. எந்த வைத்தியத்திற்கும் கட்டுப் படவில்லை. டி.எம்.ஓ.வின் பங்களாவில் ஒரு அறையில் அந்த அம்மையாரைப் பூட்டிவைத்திருந்தார்கள். சாப்பாடு கொடுப்பதென்றால் டாக்டர் கையில் ஒரு பிரம்பு. மறு கையில் சாப்பாடு. 4,5 அடி கொடுத்தபின் சாப்பாட்டைக் கொடுத்தால்தான் சாப்பிடுவார். கையில் பிரம்பில்லாமல் சாப்பாட்டைக் கொண்டு சென்றால் சாப்பாட்டுப் பாத்திரம் டாக்டரின் முகத்தில்தான் விழும்.

அந்த ஆஸ்பத்திரியில் சீனித்தம்பி என்ற பெயருடைய காரைதீவு வாசி ஒருவர் வேலை செய்து வந்தார். அவர் சுவாமிகளைப்பற்றி டாக்டரிடம் கூறினார். சுவாமிகளிடம் போனால் இந்தப் பைத்தியம் மாறிவிடும் என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டாக்டரிடம் வேறும் சிலர் சுவாமிகளைப் பற்றிக் கூறியிருந்தார்கள். டாக்டரின் மனத்தில் சுவாமியைப் பற்றிய ஒரு எண்ணம் படிந்திருந்தது. சுவாமியிடம் போக வேண்டிய நாளை எதிர்பார்த்திருந்தார். போகவேண்டும் என்று மனத்தில் எண்ணினாலும் போகிறதற்குச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

திடீரெனச் சுவாமிகள் ஆஸ்பத்திரிக்கு ஒருநாள் வந்து சேர்ந்தார். கோவண உடையும் பச்சைப் போர்வையுமாக வந்து சேர்ந்தார். வந்ததும் டாக்டரிடம் அந்த விசரி எங்கே என்று கேட்டார். டாக்டருக்கோ சுவாமிகளை இதற்கு முன் தெரியாது. யாரோ பைத்தியம் என்று நினைத்து விட்டார். சீனித்தம்பியை அழைத்து இந்தப் பைத்தியத்தை வெளியே அனுப்பு என்றார். சீனித்தம்பி ஓடி வந்து பார்த்தார். சுவாமிகள் டாக்டரிடம் இரகசியமாக இவர்தான் சுவாமிகள் என்று கூறினார். டாக்டர் எழுந்து வந்து சுவாமிகளின் பாதங்களைத் தொட்டு கண்களில் ஒற்றிக் கொண்டார். செய்த பிழையை மன்னிக்குமாறு வேண்டினார்.

டாக்டர் சுவாமிகளை அறைக்கு அழைத்துச் சென்றார். அறைக்கதவு திறந்ததும் அந்த அம்மையார் காளிபோல் காட்சி அளித்தார். சுவாமிகளுடைய வாயில் வழிந்த வெற்றிலை பாக்குச் சேடத்தை உருட்டி அந்த அம்மையின் முகத்தில் தடவி விட்டார்.

உடனே கோர உருவம் மாறியது. 4 ஆண்டுகளாக விரிக்கப்பட்டிருந்த கூந்தலை அம்மையார் உடனே முடித்தார். அத்துடன் பைத்தியம் அகன்றது. சில நாட்களின் பின் அம்மையார் ஒருநாள் டாக்டர் வீட்டில் சாப்பிட மறுத்து விட்டார். அடுத்த நாள் காரைதீவுக்குச் சுவாமிகளிடம் டாக்டருடைய குடும்பம் அந்த அம்மையாருடன் வந்தது. டாக்டர் அந்த அம்மையாரைப் பற்றி நேற்றைக்குச் சாப்பிட மறுத்து விட்டார் என்று புகார் கூறினார். அம்மையார் எழுந்து சுவாமிகளை வணங்கினார். அந்த நேரத்தில் சுவாமிகள் முகத்தில் துப்பினார். உடனிருந்தவர்களுக்கு அசுசியாகத் தெரிந்தது. அம்மையார் தனது லேஞ்சியை எடுத்து முகத்தைத் துடைத்தார். சந்தன வாசம் கமழ்ந்தது. அம்மையார் மகிழ்வுடன் லேஞ்சியை மடித்து வைத்துக் கொண்டார். சுவாமிகள் முகம் கழுவுவதற்கு தண்ணீர் தேவையா என்று கேட்டார். அம்மையார் தேவை இல்லை என்று மகிழ்வுடன் கூறினார். அத்துடன் அவரது பைத்தியம் இருந்த இடம் தெரியாது மறைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னார் கடலில் அகப்பட்டவர்களை மீட்ட அதிசயம்

மன்னார்க் கடலில் மீன் பிடிக்க நால்வர் சென்றிருந்தனர். அவர்கள் நால்வரும் 4 நாட்களாக கடலிலிருந்து திரும்பவில்லை. எவ்விதசெய்தியும் கிடைக்காததால் வீட்டில் உள்ளவர்கள் துக்கம் கொண்டாடினர். வீட்டில் ஒரே அழுகை ஒலியாக இருந்தது.

சுவாமிகள் மன்னாருக்குச் சென்றிருந்த சமயம் இந்த வீட்டில் அழுகை ஒலிக்கக் காரணம் என்ன என்று வினாவினார். அவர்கள் உற்றதைக் கூறினார்கள். சிறிது நேரம் கழித்துச் சுவாமிகள் அந்த வீட்டிற்கே சென்றார். அவர்களிடம் உற்றதை வினாவி அறிந்தார். ஒரு தென்னைமட்டையை எடுத்து முற்றம் முழுவதும் "ஏலேலோ ஏலையிலோ" என்று கூறிய வண்ணம் தாமே தண்டு வலித்துக் கீறினார். அரை மணித்தியாலமாக இது நிகழ்ந்தது. முற்றம் முழுவதும் புழுதிக் காடாக மாறி விட்டது. வீட்டில் உள்ளவர்கள் இது ஏதோ பைத்தியம் என்று நினைத்தனர். சிறிது நேரத்தில் கடலில் காணாமல் போன நால்வரும் வந்தனர். அழுகை ஒலி மகிழ்வொலியாக மாறியது. நால்வரும் சுவாமிகளின் பாதத்தில் வீழ்ந்து வணங்கினர். இந்தச் சுவாமிகள் இல்லாவிட்டால் நாங்கள் கடலில் ஆழ்ந்திருப்போம் என்றனர். சுவாமிகள் தகுந்த சந்தர்ப்பத்தில் வந்து காப்பாற்றினார் என்று கூறியதோடு இவர் எப்படி எங்களை விட்டு இங்கே வந்து சேர்ந்தார் என்று ஆச்சரியமும் தெரிவித்தனர்.

## மாட்டிறைச்சி மல்லிகைப்பூ ஆனது

ஒருநாள் ஒரு முஸ்லீம் அன்பர் தமது மனைவியாருடன் ஆச்சிரமத்திற்கு வந்திருந்தார். மனைவியார் தீரா நோய்வாய்ப்பட்டிருந்தார். ஆச்சிரமம் வந்ததும் சுவாமிகள் அந்த அம்மையாரைக் கையில் பிடித்துக் கொண்டு அறையில் நுழைந்தார். கதவு படீரென்று சாத்தப்பட்டது. வெளியிலே கணவன் நின்றுகொண்டிருந்தார். அவரது மனோநிலை எப்படியிருக்கும்.

சுவாமிகள் வெளியே வந்ததை அந்தக் கணவன் காணவில்லை. சுவாமிகள் தமது பக்தர்களுடன் நூறு யார் தூரத்தில் பேசிக் கொண்டிருந்தார். விடியும் வரை அந்த அம்மையார் அறையினுள்ளே படுத்திருந்தார். விடிந்ததும் சுவாமிகள் கதவைத் திறந்து எழுந்து வெளியே வா என்றார். அம்மையார் எழுந்து வந்து சுவாமிகளை வணங்கினார். சுவாமிகள் வாயைத் திறக்கச் செய்து விபூதி இட்டார். கணவருடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மையார் வீடு சென்றார். அம்மையாருக்கு நோய் அகன்று விட்டது. கணவனார் அம்மையாரிடம் இரவு என்ன நடந்தது என்றார். சுவாமி கையில் பிடித்ததுதான் தெரியும். யானை ஒன்று தோன்றித் தனது கையினால் எனது உடலைத் தழுவியது. அதன் பின் ஆழ்ந்த நித்திரையாகி விட்டேன். விடியச் சுவாமி எழுப்பும்போதுதான் எழும்பினேன் என்றார்.

இதன்பின் சுவாமிகளுக்கும் அந்தக் குடும்பத்தினருக்கும் இடையில் ஒரு தொடர்பு ஏற்பட்டது. அக்குடும்பம் அடிக்கடி சுவாமிகளிடம் வந்து ஆசி பெற்றுத் திரும்புவர். ஒருமுறை தமது வீட்டிற்கு வருமாறு சுவாமிகளை அழைத்தனர். அன்பர்களின் அன்புக்குக் கட்டுப்பட்ட சுவாமிகள் அவர்கள் வீடு சென்று விருந்துண்டு திரும்பினார். இதனைக்கேள்வியுற்ற காரைதீவுவாசிகளிற் சிலர் சுவாமிகளை வழியில் வைத்து, மாட்டிறைச்சி சாப்பிட்ட சாமியும் ஒரு சாமியா என்று சொல்லி நல்ல அடிகொடுத்து அனுப்பினர். சுவாமிகள் தமது முதுகைக் கொடுத்து அடிகள் எல்லாவற்றை யும் வாங்கிக் கொண்டார். சுவாமிகளுக்கு அடித்தவர்கள் அத்தனைபேரும் ஒரு மாதத்திற்குள் இருந்த இடம் தெரியாதே மறைந்து விட்டனர். சுவாமிகள் நேராக ஆச்சிரமம் வந்தார்கள். பக்தர்களை அழைத்தார். ஒரு தட்டம் கொண்டுவரச் செய்தார். அந்தக் காக்கா வீட்டில் சாப்பிட்ட மாட்டிறைச்சி இதோ என்று வாயிலிருந்து தட்டத்தில் எடுத்தார். வாயிலிருந்து வாசனையுள்ள மல்லிகைப் பூக்கள் விழுந்தன. இருமுறை உவாந்தி எடுத்தார். இருமுறைகளிலும் வாசனை உள்ள மல்லிகைப்பூக்களே விழுந்தன.

## திமிர்வாதக்காரன் நிமிர்ந்து நடந்தமை

அக்கரைப்பற்றில் திமிர்வாதத்தால் முடக்கப்பட்ட அன்பர் ஒருவர் நீண்ட நாட்களாகக் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தார். செய்யாத வைத்தியம் இல்லை. சுவாமிகளுடைய பெருமைகளைக் கேள்விப்பட்டார். போக வேண்டும் என்ற ஆவல். எப்படிப் போவது? நடக்கமாட்டார். நிமிரமாட்டார். ஒருநாள் சுவாமிகள் அக்கரைப்பற்று வந்துள்ளதைக் கேள்விப்பட்டார். தவழ்ந்து, தவழ்ந்து, சாமி, சாமி என்று கூவிக்கொண்டே வந்தார். சுவாமிகள் அவரை நோக்கிச் சென்றார். என்னடா உனக்கு வருத்தம் என்று ஒரு பக்கத்தில் இருந்து காலால் எற்றினார். மறுபக்கம் சென்று மறுபடியும் எற்றினார். குறிப்பிட்ட அன்பர் பந்து போல் சுருண்டு சுருண்டு விழுந்தார். பார்த்துக்கொண்டு நின்றவர்கள் இப்படியும் ஒரு பரிதாபமான காட்சியா என்று பரிதாபப்பட்டார்கள். சுவாமிகளோ யாரையும் கவனிக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏய்! எழும்பி நில்லடா என்று அவருடைய கையினால் தூக்கிவிட்டார் என்ன ஆச்சரியம்! அவர் நிமிர்ந்த நிலையில நடக்கத் தொடங்கினார். எல்லோரும் அதிசயத்தில் ஆழ்ந்தனர்.

## முறிவு வைத்தியம்

கஞுவாஞ்சிக்குடியில் சரவணை என்ற அன்பர் இருந்தார். அவருக்கு ஒரு தம்பி செல்லத்தம்பி என்பது அவரது பெயர். சுவாமிகள் மிக இளவயதினராக இருந்த காலத்தில் ஒருநாள் சரவணையின் வீடு சேர்ந்தார். பைத்தியம் போலக் காணப்பட்டார். நேரம் இருட்டிவிட்டது. தான் அங்கு தங்கவேண்டும் என்று சுவாமிகள் அவரிடம் கேட்டார். சரவணையர் சம்மதித்துச் சுவாமிகள் தங்குவதற்கான ஒழுங்குகள் எல்லாம் செய்தார்.

செல்லத்தம்பி தினமும் மாடு மேய்க்கச் செல்வார். அடுத்தநாட்காலை சுவாமிகளும் அவருடன் சென்றார். சுவாமிகள் செல்லத்தம்பியுடன் செல்வதை யாரும் ஆடசேபிக்கவில்லை. காட்டில் செல்லத்தம்பிக்கு ஒரு துணை கிடைத்தது என மகிழ்ந்தனர். இருவரும் கிட்டதட்டச் சம வயதுடையவர் போலத் தோன்றியபடியினால் இருவரும் காட்டில் பல விதமான விளையாட்டுகள் விளையாடினர்.

ஒருநாள் இருவரும் புன்னைமரம் ஒன்றில் ஏறி விளையாடிக் கொண்டிருக்கையில் சுவாமிகள் மலோ பாதைக்கு என்று சிறிது தூரஞ் சென்றார். சிறிது நேரத்தில் திரும்பி வந்தார். திரும்பி வரும்போது கௌபீனத்தைத் தோளில் போட்டவாறு நிர்வாணமாக வந்தார்.இதனைக் கண்ணுற்ற செல்லத்தம்பி சுவாமிகளை அடித்துத் துரத்தினார்.

சுவாமிகள் ஓடச் செல்லத்தம்பியும் ஓடினார். சுவாமிகள் மலத்தை அள்ளி உடலெல்லாம் வீசினார். செல்லத்தம்பி மிகக் கோபம் கொண்டு துரத்தினார். சுவாமிகள் கடலில் சென்று மறைந்து விட்டார். செல்லத்தம்பிக்கு நடுக்கம் எடுத்தது. வீட்டில் என்ன சொல்வது என்ற ஏக்கம். தனது உடலைக் கழுவினார். மலம் படிந்த இடமெல்லாம் சந்தனம்போல் வாசனை வீசியது. இப்போதான் செல்லத்தம்பிக்கு அவருடைய மகிமை ஓரளவு புரிந்தது. செல்லத்தம்பி வீட்டிற்குக் கவலையுடன் மாடுகளை ஓட்டிச் சென்றார். நடந்தது நடந்தபடி கூறினார். வீட்டிலுள்ளவர்கள் செல்லத்தம்பியைக் கடிந்து கொண்டனர். "அநியாயமாக ஒருயிரைக் கொன்று விட்டாயே" என்று திட்டினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரியாக ஏழாம் நாள் செல்லத்தம்பி ஒரு மரத்தின் உயர்ந்த கொம்பில் இருந்து கடலை உற்றுநோக்கினார். என்ன ஆச்சரியம்! சுவாமிகள் கடலில் நீந்திக்கொண்டே வந்து கரையேறியதைக் கண்டார். மரத்தை விட்டு இறங்கி ஓடோடியும் சென்று அண்ணா என்னை மன்னிக்க வேண்டும்மென்று கட்டித் தழுவிக் கொண்டார். சுவாமிகளும் புன்னகை பூத்தவராய் தன்னை விடுவித்துக் கொண்டார். இருவரும் அன்று மாலை வீடு சேர்ந்தபோது அங்கு எல்லோரும் பேரானந்தம் அடைந்தனர். சுவாமிகள் தாயாருடைய ஈமக்கிரியைகள் செய்வதற்காகச் சென்று வந்ததாகப் பிற்காலத்திற் கூறினார்கள்.

ஒருநாள் சரவணையர் ஒரு மீனை வாங்கி அதனைத் துண்டு துண்டாக வெட்டி வீட்டில் கொடுக்குமாறு சுவாமிகளிடம் கொடுத்தார்கள். சுவாமிகள் அதனை ஒரு கொடியால் கட்டிக்கொண்டு வந்தார்கள். வீட்டில் பார்க்கும்போது அது ஒரு முழு மீனாகக் காட்சி கொடுத்தது. அதற்குக் காரணம் அது கட்டியிருந்த கொடிதான் என்பதை சரவணையர் அறிந்து கொண்டார். அன்று தொடக்கம் சரவணையர் ஒரு முறிவு வைத்தியராக மாறினார். அன்று தொடக்கம் இன்றுவரை அவரிடம் வந்த முறிவு நோய் எது என்றாலும் தீர்க்கப்படாமல் கைவிடப்பட்டதில்லை

## ஊணும் உறக்கமும் உண்டானால் நோயேது?

முன்னால் திருக்கோயிலில் சுகாதார உத்தியோகத்தராயிருந்த அன்பர் நாகலிங்கம் அவர்கள் தமது குடும்பத்துடனும் வேறு நண்பர்களுடனும் சுவாமியைத் தரிசிக்க சென்றிருந்தார். சென்றவர்கள் எல்லோரும் சுவாமியை வீழ்ந்து வணங்கி வரிசையில் நின்றனர். எல்லோருக்கும் விபூதி கொடுத்துக் கொண்டு வந்த சுவாமிகள் நடுவில் நின்ற ஒரு அம்மையாருக்கு விபூதி கொடுக்கவில்லை. காரணம் அந்த அம்மையார் கிறிஸ்த சமயத்தைச் சேர்ந்தவராகும்.

சுவாமிகளுடைய ஆசியினால் அன்பர் நாகலிங்கத்திற்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. மூன்று ஆண்டுகளாகியும் குழந்தை பேசவில்லை. இரவுபகலாக சொறிந்து சொறிந்து அழுது கொண்டே இருந்தது. டாக்டர்கள் பலர் பார்வையிட்டும் பலன் ஏதும் ஏற்படவில்லை. குழந்தையின் தாயாரால் இரவில் நித்திரைகொள்ள முடியவில்லை. இதனைத் தமது கணவனாரிடம் பலமுறை சொல்லிச் சொல்லி அலுத்துக்கொண்டார். கணவனார் தெய்வத்தின் மீது பாரத்தைப் போட்டு சித்தானைக்குட்டி சுவாமிகளிடம் போவோமென்று சொன்னார். பிரயாணக்கஷ்டத்தை உத்தேசித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மையார் தகுந்த பதில் அளிக்கவில்லை. 3, 4 தடவைகளில் கணவனார் நினைவூட்டியும் அம்மையாருக்குப் பிரயாணக் கஷ்டம் தலைதூக்கி நின்றது.

கஷ்டம் தாளாமல் அம்மையாரே சுவாமிகளிடம் செல்வதாக ஒப்புக்கொண்டார். திருக்கோணமலையிலிருந்து காரைதீவு ஆச்சிரமம் சென்றுசேர்ந்தனர். இவர்கள் செல்லும் போது நேரம் 6 மணி இருக்கும் சுவாமிகளைத் தரிசித்துவிட்டு, இரா உணவை நேரத்தோடு முடித்துக கொண்டு உறங்கச் சென்றுவிட்டனர். ஒருநேரமும் நித்திரையில்லாது சொறிந்து கொண்டு அழுத குழந்தை குறட்டை விட்டுத் தூங்கத் தொடங்கியது. சுவாமிக்குத் திருத்தொண்டு செய்த சிந்தாமணி அம்மையார் அவர்கள் படுத்திருந்த அறையின் பக்கத்தால் செல்லும் போது;

"**ஊனும் உறக்கமும் உண்டானால் நோயேது**" என்று தன்பாட்டில் சொல்லிக்கொண்டு சென்றார். இதைக் கேட்டுக் கொண்டே தாயும் தந்தையும் உறங்கிவிட்டனர். அதிகாலை 4 மணியிருக்கும் "அம்மன் கோயில் திருவிழாவிற்கு ஓடியாடித் திரிவாள்" என்று யாரோ கனவில் சொன்னது போன்ற வார்த்தையைக் கேட்டு விழித்தெழுந்தார் தந்தையார். அன்று தொடக்கமே குழந்தை எவ்வித நோய் நொடியுமின்றி வளர்ந்து இன்று திடகாத்திரசாலியாக வாழ்ந்து வருகின்றார்.

## சமாதி

சுவாமிகள் இன்ன நாள் இன்ன நேரம் சமாதி அடையப் போவதாக முன்னமே அறிந்திருந்தார்கள். 3 நாட்களுக்கு முன்பே கந்தன் பரியாரியை அழைத்துத் தம்மோடு வைத்துக்கொண்டார்கள். தம்மோடு நெருங்கிய பக்தர்களுக்கெல்லாம் முன்கூட்டியே சூசகமாக உணர்த்தியிருந்தார்கள். சுவாமிகள் சமாதி எய்துவதற்குச் சில நாட்களுக்கு முன்பு அன்பர் ஒருவருடைய இல்லத்தில் தங்கி இருந்தபோது முகத்திலும் தலையிலும் மயிர் நீண்டு வளர்ந்திருந்தபடியினால் அவ்வன்பர் சுவாமிகள் சவரம் செய்விப்பதற்கேற்ற ஒழுங்குகள் செய்திருந்தார். சவரத் தொழிலாளி சோப்புப்பூசி முடிந்ததும் தொழிலாளியின் கத்தியைத் தட்டிவிட்டு சவரம் செய்யாமலே எழுந்த சென்று விட்டார்கள். அன்று தொடக்கம் சுவாமிகள் சவரம் செய்விக்கவே இல்லை. சமாதி அடையப் போவதைச் சுவாமிகள் முதன்முதல் அன்பர்களுக்குக் காட்டிய அறிகுறி இதுவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்
கூட்டுறவே நாட்டுயர்வு
புத்தகத்துள் உறைவாழ்வு
பொது நூலகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐய்ராம் பிறின்ரேஸ்
351, மணிக்கூண்டு வீதி, வெலிங்டன் சந்தி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org